# தஞ்சைப்

# பெரிய கோயில்

ஏ.கே.சேஷாத்திரி M.A.,



மாமன்னன்

**இராஜராஜன்**

**படைத்த**

# வண்ண ஓவியங்களுடன்

வரும் முதல் நூல்.

**கோயில் கலைக் காட்சிகள் நிறைந்தது.**



பேரரசன் இராஜராஜ சோழன்
பிறந்த சதயத் திருநாள்
பெருவிழாவில் (26. 10. 1993),
அவன் எழுப்பிய
தஞ்சைப் பெரிய கோயிலில்
வெளியிடப் பெற்றது.

**₨ 1 5 0 -**

## நூல் உருவாக்கியோர்

| | |
|---|---|
| ஆசிரியர் | ஏ கே. சேஷாத்திரி, எம். ஏ., |
| ஓவியர் | புகழுருவாளர் மணியம்<br>டாக்டர் உபால்டு<br>ஆர். சதானந்தம் |
| உருவச்சு | அண்ணாமலை, மாம்பலம்<br>ஸ்ரீசக்தி பிராஸஸ், வடபழனி |
| அச்சுக் கோத்தோர் | டி. முருகன், அ. சுந்தரி, விஜயா,<br>மணிமேகலை, எ. ஷர்மிளா. |
| வண்ணப் படங்கள் அச்சிட்டோர் | S P. S. பிராஸஸ்,<br>முருகன் பிராஸஸ் |
| நூல் அச்சிட்டவர் | இரா. திருஞானம், சீனிவாசன் |
| அச்சகத்தார் | S. அருள், S. புகழேந்தி<br>அமுதன் அச்சகம்,<br>எம். ஜி. ஆர். நகர்,<br>சென்னை-600 078 |
| பிழைதிருத்தம் | பேராசிரியர் தஞ்சை<br>மது. ச. விமலானந்தம், எம். ஏ.,<br>சேலம் ம. அய்யாசாமி,<br>எம் ஏ., எம். எட்.,<br>சென்னை மா. சந்திரமூர்த்தி,<br>எம். ஏ., |

★


## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title of the Book | TANJAI PERIYA KOIL |
| Author | A. K. Seshadri, M.A., |
| Language | Tamil |
| Subject | Archaeology & History |
| Edition | First |
| Published | Septemper, 1993 |
| Paper used | White printing 11.6 kg<br>& Indian Art paper<br>Double Crown 1 ×8 |
| Printing Type | 12 pt. |
| No. of Pages | 208 |
| No. of copies | 1000 |
| Printer | Amudhan Achagam<br>M. G. R. Nagar,<br>Madars-600 078 |
| Binding | card Board |
| Call Number | NA. 4421131'E<br>31 N 3 |

தஞ்சைப்

# பெரிய கோயில்

ஏ. கே. சேஷாத்திரி எம். ஏ.,

வேலூர்

சேகர் பதிப்பகம்
பதிப்பகம்

சேகர் பதிப்பகம்

66/1, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை-600 078.
தொலைபேசி : 48 34 385

முதற்பதிப்பு : செப்டம்பர், 1993

● பக்கங்கள் 212 ● படங்கள் 112 ● வண்ண ஓவியங்கள் : 8 பக்.

விலை ரூ. 150.

அச்சும் அமைப்பும்

அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்.
சென்னை - 600 078 போன்: 4834325

விற்பனைக்குக் கிடைக்குமிடம் :

ஏ. கே. சேஷாத்திரி எம். ஏ.,
7, லட்சுமணப் பெருமாள் முதலியார் தெரு
நல்லான் பட்டறை
வேலூர் - 632 001

திருமுடி பதிப்பகம்

4, கிழக்குச் சன்னிதி தெரு
வில்லியனூர், புதுவை .605 110

## நன்றி!

காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு பரமாச்சாரியார் அவர்களது அருளாசியுடன் தமிழ்த்தாய்க்கு எனது முதல் காணிக்கையாக இந் நூலை உருவாக்க உடனிருந்து உதவிய மேலோரும் நண்பர்களும்

திரு டாக்டர் B. நரசிம்மையா
,, K. T. நரசிம்மன்
,, I. பாஸ்கர சர்மா
,, S. அசோக் குமார்
,, எம். எஸ். ஆர். கே. பிரசாத்
,, S. இராஜவேல்
,, T. பரமநாதன்
,, N. விஜய குமார்
,, R. மணி

மற்றும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை.



# பொருளடக்கம்


| | |
|---|---|
| பாராட்டுரை | vii |
| முன்னுரை | 3 |
| மேலும் ஒரு விளக்கு! | 6 |
| நெஞ்சில் நிறுத்துங்கள்! | 8 |
| முன்னோட்டம் | 17 |
| நுழைவாயில் | 23 |
| தஞ்சையும் அதன் வரலாறும் | 27 |
| சோழர் மரபுப் பட்டியல் | 45 |
| மாமன்னன் இராஜராஜன் | 49 |
| கோட்டையும் கோயில் அமைப்பும் | 56 |
| தஞ்சைப் பெரிய கோயில் கட்டடக் கலை | 75 |
| தனிச் சன்னிதிகள் | 97 |
| விமானம் | 103 |
| கோயில் சிற்பங்கள் | 109 |
| நெஞ்சில் நிறுத்துங்கள்! | 124 |
| சோழர்கால வண்ண ஓவியங்கள் | 127 |
| நாட்டிய முத்திரைகள் | 140 |
| கல்வெட்டுச் செய்திகள் | 142 |
| செப்புத் திருமேனிகள் | 156 |
| வரலாற்றுப் பட்டியல் | 169 |
| தஞ்சையில் காணத்தக்கவை | 179 |
| தஞ்சையைச் சுற்றிலும் | 181 |

# பாராட்டுரை

**உயர்திரு ஜி. இராமகிருஷ்ணன்**
ஐ. ஏ. எஸ்.
**ஆணையாளர்**

இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை
**சென்னை-34**

மனித குலத்தின் வளர்ச்சிக்குக் கல்வியே முதற்படியாகிறது. கல்வியோடு கலைகளும் பக்தியும் மனிதரை மகிழ்வித்து மேம்படுத்துகின்றன.

தமிழகம் கல்வி, கலை, பக்தி எனும் மூவகைக் கூட்டில் கனிந்த பண்பாட்டை வளர்த்து வாழ்ந்து வருகின்றது, திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திவ்யபிரபந்தம், கம்பராமாயணம், பெருங்கதை, பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், வில்லிபுத்தூரர் பாரதம் முதலிய தமிழ்ச் செல்வங்களின் பேரொளியில் தமிழ் மக்களின் கலை, பண்பாடு, பக்தி ஆகியவை செழித்து வளர்ந்துள்ளது.

பல நூற்றாண்டுகளில் இத் தமிழ் நாடும் தமிழ் மக்களும், படிப்படியான வளர்ச்சியும் மாற்றமும் ஏற்றமும் அடைந்து வந்துள்ளனர்.

ஆயிரமாண்டுகளுக்கு முன் சோழர்களின் தொடர்ந்த ஆட்சியில் மக்கள் பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

சோழர்கள் எண்ணற்றகோயில்களை நாடெங்கும் கட்டிப் பக்தியை வளர்த்தார்கள். கோயில்கள் வாயிலாகப் பல கலைகளையும் கலைஞர்களையும் ஆதரித்து ஊக்கமூட்டி வளர்த்ததை வரலாறு கூறுகிறது. கோயில்களும் கல்வெட்டுச் செய்திகளும் கண்முன்னே சாட்சியங்களாக விளங்குகின்றன. கலை வளர்த்த சோழர்களில், பக்தி பரப்பிய சோழர்களில் பேரரசன் இராஜராஜ சோழன் முதன்மையானவன் என்று வரலாறு புகழ்கிறது. அவன் பல ஊர்க் கோயில்களை வளர்த்துள்ளான்; பல கோயில்களைப் புதிதாகவும் கட்டியுள்ளான் என்றறிகிறோம்.

பல கோயில்களுக்கு தக்க பல அறங்களை மனமுவந்து செய்துள்ளான். கோயில் அறப்பணிகள் வாயிலாக அரிய பல கலைகளை வளரச் செய்துள்ளான்.

மாபெரும் வீரனாக விளங்கி, எதிர்த்தோரை அடக்கி வென்று, மக்கள் நல் வாழ்வு பெற, முறை பிறழாத நல்லாட்சி நடத்திக் காட்டினான். இராஜராஜன் பல சமயத்தாரையும் பல நாட்டவரையும் நன்கு மதித்தான்; அருள் மனத்தோடு உறவாடினான். காலமெல்லாம் மக்கள் கண் கலங்காமல் களிப்போடு வாழ, பல வகையிலும் நல்லாட்சியை நிறுவினான். எல்லாவற்றுக்கும் மேலாகத். தஞ்சை மா ந க ரில் செயற்கரிய செயலாக மாபெரும் பெரிய கோயிலை நன்றாகத் திட்டமிட்டுக் கட்டிவைத்தான்.

தமிழ்நாடும் பிறநாடுகளும் வியந்து போற்றுமளவுக்கு தஞ்சைப் பெரிய கோயில் கட்டிய மாமன்னன், உலக வரலாற்றில் தனி இடம் பெற்றுவிட்டான்; தனிப்புகழ் பெற்றுவிட்டான். அவனால் தமிழகமே பெருமை பெற்றது. புகழ் கொண்டது.

தமிழ்நாட்டுக்கும் தமிழர்க்கும் உலக அளவில் ஆயிரமாண்டுக் காலமாகப் பெருமை சேர்த்துவிட்ட அம் மாமன்னனை உலகமே வியந்து போற்றுகிறது; புகழ்ந்து கொண்டாடுகிறது. இராஜராஜ சோழ மன்னனால், அவன் கட்டிய இராஜராஜேஸ்வரம் எனும் பெருவுடையார் திருக்கோயிலால் தமிழகமும் தமிழரும் தலைநிமிர்ந்து செம்மாந்துள்ளனர் என்பது வரலாற்றுண்மையாகும்.

நாள்தோறும் வெளிநாட்டார் வந்து பார்த்து வியந்து புகழ்ந்து, படச்சுருளில் அதை ஒற்றிக் கொண்டு செல்கின்றனர். நம் தமிழர்கள் இன்னும் முழுமையாக பெரிய கோயிலின் உயர்வை உள்ளபடி அறிந்தனர் என்று கூறமுடியாத நிலையே உள்ளது.

முற்றக் கற்றோரும் ஆய்வாளரும் பெரிய கோயிலின் பெருமைகளை அறிந்தால் மட்டும் போதுமா? எளியோரும், சிறிதளவே கற்றோருங்கூட முறையாக அறிந்துகொள்ள வேண்டாமா?

அதற்கேற்றவாறு விளக்கம் தர உருவாக்கப்பட்டுள்ள இந் நூலை நான் கண்டு மகிழ்ந்தேன். வரலாறாகவும், சுவையான தொகுப்பாகவும், கலைகளைப் புரிந்து கொள்வதற்கேற்றவாறும் எழுதியுள்ள இந்த நூல் சிறந்த பயன் தரும் என்று நம்புகிறேன்.

பெருமுயற்சியுடன் வரைந்துள்ள வரைபடங்களும், பெருமளவு காணும் நிழற் படங்களும், மேலும் சிறப்பாக அமைந்துள்ள வண்ண ஓவியத் தொகுப்பும் பாராட்டத்தக்க புதிய முயற்சியாகும். தணியாத ஆர்வமும் தளராத ஊக்கமும் உழைப்பும் கொட்டித் தமிழுக்கு நல்லதோர் நூலைப் படைத்தளித்துள்ளார்கள்.

பழமைச்சின்னங்களைக் காக்கும்பணியில் தொண்டாற்றி வரும் வித்தகர் திரு. ஏ. கே. சேஷாத்திரி எம்.ஏ., அவர்கள், தம் அநுபவத்திறமை தோன்ற இந்நூலைப்

படைத்துள்ளதை, காலத்தாற் செய்த நற்பணியென்றே நாடு போற்றும். நானும் பாராட்டுகின்றேன். ஆசிரியர் மேலும் இத்தகைய பயன்களை நாட்டுக்கு அளிப்பார் என நம்புகின்றேன்.

சிறந்த நூல்களை வெளியிடுவதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்டவர் பதிப்பாசிரியர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம். அவரது ஆர்வத்திலும் அயரா உழைப்பிலும் சேகர்பதிப்பக வெளியீடுகளாக வந்துள்ள பலநூல்களைப் பார்த்து மகிழ்ந்து வருகிறேன். **'தஞ்சைப் பெரிய கோயில்'** எனும் இந்த அரிய நூலை அவர் சிறந்த கலைப்பேழையாக உருவாக்கி, மக்கள் பயன்பெற வெளியிட்டுள்ளார்.

அவரது நோக்கமும் ஊக்கமும் பாராட்டப்பட வேண்டியன. அவரைப் பாராட்டுகிறேன். அவரோடு இணைந்து நல்லுழைப்பைத் தந்துள்ள ஓவியர்கள், நிழற்படக்காரர், அச்சகத்தார் முதலான அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன்.

பக்தியுடன் கலைகள் வளரும் நிலையங்களாக உருவாக்கப்பட்டுள்ள நமது திருக்கோயில்களின் பெருமை நன்கு உணரப்படவேண்டும். அறநெறியும், அன்பு வாழ்வும், கலைகளும் வளர இத்தகைய சிறந்த நூல்கள் பெரிதும் உதவும்!

இந்நூல் கோயிற்கலையின் பெட்டகம்! இராஜராஜன் பல துறைகளிலும் முழுமையான கருத்துடன்நேர்முகத் தொடர்புடன் ஆட்சி புரிந்துள்ளான்; நிர்வாகம் பற்றிய பல செய்திகளை இதில் கண்டுநாம் வியப்படைகிறோம். தமிழ்ப்பெருமக்கள் இந் நூலைப் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன்



# முன்னுரை

*'கோயில்'* என்றாலே வைணவர்களுக்குத் *'திருவரங்கமும்'* சைவர்களுக்குச் *சிதம்பரமும்'* ஆகும் என்பர். ஆயின் இவர்கள் யாவருக்குமே இராஜராஜ சோழனால் தஞ்சையில் கட்டப்பட்டுள்ள கோயில் *'பெரிய கோயில்'* ஆகும். இப் பெயர் இதன் அளவினால் மட்டும் ஏற்பட்டதல்ல. ஆயகலைகள் பல அதில் ஒருங்கே அடங்கியுள்ளதாலும்தான் எனக் கூறலாம்.

கட்டடக் கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை, நாட்டியக் கலை, படிமக் கலை, இவை அனைத்துக்கும் மேலாக அழகிய தமிழில் அமைந்துள்ள கல்வெட்டுக்கலை இவை யாவும் சேர்ந்தமைந்த கலைக்கோயிலே இத் 'தஞ்சைப் பெரியகோயில்' மற்ற கோயில்களுக்கு இல்லாத 'பெரிய' என்ற அடைமொழியுடன் இக்கோயில் 'பெரிய கோயில்' என அழைக்கப்படுவதும் மேற்கூறிய சிறப்பினால்தான். வரலாற்று அறிஞர் ஒருவர் இதனினும் ஒரு படி மேலே சென்று இக் கோயிலைத் *'தேவாலய சக்ரவர்த்தி'* என அழைப்பார்.

இக்கோயில் 'உலக கலாச்சார மரபுச்சின்ன'மாக 'யுனஸ்கோ'வினால் அறிவிக் கப்பட்டுள்ளதிலிருந்தே இதன் பெருமை உலகம் போற்றி வியக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது தெளிவு.

இத்தகைய புகழ் வாய்ந்த இப்பெரிய கோயிலில், ஏழாண்டுக் காலம் பணிபுரி யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நான் என் வாழ்க்கையில் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் அதிகாரிகள் பலர் இக்கோயில் பராமரிப்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்தி யிருந்தாலும் அவர்களில் முக்கிய மாகத் தன்னை முழுதுமாக அர்ப்பணித்துக் கொண்டவர் திரு. எம். ஜி. செல்லப் பிள்ளை என்பவர் ஆவார். (தற்சமயம் இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்) அன்னாருடன் சேர்ந்து அடியவனும் இக்கோயிலின் இன்றைய உன்னத நிலைக்கு உண்மையாகப் பாடுபட்டோம் என்றால் மிகையாகாது. 1965—66இல் நான் இக்கோயிலில் பணிபுரியும் சமயம், இங்கு வருகை தருபவர்கள், தினசரி தவறாது வரும் ஒருசில உள்ளூர் பக்தர்கள் தவிர, உல்லாசப் பயணிகளையும் சேர்த்து விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய நிலையிலேயே இருந்தனர்.

இவர்களுங்கூடக் கோயிலைச் சரிவரச் சுற்றிப் பார்க்க முடியாதவாறு புதர்களும், அவற்றில் பூச்சிப் பொட்டுகளுமாக மண்டிக் கிடந்தன. இவை யாவற்றையும் அகற்றிப் பாழடைந்த நிலையை நீக்கி, அதேசமயம் அதன் பழமையை மாற்றாமல் அழகிய நிலையை உருவாக்கி அரும்பணிகள் பல செய்ததில் எங்களை நாங்கள் அர்ப்பணித்துக் கொண்டோம். கோயிலின் உட்புறம் மட்டுமன்றி விமானத்தின் உச்சி மீதும் ஏறிப் பழுது பார்த்தோம். உண்ணாழியின் உட்புறம் மட்டுமன்றி, அதன் உள்ளே வீற்றிருக்கும் பேருருவான இலிங்கத்தையும் சுத்தம் செய்து சீர் செய்தோம்.

இவ்வாறு பராமரிப்புப் பணி புரியும் சமயம், சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் என்பன போன்ற பலவும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அனைத்தையும் காட்சிப் பொருளாக்கிக் கோயிலின் தென்புறத்தில் கலைக்கூடம் ஒன்றையும் உருவாக்கிக் காண்போரின் கண்களுக்குக் கலைவிருந்தளிக்க ஏற்பாடு செய்தோம்.

கோயிலில் இத்தகைய சீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில், சேர்ந்தாற் போலவே '*சதய விழா*' என்னும் இராஜ ராஜ சோழனின் பிறந்த தின விழா ஆண்டுதோறும் கோயிலில் கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்டது. இத்தகைய நிகழ்ச்சிகளால் கோவிலுக்கு மெல்ல மெல்ல பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வரும் எண்ணிக்கை அதிகரித்தது. பின்பு நடத்தப்பட்ட 'குடமுழுக்கு விழா'வினால் மக்கள் கூட்டம் கூட்டமாக வரலாயினர்; கண்டோர் பெரிய கோயிலின் பெருமையை உணரலாயினர். ஆயினும், இதன் பெருமையை முழுதுமாக உணர்ந்து ரசித்தவர்கள் எத்தனை பேர்?

கோயிலுக்குள் நுழையும்போதே,

'இக் கோயில் விமானத்தின் நிழல் கீழே விழாது',

'இங்குள்ள நந்தி வளர்ந்து வந்ததால் அதன் பின்புறம் ஆணிஅடித்து நிறுத்தியுள்ளனர்',

'இவ்விமானத்தின் மேல் 80டன் எடையுள்ள ஒரே கல் உள்ளது'

என்பன போன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளைத்தான் இங்கு எல்லோரும் கூறி வருகின்றனர். இதைக் காணும் போதெல்லாம் என் மனம் வேதனைப்பட்டு வந்தது.

இப் பெரிய கோயிலைப் பற்றிப்பல நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், வரலாற்று அறிஞர்கள் பலரால் படைக்கப்பட்டுள்ளன. ஆயினும் இக் கோயிலைப் பற்றிய வரலாற்றுச் சான்றுடன் கூடிய அனைத்துச் செய்திகளையும் அனைவரும் அறியும் வகையில், சுருங்கச் சொல்லும் நோக்கோடு ஒரு நூல் இதுவரை அமையவில்லை என்பதே என் கருத்து.

ஆகவே, அத்தகைய வாய்ப்பினை நாமே என் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்ற எண்ணம் என்னுள் ஏற்பட்டது. அதோடு, ஏழாண்டுக்காலம் இக்கோயிலின்

பராமரிப்புப் பணியில் ஈடுபட்டு அதன் ஒவ்வொரு பகுதியையும் ஆராய்ந்து அறிந்து அதிசயித்து அனுபவித்து மகிழ்ந்த நான், அத்தகைய எனது சொந்த அனுபவத்தையும் இதன் மூலம் அனைவருடனும் பகிர்ந்துகொள்ளும் நோக்கமும் சேர்ந்ததன் விளைவே இந்நூலைப் படைக்கும் முயற்சியாக அமைந்தது.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கு இணங்க, எனது இன்ப அனுபவத்தை வாசகர்களுக்கும் பகிர்ந்து அளித்த பெருமையை இந்நூல் ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

இந் நூலைச் சிறந்த முறையிலும், வாசகர்கள் விரும்பும் வகையிலும் அமைக்கப் பெரிதும் உதவிய இந்நூலின் பதிப்பாளரும் சேகர் பதிப்பகத்தின் உரிமையாளருமான உயர்திரு வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களைப் பற்றி ஒரு சில வரிகள் கூறாவிடில் இந்நூலுக்குப் பெருமை சேராது.

இவர் பழம் கலைகளின் பெருமைகளைப் பாமர மக்களும் அறியப் பறைசாற்றி வரும் பெரியவர் ஆவார். இவர் எனனுடன் தஞ்சைப் பெரிய கோயிலை நேரில் சுற்றிப் பார்த்து மேலும் சில கருத்துக்களைச் சேர்க்குமாறு கூறி, இந்நூல் அமைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் தனி ஆர்வம் காட்டி அரிய உதவிகள் பல புரிந்துள்ளார். புகழும் பணமும் இவருக்கு இரண்டாம்தரம்; இவர் சாதனையாளர் வரிசையில் முன்னணியில் நிற்க வேண்டியவர். இவரது அறிவும், ஆற்றலும், அனுபவமும்தான் இந்நூல் சிறந்த முறையில் அமைய உதவின என்றால் அது மிகையாகாது.

ஆகவே இவருக்கு என் அன்பு கலந்த நன்றியை முதற்கண் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். இந்நூலுக்கு அன்புடன் அரிய பாராட்டுரை வழங்கியுள்ள தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை ஆணையர் திருவாளர் ஜி. இராம கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

இந் நூல் இவ்வளவு சிறந்த முறையில் அமைய கீழே குறிப்பிட்டுள்ள இன்னும் பலரும் தங்களது உழைப்பை நல்கியுள்ளனர். அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாவேன்.

இந்நூலின் அட்டைப்பட ஓவியங்களை அளித்து ஆசி கூறியவர் திரு. மணியம் செல்வன் அவர்கட்கும், ஓவியர் டாக்டர் திரு. உபால்டு, ஓவியர் ஆர். சதானந்தம், அமுதன்அச்சகத்தார் முதலியவர்க்கும் அன்பார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வரலாற்று ஆர்வலர்களும் பொதுமக்களும் மாணவர் உலகமும் இந்நூலைப் படித்து, தஞ்சைப் பெரிய கோயிலையும் அதைக் கட்டிய மாமன்னன் இராஜராஜ சோழனையும் நன்குபோற்றவேண்டும் என்பதே என் பேரவா. தமிழ்க்கலைகளைப் போற்றிப் பாதுகாப்போமாக! வணக்கம்.

வேலூர் - 632 001

ஏ. கே. சேஷாத்திரி

# மேலும் ஒரு விளக்கு !

**பதிப்புரை**

தமிழக வரலாற்றில் மாமன்னர் இராஜசிம்மன், இராஜராஜன், இராஜேந்திரன் முதலியோர் முதலிடம் பெற்றுள்ள சிறப்புக்குரியோராவர்.

இராஜசிம்மப் பல்லவனின் கற்கோயில் அறிமுகத்தைப் 'பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்' எனும் நூலில் வெளிப்படுத்தினோம்.

இராஜராஜ சோழன் செயற்கரிய பெருஞ் செயலாகத் தஞ்சையில் பெரிய கோயில் எழுப்பிப் புதுமை புரிந்தான். அக் கோயிலைப் புதுப்பித்துப் பாதுகாக்கும் பணியில் இருந்து, பின்பு செஞ்சி வேலூர் கோட்டைகளில் பணியாற்றி வருகின்ற செயல்திறனாளர், தாம் பணியாற்றிய பெருமை மிகு பெரியகோயிலின் வரலாற்றைத் திரட்டித் தந்தார். அதனை அனைவரும் ஆர்வமுடன் படித்து மகிழ்வதற் கேற்ப, எண்ணற்ற படங்களுடன் அழகிய பதிப்பாக இதனை வெளியிடுகின்றோம்.

அடுத்து, இராஜேந்திர சோழனின் கலைப்படைப்பான கங்கைகொண்ட சோழீச்சுரம் கோயிலைப் பற்றிய நூல் வெளியிடும் திட்டத்துடன் உள்ளோம்

இந்தியத் தொல்பொருள் துறையில் இளமை முதல் பணியாற்றிப் பக்குவப் பட்ட பெருந்திறல் அறிஞர் (வேலூர்) ஏ.கே. சேஷாத்திரி, எம். ஏ.,அவர்கள், தம் பட்டறிவு கொண்டு எளியோரும் படித்துப் பயன் கொள்ளும் வண்ணம் நூலைப் படைத்தளித்துள்ளார் தமிழகத்தின் பாராட்டுக்கு உரியவராகிறார். வரலாற்று ஆய்வுலகில் தமது பெயரையும் உழைப்பையும் இந் நூலின் வாயிலாக நன்கு பதிவு செய்துவிட்டார்.

பண்பு மிகும் இவ் அறிஞர்தம் பழக்கம் பல்லாண்டுகளாகப் பெற்ற நான், அவரது அரிய முதல் படைப்பாகிய இந் நூலினை வெளியிடும் பேற்றினையும் பெற்றமைக்காகப் பெரிதும் மகிழ்கின்றேன். அன்னாருக்கு அன்பும் நன்றியும் உடையேன். அவர்தம் இனிய குடும்பத்தாரும் மறவா நன்றிக்குரியவர் ஆவர்.

இதுவரை பல வரலாற்று நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் சேகர் பதிப்பகம், தனது 31 ஆம் ஆண்டு தொடக்க வெளியீடாக இச் சிறந்த வரலாற்று நூலைப் பெருமகிழ்வுடன் தமிழகத்திற்குப் படைத்து வணங்குகிறது.

வரலாற்று ஆர்வலனாகவும் வாசகனாகவும் எழுத்தாளனாகவும் பதிப்பாளனாகவும் செயல்பட்டு வருகின்ற எனக்கு அறுபதாண்டு முடிந்த நிலையில், இந்தக்

கலைப் பெட்டகத்தை உருவாக்க நேர்ந்தது பெருமையாகவும் பெருமகிழ்வாகவும் அமைந்தது. என் அறுபத் தொன்றாம் அகவையின் தொடக்க வெளியீடாக இந்த அரிய வரலாற்றை அழகுறப் படைத்து மன நிறைவு கொள்கின்றேன்.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை சார்ந்த அறிஞர்களும் அன்பர்களும் என்னிடம் பரிவுடன் பழகி வருவதை இங்கு நன்றியுடன் குறிப்பிட்டு வணங்குகின்றேன்.

இந்நூல் எழிலுடன் உருப்பெற ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியருக்கு அடுத்து ஓவியர் சதானந்தம் அவர்களை நன்றியோடு குறிப்பிட வேண்டும். இராஜராஜன் படைத்து வைத்துள்ள, அரிய வண்ண ஓவியங்களில் சிலவற்றை மிக முயன்று எழுதித் தந்த திரு. ஆர். சதானந்தம் பாராட்டுக்குரியவராவார்.

புகழுடம்புடன் கலையாகி நிற்கும் ஓவிய வித்தகர் மணியம் அவர்களின் மாபெரும் படைப்புகளை இந்நூல் முகப்பில் சேர்த்தோம். அன்னாரைப் போற்று கிறோம். அவர்தம் கலைப்படைப்பை விரும்பிக் கேட்டதும் பெருந்தன்மையோடு தந்துதவிய ஓவியக் கலையரசர் பண்புமிகு நண்பர் மணியம் செல்வன் அவர்களை நெஞ்சில் நிறுத்தி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலின் மேலட்டை முகப்போவியத்தை விரைவாகவும் வனப்பாகவும் ஆக்கித் தந்த ஓவிய விற்பன்னர் டாக்டர் உபால்டு அவர்கட்கும் எம் உளமார்ந்த நன்றியுரியது.

தொல்லியல் வல்லுநர் நண்பர் மா. சந்திரமூர்த்தி அவர்கள் அடிக்கடி தந்த அறிவுரைக்கு நன்றியுடையோம். தஞ்சைக்கு வந்து தங்கி, நிழற்படம் எடுத்துத் தந்த நண்பர் புலவர் முத்து. எத்திராசனார்க்கும் இதயங் கனிந்த நன்றி.

தஞ்சையிலுள்ள ஸ்தபதி அருண், ஓவியர் மோஸஸ் முதலியோர்தம் கலைப் பாங்கான உழைப்பைப் பெற்றதை மறவாது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

தேவையான நிழற்படங்களைத் தேடித் தந்துதவிய சென்னை கோட்டையி லுள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர்க்கும், உருவச்சு செய்தோர்க் கும், அழகாக விரைந்து அச்சிட்டளித்த அமுதன் அச்சகத்தார் எஸ். அருள், எஸ், புகழேந்தி உள்ளிட்ட அனைவர்க்கும் நன்றியுடையோம்.

நமது கல்வியுலக மாணவரும் பொதுமக்களும் இராஜராஜனின் ஆழ்ந்த கலை யார்வப் பெரும் படைப்பை உள்ளவாறு அறியவும் தமிழ்க்கலைகளை அறிந்து போற்றவும் இந்நூலும் துணைபுரியும் என்று நம்புகிறோம். கோயிலில் ஒளியேற்ற விளக்கு வைப்பது வழக்கம். முற்காலத்தில் மன்னரும் மக்களும் விளக்குவைப்பது போல் நாங்களும் இந்நூலை மேலும் ஒரு விளக்காக வைத்து வணங்குகிறோம்.

வாழ்க மாமன்னன் இராஜராஜன் புகழ்!

வளர்க தமிழ்க் கலைகள்!

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

# நெஞ்சில் நிறுத்துங்கள்...!

**வண்ண ஓவியத்தில்...**

★ முனிவர் தோற்றத்தில் உள்ள உருவத்தை கருவூர்த்தேவர் என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. தாடியும் கையில் உள்ள கமண்டலம் போன்றதும் முனிவராகக் கருதக் காரணம் என்கின்றனர். ஆனால், முனிவர் கணுக்காலில் வீரக் கழல் இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மேலும், அரசனாகக் கருதப்பெறும் உருவத்தின் தலையில் அணி இல்லை. கழுத்தணியும் எளிமையாகக் காணப்படுகிறது. ஆனால் முனிவரது ஜடாமுடியில் கனமான பதக்கம் போன்ற அணி உள்ளது. கழுத்தணியிலும் சிறப்பு மிகுதியும் காட்டப்பெற்றுள்ளது.

அரசனைக் காட்டிலும் ராஜகுரு உயர்தர ஆடையணிகளால் ஆடம்பரமாகக் காட்டப்படுவாரா என்று சிந்திக்க வேண்டும்.

பேரரசனும் இளவரசனுமாகக் கொள்வதே பொருத்தம் எனலாம்.

தில்லை நடராஜரை வணங்குவதாகக் காட்டப்பட்டுள்ள வண்ண ஓவியத்தில் தாடியுடன் இராஜராஜன் தோற்றம் தருவதைக் கருதிப் பார்க்க வேண்டும்.

கல்வெட்டுகளில் கருவூர்த் தேவர் பற்றிய கருத்து எதுவும் காணப்படாததும் சிந்திக்க வேண்டியதாகும்.

சிறிய தந்தையான மதுராந்தக சோழர் மாமன்னராக இருந்த பொழுது இராஜராஜன் (அருண்மொழி) இளவரசனாக இருந்ததைக் குறிப்பதாகக் கொள்ள லாம். அல்லது பேரரசன் இராஜராஜனும் அவனதுமாவீரமைந்தன் இராஜேந்திரன் எனவும் கருதலாம்.

O

★ நமக்கொரு கடமையுள்ளதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

இராஜேந்திரன் தன் தந்தையின் சிலைசெய்து கோயிலில் வைத்து, விழாக்காலங் களில் கடவுளுக்கு முன்னதாக உலாவரச் செய்ததாக அறிகிறோம். அந்தச் செப்புத் திருமேனி வடக்கே தனியாருடைய காட்சியகப் பொருளாய்ப் போனதாகக் கூறப் படுகிறது. வெளியே சென்ற இராஜராஜனின் அழகிய செப்பத்திருமேனியை மீண்டும் அவன் கட்டிய பெரியகோயிலில் கொண்டு வந்து சேர்ப்பதே தலையாய நற்பணியாகக் கொள்ளவேண்டும்.

O

ஈன்று புறந்தந்து

இவ்வுலகில் வாழவைத்த

என் கண்கண்ட தெய்வமான

அன்னையார்

**அலர்மேலு மங்கை**

அவர்களின் நினைவுக்கு

என் நன்றிக் காணிக்கை

**ஏ.கே. சேஷாத்திரி**



விமானத்தின் உச்சியில்
கலசத்தின் அருகில் நூலாசிரியர்

## வண்ண ஓவியங்களின் விளக்கம்

பக். 1. படம் 1. கால்களில் வீரக்கழல்களணிந்த மாமன்னரும் இளவரசரும் எனக் கருதலாம்.

படம் 2. தலைக்குமேல் கரங்கூப்பி வணங்குபவர் கருவூர்த் தேவர் (?) எனக் கருதப் பெறுகிறார். மார்போடு கரங்குவித்து வணங்குபவர் மாமன்னன் இராஜராஜன் என்பர்.

பக். 2. இராஜராஜன் தேவியர் மூவருடன் தில்லைச் சிற்றம்பலத்தில் நடராஜரை வணங்கும் திருக்காட்சி.

பக். 3. முப்புரங்களையும் சிவபெருமான் புன்சிரிப்புடன் நெற்றிக்கண் திறந்து எரித்திடும் ஒப்பற்ற காட்சியின் ஒரு சிறு பகுதி.

பக். 4-5 தேவருலகத்து ஐராவதம் எனும் யானை மீது தாளம் இசைத்துப் பாடியவாறு சுந்தரமூர்த்தி நாயனாரும் வெண்குதிரை மீது அமர்ந்துள்ள சேரமான் பெருமான் நாயனாரும் கடலின்மீது வானவெளியில் கயிலை செல்லும் காட்சி.

பக். 6. திருநாவலூரில் சிவபெருமான் வேதியராக வந்து ஓலை காட்டிச் சுந்தரரை அடிமை எனச் சொல்ல, அதைக் கேட்டோர் திகைத்துப் பலவாறு பேசுதலை உணர்த்தும் உயிரோவியத்தின் ஒரு பகுதி.

பக். 7. படம். 1 சோழமாதேவியருடன் பணிப்பெண் (கலை மடந்தையர்).

படம். 2 இராஜராஜன் தேவியருடன் தில்லை நடராசரை வணங்கும்போது அருகிலுள்ள மெய்க்காவலர் தோற்றம். (இடையில் வட்டுடை. உடலில் மெய்ப்பை எனும் திறந்த சட்டை காட்டப்பெற்றுள்ளது.)

பக். 8. பூக்கள் நிறைந்த சிறு கூடையுடன் காணப்படும் சோழர்காலப் பணிப்பெண். எழிலான தலைக் கோலமும் எடுப்பான அணி வகைகளும். அன்றைய அரண்மனைப் பணிப்பெண்களின் தோற்றத்தைப் புலப்படுத்தும் அழகோவியம்.



















அருள்மொழி வர்மன் என்ற இராஜராஜ சோழனால் உருவாக்கப்பெற்ற தஞ்சைப்பெரிய கோயில், சோழர்களது ஆட்சிக்குப் பிறகுஆட்சி புரிந்த பாண்டியர், நாயக்கர் காலங்களிலும் வளர்ச்சியும் வனப்பும் பெற்றது.

கடைசியாக மராட்டிய மன்னர்கள் காலத்திலும் பெரிய கோயில் போற்றப் பெற்றது. அவர்கள் காலத்தில் மூன்றுமுறை குடமுழுக்கு நடந்துள்ளது.

இப்பொழுதுள்ள மராட்டிய இளவரசரும் பரம்பரை அறங்காவலருமான ஸ்ரீS. பாபாஜி ராஜா போன்ஸ்லே சத்ரபதி அவர்கள், இந்தியத் தொல் பொருள் ஆய்வுத் துறையினருடன் இணைந்து இக் கோயிலைச் சிறப்புறக் காத்து வருகின்றனர்.



# தஞ்சைப் பெரிய கோயில்

## முன்னோட்டம்!

செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
    தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு
    சக்தி பிறக்குது மூச்சினிலே!

எங்கள் (செந்)

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
    இருந்ததும் இந்நாடே — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
    முடிந்ததும் இந்நாடே — அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
    சிறந்ததும் இந்நாடே — இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
    வாயுற வாழ்த்தேனோ?

....................................
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
    தழுவிய திந்நாடே! — மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
    சூழ்ந்ததும் இந்நாடே!

என்று உணர்ச்சி பொங்க இதயம் விம்மிப் பாடினான் பாரதி!

பிறந்த பொன்னாட்டின் பெருமையும் சிறந்த நம் முன்னோரின் அருமையும் நம் நெஞ்சில் நிறைந்ததால் மகிழ்ந்துள்ள நாம், அவர்களின் அரிய சாதனைகளை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்கிறோம். நம் இளைய மரபினர்க்கும் எளிய இனிய முறையில் அதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

காலக் கணக்கில் கண்டு தெளிய முடிந்தும் முடியாதவாறும் பல கட்டங்களில் நம் பழமை வரலாறு அமைந்துள்ளது. எனினும் ‘முந்தைக்கு முந்தை அதன் முந்தை நாளாக இந்தப் பெருநிலத்தின் யாழின் இசை யாவோம்’ என்று பாவேந்தர் பாரதிதாசனார் கூறியதையும் நாம் மனத்தில் கொண்டுள்ளோம்.

உலகம் காணா உயர்ந்த இலக்கியங்கள் எனும் பெரும்புகழ் கொண்ட சங்க இலக்கியங்களைத் தந்தவர் நம் தமிழர். தமிழ் மொழியை முப் பிரிவாக அமைத்தது போன்றே தமிழ்நாட்டையும் மூன்று முடிவேந்தர்கள் ஆண்டிருந்த மேன்மையை நமது புகழ்பூத்த பழந்தமிழ் இலக்கியங்கள் பலபடக் கூறுகின்றன.

காவிரி பாயும் கனித் தமிழ் நாட்டின் வளமென்ன, வாழ்வென்ன, அரசு என்ன, அறநெறி என்ன, நீதிவழி என்ன, அதன் நீங்காத புகழ்என்ன... கற்றோர் பெற்ற உயர்வென்ன, அவர் மூலம் கலைகள் பெற்ற வடிவென்ன, மன்னரும் மக்களும் உடலும் உயிரும் போல ஒன்றி வாழ்ந்திருந்த சிறப்பென்ன... ...

கல்வியும் கலைகளும் கண்போல் காத்த நம் முன்னோர் அருஞ்செயல்களை இலக்கியங்கள் எடுத்தோதுகின்றன. புராணங்கள் புலப்படுத்துகின்றன; மரபு வழிச் செய்திகளும் செயல்களும் மறவாமல் நினைவில் விளங்கி வருகின்றன.

மேலும் சில சான்றுகள் முன்னே நின்று வரலாற்றை முரசறைந்து கூறு கின்றன; முகங்காட்டி முழு விளக்கம் தருகின்றன.

கல்வெட்டுகள், செப்பேடுகள், நடுகற்கள் எனும் பல்வேறு பதிவுச் சான்றுகள் பழமையை எடுத்துச் சொல்கின்றன. இவற்றோடு அணைகளும் ஏரிகளும்கூட துணையாக வந்து நமது தொன்மைச் சிறப்பைத் தெளிவுபடுத்துகின்றன. அனைத் துக்கும் மேலான தலைமைச் சான்றாக, நமது கோயில்கள் காட்சி தருகின்றன.

மன்னர்களது மாடமாளிகைகள் மறைந்து போனவை ஏராளம். ஆனால் அவர்களால் கட்டிக் காக்கப்பெற்ற கோயில்கள், எப்படியோ தாக்குப்பிடித்து, ஓரளவாவது பழமையின் சின்னங்களாக நிலைத்து, முற்கால வரலாற்றின் உச்சி முகடுகளாய் விளங்கி வருகின்றன.

முக்கடல் சூழ்ந்த இம் முத்தமிழ் நாட்டின் பழமையை எண்ண எண்ண, எத்தனையோ உணர்வுகள் கொந்தளிக்கின்றன !

இதோ, இன்றும் அகழ்வாய்வுக்கு இடமாக விளங்கும் அலையோசை குறை யாத மாமல்லை ஒருபுறம்! பூம்புகார் ஒருபுறம்! புதுவை அரிக்க மேடும் புதிய வரலாறு காட்டும் அழகன்குளமும் வெவ்வேறு புறங்களில் !...

இன்னும் எத்தனையோ இடங்களை நாம் ஏறிட்டும் பார்க்காமல் இருக்கிறோம். எதிர் காலத்தில் அவை எத்தனை யெத்தனை வரலாற்றைப் படைக்க உள்ளனவோ?

இதோ, ஓர் பேரொளி! பூம்புகார்! இதன் புராதனப் பட்டினத்தைப் (கடலுக்குள்) புகுந்து பார்க்க முற்பட்டிருக்கிறோம்.

பட்டினப் பாக்கமும் மருவூர்ப் பாக்கமும் தட்டிலா வணிகர் ஒட்டி வாழும் உயர்ந்த திருநகர் !...

புகார்ச் சோழர், புதுமை புரிந்த சோழர்! புகழ்ச் சோழர்! எண்ணுந்தோறும் நினைவலைகள் புரண்டு புரண்டு விழுகின்றன... பூம்புகார் மட்டுமா? உறந்தை எனும் உறையூர்! அறம் வளர்த்த திருவாரூர்! பழையாறைப் பெரும்பதி! குடந்தைத் திருநகர்! ... காலந்தோறும் சோழர்களின் தலைநகரங்கள் மாறி மாறி வந்துள்ளன.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தஞ்சைமாநகர் சோழர் தலைநகரமாகியதைக் காண்கிறோம்... பின்னர், சிறிது காலம் கங்கைகொண்ட சோழபுரமும் அப் பெருமையினைப் பெற்றிருந்தது.

... நலங்கிள்ளி
நற்கிள்ளி
நெடுங்கிள்ளி
பெருநற்குள்ளி
வெள்வேற்கிள்ளி
முசுகுந்தன்
இளந்திரையன்
திருமாவளவனாம் கரிகால் வளவன்
மாமன்னன் மாவளத்தான்
கோச்செங்கட் சோழன்
விஜயாலயச் சோழ வேந்தன்!... ...

உலகை உயிர்ப்பித்து நடத்துபவன் ஒப்பற்ற ஒளிதரும் கதிரவன் அன்றோ! அதே கருத்தில் சூரியன் மரபில் தோன்றியதாகச் சொல்லிக் கொண்டனர் சோழர், சொல்லில் மட்டுமா? செயலிலும்தான்! சோழர்கள் வாழ்வியல் பண்பால். மக்களை, மக்கள் கலைகளை, பண்பாடுகளை, அறிவுச் செயல்களை, அறச் செயல்களை, அன்புச் செயல்களை காலந்தோறும் மிகக் கருத்தோடு வளர்த்து வந்திருக்கிறார்கள். அவை கதிவனின் கதிர்களைப் போல் கடல் கடந்தும் ஊடுருவிக் காணபடுகின்றன.

வளம் பல தந்த சோழர் மரபை வளவர் என்றே கூறும் வாழ்த்தொலி முழக்கங்கள் எழுந்தன. சோழர்ஆண்ட திருநிலம் சோழ வளநாடு அல்லது 'சோழ மண்டலம்' எனும் பெயர் சூட்டிக்கொண்டது.

சோழர் மரபின் தொடர்ந்த குறிப்பை, திருவாலங்காட்டுச் செப்பேடுகள் பரக்கக் கூறி மலைக்க வைக்கின்றன.

இந்த நூற்றாண்டின் ஈடற்ற பேராசிரியர், இணையற்ற நாவலாசிரியர், 'கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், 'பொன்னியின் செல்வன்' என்னும் புகழ் மிக்க சோழரின் பெருங்கதையில், தக்கதோரிடத்தில் தந்திருக்கும் சோழமரபின் தோரண வாயிலை, செந்தமிழ் ஆரத்தைச் சற்றே காண்போம்! சிந்தை குளிர்வோம்!

'சூரிய வம்சத்திலே பிறந்த மனு மாந்தாதா,
அந்த வம்சத்திலே
புறாவுக்காக உடலை அறுத்துக்கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி,
சிபிச்சக்கரவர்த்திக்குப் பின் தோன்றிய இராஜகேசரி,
அவருடைய புதல்வர் பரகேசரி,
பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காகப்
புதல்வனைப் பலிகொடுத்த
மனுநீதிச் சோழன்,
இமய மலையில் புலி இலச்சினை பொறித்த
கரிகால் பெருவளத்தான்,
நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி,
குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்,
குமராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன்,
எழுபத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த
கோப்பெருஞ் சோழர்,
இவர்கள் வழி வழித் தோன்றிய
தொண்ணூறும் ஆறும் புண்சுமந்த
பழையாறை விஜயாலயச் சோழர்,
அவருடைய குமாரர்
ஸஃய மலையிலிருந்து புகார் நகரம் வரையில்
காவேரி நதி தீரத்தில்
எண்பத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த
ஆதித்த சோழர்,
அவருடைய குமாரர்
மதுரையும் ஈழமும் கொண்டு,
தில்லைச் சிதம்பரத்தில் பொன்மண்டபம் கட்டிய
பராந்தகச் சோழச் சக்கரவர்த்தி,
அவருடைய குமாரர்
இரட்டை மண்டலத்துக்
கன்னர தேவன் படைகளை முறியடித்து
ஆற்றூர்த் துஞ்சிய

வீராதி வீரராகிய
அரிஞ்சய தேவர்,
அவருடைய குமாரர்
ஈழம் முதல் சீட்புலி நாடுவரை
ஒரு குடை நிழலில் ஆளும்
பழையாறைப் பராந்தக சுந்தர சோழச்சக்கரவர்த்தி,
அவருடைய மூத்த குமாரர், கோப் பெருமகனார்
வடக்கு மாதண்ட நாயக்க
யுவராஜ சக்கரவர்த்தி
வீர பாண்டியன் தலைகொண்ட
ஆதித்த கரிகால சோழர் விஜயம் செய்திருக்கிறார்!
பராக்! பராக்! பராக்!'

என்று சோழர் குலச் சிறப்பைக் கட்டியங் கூறுவோன் வாயிலாக முழங்குகிறார்.

இத்தகைய வீராதிவீரன் ஆதித்த கரிகாலனின் அருமைத் தம்பியான அருண்மொழியே ராஜராஜன் எனும் பட்டப் பெயர்பெற்றுப் பேரரசனாகத் திகழ்ந்தான். சோழர்களின் வரலாற்றில் பொற்காலத்தைப்பதிப்பித்தவனும் இவனே! மாபெரும் நிலப் பரப்பை வென்று ஆண்ட முதல் தமிழ்மன்னன் இராஜராஜனேயாவான். எனவேதான் 'ஜெயங்கொண்டான்' என்றும் அவன் புகழப்பட்டான்.

அவன், பெருமளவில் திட்டமிட்டுப் புதுமையாகவும் பெரியதாகவும் கட்டி வைத்த தஞ்சைப் பெரியகோயிலே, அவன் பெயரையும் புகழையும் நிலைக்கச் செய்கிறது.

அறிவுலகம், அறிவியல் உலகம், கலையுலகம் ஆகிய முத்திறத்தாரும் கண்டு போற்றி மலைத்து நிற்கச் செய்கின்றது. உலகத்து மக்களெலாம் உளம் மகிழக்கண்டு, அவனை வியந்து போற்றுகின்றனர். அவனுக்கு மட்டுமா, இப் பெருமை! அவன் பிறந்த தமிழ்ச் சமுதாயத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை! முக்கியமாகத் தஞ்சைத் தரணிக்கும் பெருமை!

வெளிநாட்டார் திரள் திரளாகத் தினந்தோறும் வந்து கண்டு பெரிய கோயிலின் தோற்றத்தில் மகிழ்ந்து மதி மயங்கி நிற்கின்றனர். நம் தமிழ் மக்களும் கண்டு மகிழ்கின்றனர். ஆயினும் வரலாற்று நோக்கும், கலை நோக்கும், கட்டடக் கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை சார்ந்த நோக்கும் நம்மிடையே சரிவரப் பரவவில்லை! பக்தியோடு பரவசப்படும் வேளையில், பரந்த கலை நுணுக்க உணர்வும் தோன்ற வேண்டும். அதுவே இக்கோயிலைக் கட்டிய மாமன்னனின் நோக்கமாகும். அவ்வகைச் சிந்தனையைப் பொதுமக்களிடமும் பொதுவாகக் கற்றோரிடமும் உருவாக்க வேண்டும் என்பது எமது பேரவா.

இந்திய அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பணியாற்றிவரும் நான், தஞ்சைக் கோயிலைச் சீரமைக்கும் பணியில் இருந்ததை இங்கே குறிப்பிடுவது

பொருந்தும். புதுப்பிப்பதும் பராமரிப்பதும் ஆகிய பணியில் இருக்கும் நான், நம் முன்னோரின் அறிவாற்றலை, கலைத்திறனை நாள்தோறும் எண்ணியெண்ணி இறும்பூதெய்தி வருகிறேன்.

நான் பெற்றுவரும் இன்ப அனுபவ வரலாற்றை நம்மைச் சார்ந்தோறும் பெறவேண்டும் என்று கருதி, தஞ்சைப் பெரிய கோயில் பற்றி இந்நூலில் சுருக்கமாக எழுதியுள்ளேன். அறிஞர் பலரின் ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றுடன் எனது அநுபவ ஆய்வுரையை இங்கே தருகின்றேன்.

பண்டைய மன்னர், கலைஞர்கள் ஆகியோர் பற்றி நான் பெருமிதம் கொண்டதை, ஓரளவு உங்களுடன் பகிர்ந்துகொள்ள முயன்றுள்ளேன். இனித் தஞ்சையை நோக்கிச் செல்வோம்.





# நுழைவாயில்

## வளவரின் வளநாடு

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சாவூர், சென்னைக்குத் தெற்கே 325 கி.மீ. தொலைவில் காவிரியின் கிளைநதிகளில் ஒன்றான வடவாற்றின் கிழக்குக் கரையிலே அமைந்துள்ளது.

தஞ்சை மாவட்டம் காவிரி நதிநீர் பாய்வதால் மிகவும் செழிப்பான பூமியாக விளங்குகிறது. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து சோழப்பேரரசின் தலைநகரமாக விளங்கிய தஞ்சாவூர், தற்சமயம் இம்மாவட்டத்தின் தலைநகரமாயும் விளங்குகிறது. இதன் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த அழகான தென்மதுரை' என்ற தொடர், இச் சோழநாட்டுக்கும் மிகப் பொருந்தும். இச் சோழமண்டலம், "சோழ வளநாடு சோறுடைத்து" என்ற புகழையும் தாங்கி நிற்கிறது.

## மீண்டும் சோழர்!

பல்லவரின் கீழ் சிற்றரசர்களாயிருந்தவர்கள் முத்தரையர். அவர்களிடம் இருந்து சங்ககாலச் சோழ மரபின் வழிவந்தனாகக் கருதப்படும் விஜயாலய சோழன் என்ற அரசன், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையைக் கைப்பற்றி, அதைத் தலைநகராகக் கொண்டு, பிற்காலச்சோழர்களின் ஆட்சியை நிறுவினான்.

அவன் வழி வந்த மாமன்னனான இராஜராஜ சோழன் என்பவனால் தஞ்சையில் கட்டப்பட்டுள்ள பெரிய கோயில், பிற்காலச் சோழர்களின் வரலாற்று

முக்கியத்துவத்தையும் அவர்தம் கலை ஆர்வத்தையும் நம் கண் முன்னே நன்கு காட்டுகின்றது.

கரந்தையிலுள்ள நரசிம்ம பெருமாள் கோயிலில் கண்டுபிடித்த பல்லவர் காலக் கல்வெட்டுகள் இரண்டும், பெரிய கோயிலிலுள்ள பழைய தனிக் கல்வெட்டு ஒன்றிலும் குறிப்பிடும் 'தஞ்சை மாமணிக் கோயில்'[1], பூதத்தாழ்வாரின் திவ்ய பிரபந்தப் பாடலில் குறிப்பிட்டுள்ள 'தாமருளும் தஞ்சை தலையரங்கம்'[2] என்ற குறிப்பும், தஞ்சையில் முற்காலத்தில் வைணவக்கோயில் இருந்ததைச் சுட்டுகின்றன. அதேபோன்று அப்பர் பெருமானின் தேவாரத்தில், 'தஞ்சை தளிக் குளத்தார் கோயில்'[3] என்ற குறிப்பும் அக்காலத்தில் சைவமும் வைணவமும் கைகோத்து பவனி வந்தமையை நமக்குக் கதை கதையாகக் கூறுகின்றன.

பெரிய கோயிலில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து புத்த விகாரமும் சமணர் பள்ளியும் இங்கு அமைந்திருந்தன என்றுரைக்கும் இராஜராஜனது கல்வெட்டு, தமிழனின் 'எம்மதமும் சம்மதம்' என்ற பரந்த கொள்கையை விளக்குகின்றது.

**மாவட்ட மாநகர்!**

இத் தஞ்சை மாவட்டம் சமீபத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன் மேற்குப்பகுதி அதே பெயரில் 'தஞ்சை மாவட்டம்' என்றும், கிழக்குப் பகுதி நாகப்பட்டினத்தைத் தலைமை இடமாகக் கொண்டு, 'காயிதே மில்லத் மாவட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது.

3488.38 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட இன்றைய தஞ்சை மாவட்டம், 9 வட்டங்களையும், 987 கிராமங்களையும், 28.38 இலட்சம் மக்கள் தொகையையும் தன்னுள் கொண்டுள்ளது.

இன்றைய தஞ்சை மாநகரம், ஒரு இரயில் சந்திப்பு இடமாக அமைந்துள்ளது. சென்னையிலிருந்து திருச்சி செல்லும் இரயில்களும், நாகப்பட்டினம், நாகூர் முதலிய இடங்களுக்கான இரயில்களும் இங்கே சந்திக்கின்றன.

---

1. தமிழ்ப்பல்கலைக் கழகம், திரு.எஸ். ராஜவேலு அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. திரு அந்தாதி 11 பா. 70
3. அப்பர் தேவாரம் பா. 8



இவ்வூர், சாலை வழியாகத் தமிழகத்தின் மற்ற எல்லா மாவட்டத் தலை நகரங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

இங்கிருந்து ஐம்பத்தைந்து கிலோமீட்டர் தூரத்தில் திருச்சிராப்பள்ளியில் முக்கிய விமான நிலையம் அமைந்திருந்தாலும், இப்போது இவ்வூரின் அருகேயும் ஒரு சிறிய விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## சுற்றியுள்ள திருத்தலங்கள்

இம் மாவட்டத்தில் அரிய பெரிய ஆலயங்கள் பல அமைந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை சோழர் காலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டுக்குள்ளாகக் கட்டப்பட்டவையாகும்.

தஞ்சைக்கு அருகில் உள்ள கும்பகோணம் எனும் திருநகர், தன்னகத்தே பல கோயில்களைக் கொண்டுள்ளது.

இவ்வூர், புகழ்பெற்ற புண்ணிய பூமியாகும். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொருமுறை வரும் 'மகாமகம்' என்ற திருநாளில் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் குழுமி, இங்குள்ள புண்ணியக்குளத்தில் புனித நீராடி மகிழ்வர்.

இவ்வூர் தவிரத்திருபுவனம், தாராசுரம், திருநாகேஸ்வரம், திருச்சேறை, திருவிசலூர், சுவாமிமலை முதலிய முக்கிய திருத்தலங்களும் சோழர் காலக் கோயில்களைத் தன்னகத்தே தாங்கி நிற்கின்றன.

## ஐயாறுகள் பாயுமிடம்

தஞ்சாவூரிலிருந்து சுமார் 11 கிலோ மீட்டர் தொலைவில், காவேரிக் கரையில் அமைந்துள்ள திருவையாறு என்ற ஊர் மற்றுமொரு புகழ் வாய்ந்த இடமாகும்.

காவிரி நதியும் அதன் கிளை நதிகளான குடமுருட்டியாறு, வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு முதலான ஐந்து நதிகளும் அருகிலமைந்த காரணத்தால், இவ்வூருக்குத் திரு ஐயாறு அல்லது திருவையாறு என்று பெயர் வழங்கப்படும்.



இங்குக் கோயில் கொண்டுள்ள சிபெருமானுக்கு 'ஐயாறப்பன்' என்று பெயர். வடமொழியில் 'பஞ்சநதீஸ்வரர்' என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது.

**பக்திப் பாவலர்**

இதுதவிர, இக் காவிரிக்கரையில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ ஸ்வாமிகளின் சமாதியும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்களில் வரும் 'பகுள பஞ்சமி' தினத்தன்று, இங்குச் சங்கீத மேதைகளும் ரசிகர்களும் கூடி இம்மகானுக்கு இசைமழை பொழிந்து, விழா நடத்தும் வைபோகம் கண் [காது] கொள்ளாக் காட்சியாகும்.

**காப்பும் நிர்வாகமும்**

இத்தகைய புகழ்வாய்ந்த சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்த மாமன்னன் இராஜராஜன், தனது தலைநகராம் தஞ்சையில் எழுப்பிய பெரிய கோயில் அல்லது பிருஹதீஸ்வரர் ஆலயம், 1950 ஆம் ஆண்டு முதலாக இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இங்கு, இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் 'முதுநிலை பராமரிப்பாளர்' அலுவலகம் அமைந்துள்ளது.

இக் கோயில் உலகக் கலாச்சார மரபுச் சின்னமாகவும் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

பெரிய கோயிலின் வழிபாடு, திருவிழா முதலியன தமிழக அரசின் இந்து அறநிலையத்துறையின் மேற்பார்வையில் உள்ளது.

இது தவிர, இக் கோயிலுக்குத் தஞ்சை மராட்டிய அரச வம்சத்தைச் சேர்ந்த பரம்பரை அறங்காவலர் அவர்களின் மேற்பார்வையும் உள்ளது.

இக்கோயிலைக் காண வருபவர்களுக்கு அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையிலான நாட்களே உகந்த காலமாகும்.

கோடையில் இங்கு வெய்யில் மிகவும் கடுமையாக இருக்குமாதலால்' அப்போது சுற்றுலாப் பயணிகளுக்குச் சற்றுக் கடினமாக இருக்கும்.



# தஞ்சையும் அதன் வரலாறும்

தஞ்சாவூர் என்பது 'தஞ்சாபுரி' அல்லது 'தஞ்சை' என்ற சொல்லில் இருந்து திரிபு பெற்று வந்த பெயராகும்.

அது 'தண் செய்' என்ற சொல்லின் மருவிய வடிவம் என்றும் தண்செய் என்பதற்குக் 'குளிர்ந்த அழகிய சோலைகளும், வளம் தரும் வயல்களும் சூழ்ந்த ஊர்' என்பது பொருள் எனவும் திரு. கு. தாமோதரன் அவர்கள் தனது 'வரலாற்றில் தஞ்சை' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

## அகழ்வாய்வுச் சான்று

தஞ்சையைப் பற்றிய தொன்மையான (கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முந்தைய) வரலாற்றை அறியப் போதுமான ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

எனினும், தஞ்சையிலிருந்து சுமார் 10 கி. மீ. தொலைவில், திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையில் அமைந்துள்ள 'வல்லம்' என்ற இடத்தில், சமீபத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே[1] இங்கு மனித நாகரிகம் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தஞ்சையும் வல்லமும்

தற்போது தஞ்சையும் வல்லமும் தனித்தனி ஊராக இருப்பினும் அக்காலத்தில் இவ்விரு இடங்களும் ஒருங்கிணைந்த வரலாற்றுச் சிறப்புற்ற இடமாக இருந்

1. Tamil Civilization Vol. 2., No. 4

திருக்க வேண்டும். அதற்கு முக்கிய காரணங்களைக் கூறலாம். ஒன்று இவ்விரு இடங்களிலுள்ள கோட்டைகளும் சமகாலத்தில் கட்டப்பட்டவையாகும்.

மற்றொன்று, 'வல்லத்துக் கோட்டையைப் பிடித்தால், தஞ்சாவூர்க்கோட்டை தானே வந்து சேரும்' என்ற, பரம்பரையாக வழக்கில் உள்ள சொல் ஆகும்.

மேலும், 'அகநானூற்றுப்' பாடல்கள்* இரண்டில், 'வல்லம்' என்ற ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர்ச் சோழமன்னன் சிறந்த படை பலத்துடன் அரையர்களைத் தோற்கடித்து விரட்டியதாக இப் பாடல்களின் மூலம் அறிகிறோம்.

ஆகவேதான் வல்லமும் தஞ்சையும் ஒன்றாக இணைந்திருக்கவேண்டும் என்றும் தஞ்சைக்குத் தென்மேற்கு வாயிலாக 'வல்லம்' இருந்திருக்க வேண்டும் என்றும் வரலாற்று ஆசிரியர் சிலர் கணித்துள்ளனர்.

## புராணக் கூற்று

தஞ்சாவூர் பெயர்க் காரணம் பற்றிப் புராணம் என்ன கூறுகிறது என்று சற்றே புரட்டிப் பார்ப்போம்.

தஞ்சன், தாரகன், தண்டகன் என்று மூன்று அசுரர்கள் இங்குத் தவம் செய்து வந்த பராசுர முனிவர் என்பவரையும் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களையும் கொடுமைப்படுத்தி வந்ததாகவும், அதனால் அம்முனிவர், துர்க்கை மற்றும் திருமாலிடம் முறையிட்டதாகவும், முனிவரின் அவ்வேண்டுதலுக்கு மனம் இரங்கி, துர்க்கையும் திருமாலும் அசுரர்களை அழித்தார்களாம்.

## அசுரர் பெயர்கள்

அவ்வசுரர்கள் இறக்கும் தறுவாயில் வேண்டிநின்ற வரத்தின்படி, அவர்கள் பெயரில் இரண்டு ஊர்கள் அமைந்தன. ஒன்று தஞ்சன் என்ற அசுரனின் பெயரில் தஞ்சன் ஊர் என்றும், மற்றொன்று தாரகன் என்ற அசுரன் பெயரில் தாரக அசுரம் என்றும் அழைக்கப்பட்டன.

அவற்றில், தஞ்சன் ஊர் தஞ்சாவூர் என்றும், தாரக அசுரம் தாராசுரம் (இவ்வூர் கும்பகோணம் அருகில் உள்ளது) என்றும் நாளடைவில் பெயர் மாற்றம் ஏற்பட்டதாகவும் வராகமான்மியம் என்ற வடமொழி நூலின் மூலம் அறிகிறோம்.

## அழகாபுரி

குபேரன், இங்குள்ள சிவபெருமானை வழிபட்டு வந்ததாகவும், ஆகவே இவ்விடத்திற்குக் குபேரனின் இருப்பிடமான 'அழகாபுரி' அல்லது 'அழகை' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

---

★ அகநானூறு பா. 336 - 356

வெண்ணாற்றங் கரையில் அமைந்துள்ள நீலமேகப் பெருமாள் என்னும் திருமாலின் கோயிலும், ஆனந்த வள்ளியம்மன்என்ற பெயர்கொண்ட துர்க்கையின் கோயிலும் மேற்கண்ட புராணக் கதையை நமக்கு உறுதிப்படுத்தும் சான்றுகளாகும்.

மேலும் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'அழகாபுரி' என்ற இவ்வூரின் பெயரும் விஜயாலயன் அமைத்ததாகக் கூறப்படும் 'நிசும்பசூதனி' என்ற துர்க்கையின் பெயரும் இப் புராணக்கதையை மேலும் உறுதிப்படுத்தும் வரலாற்றுக் குறிப்புகளாகும்.

## சோழர் ஆட்சி

வீர ராஜேந்திர சோழ தேவனின் கன்னியாகுமரிக் கல்வெட்டின்[1] மூலம் விஜயாலய சோழன் 'தஞ்சாபுரி' என்ற அழகிய நகரத்தை நிர்மாணித்ததாகவும், அது பிரம்மா முதலிய கடவுளர்களால் புகழப்பட்டதாகவும், மேலும் அது புதிதாக நிறுவப்பட்ட நகரம் என்றும் அறிகிறோம்.

சோழ வம்சத்தவர்களைச் சுமார் ஆயிரத்து ஐநூறு ஆண்டுக்காலம் அரசாட்சி செய்த மரபினர் என்றும் கூறலாம். அதாவது, கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் இவர்களது ஆட்சி நீடித்திருந்தது எனக் கொள்ளலாம்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை இம் மரபினரின் (சங்ககாலச் சோழர்களின்) புகழ்வாய்ந்த ஆட்சியினை இலக்கியங்களில் காண்கிறோம். அதற்குப்பின் அவர்களின் புகழ் குன்றி இருந்தாலும், அவர்களின் ஆட்சி மட்டும் தொடர்ந்து இருந்து வந்தது. பல்லவர்களின் கீழ் இவர்கள், கப்பம் கட்டும் குறுநில மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் ஆட்சியில் நீடித்திருந்தனர் என்று கருதலாம்.

சோழர்கள் பழையாறை அல்லது உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். கொடும்பாளூர் வேளிர் மரபினருடன் திருமண முறையில் உறவு கொண்டு வாழ்ந்து வந்தனர் என்றும் அறிகிறோம்.

தஞ்சை முத்தரையரை வென்று, சில நூற்றாண்டுகளாகப் புகழ் குன்றி இருந்த சோழ அரசை மீண்டும் நிலைநிறுத்தி, மாபெரும் பொற்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலினான் விஜயாலயன்.

இச் செய்திகளை நமக்கு திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.[2]

---

1. எ. இ. தொகுதி 18, பக். 42
2. தெ. இ. க. தொகுதி 3, எண். 205 பக்கம் 418 பா. 44

# பட்டியல்

## தஞ்சாவூர்ச் சோழமன்னர்கள் வமிசாவளி

(கி. பி. 850 முதல்)



| | | |
|---|---|---|
| ராஜமஹேந்திரன் | விக்கிரம சோழன் | 1118 — 1135 |
| 1060 - 63 | இரண்டாம் குலோத்துங்கன் | 1135 — 1156 |
| | இரண்டாம் ராஜராஜன் | 1156 — 1163 |
| | இரண்டாம் ராஜாதிராஜன் | 1163 — 1178 |
| | மூன்றாம் குலோத்துங்கன் | 1178 — 1218 |
| | மூன்றாம் ராஜராஜன் | 1218 — 1156 |
| | மூன்றாம் இராஜேந்திரன் | 1256 — 1279 |

**சங்ககாலச் சோழர்**

எனினும் இச் சோழர்களின் சரித்திரம் ஒரு தொடர்ச்சியற்ற முறையிலேயே காணப்படுகிறது.

முதலில் சங்ககாலச் சோழர்கள் என்று அழைக்கப்படும் சோழர்களின் ஆட்சி, கி. மு. 2ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 2 ஆவது நூற்றாண்டு வரை முதற் பகுதி ஆட்சியாக அமைந்தது.

கரிகாலன் என்ற புகழ்வாய்ந்த சங்ககாலச் சோழ அரசன் கி. பி. முதல் நூற்றாண்டில் (இயேசு கிறிஸ்துவுக்குச் சம காலத்தில்) ஆட்சி புரிந்ததாக வரலாறு நமக்குக் கூறுகின்றது.

கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல், காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவ மன்னன் சிம்மவர்மன் (540 - 556), தன் மகன் சிம்மவிஷ்ணுவின் உதவியுடன் சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட இடங்களைத் தனது ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தான்.

திருச்சிராப்பள்ளி மலைமீதுள்ள இயற்கைக் குகைத்தளத்தில் கண்டு பிடிக்கப் பட்ட கி. பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மகேந்திரவர்மனின் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'தஞ்சஹரக'[1] என்ற சொல் இதனை உறுதிப் படுத்துகின்றது.

'தஞ்சஹரக' என்பதற்கு, தஞ்சையைக் கைப்பற்றியவன் என்று பொருள்.

---

*1. எ. ஆர். இ. 135 1937 - 38*

## செப்பேடு செப்புவன

கத்துவால் என்னும் ஊரில் கிடைத்த செப்பேட்டின்படி, சாளுக்கிய அரசனான விக்கிரமாதித்தன் என்பவன் பல்லவ அரசர்களிடம் இருந்து, சோழ அரசின் பகுதிகளைக் கைப்பற்றினான் என அறிகிறோம்.

'கச்சியும் தஞ்சையும் கொண்ட' என்ற விருது பெற்றவனும் 'கன்னர தேவன்' என்று அழைக்கப்படுபவனுமான இராஷ்டிரகூட மன்னன் 'மூன்றாம் கிருஷ்ணன்' சோழ மண்டலத்தில் தனது உரிமையை நிலைநாட்டி இருக்கிறான்.

இவ்வாறாக, ஒன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் நிறுவப்பட்டு, நீண்ட, ஒரு தொடர்ச்சியான ஆட்சியாக, சோழ அரசு மிகவும் புகழ்பெற்ற பேரரசாக 13 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதனைப் பின்னால் தந்துள்ள சோழர் மரபுப் பட்டியலில் விளக்கமாகக் காணலாம்.

விஜயாலயன் என்ற அரசன், கோ-இளங்கோ அல்லது பெரும்பிடுகு முத்தரையர் என்ற சிற்றரசனிடம் போரிட்டு, விழுப்புண் பல பெற்று வெற்றி கொண்டு, தஞ்சையைக் கைப்பற்றிக் கி. பி. 850இல் சோழப் பேரரசை நிறுவினான். இதை,

'...மீதெல்லாம்
எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் — இருமூன்று
புண்கொண்ட வெற்றிப் புரவலனும்'

என்று 'விக்கிரம சோழன் உலா'(27 - 30) நூலும் பாடுகிறது.

விஜயாலயன் தன் ஆட்சிக் காலத்தில், தெற்கே புதுக்கோட்டை முதல் வடக்கே திருத்தணி வரை தனது ஆட்சியை விரிவுபடுத்தினான்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள இவன் பெயரிலான 'விஜயாலய சோழீஸ்வரம்' என்ற கோயிலும் திருத்தணி அருகே அமைந்துள்ள விக்கனாம்பூண்டி என்ற ஊரில் உள்ள கோயிலும், இவனது ஆட்சியின் மேற்படி வடக்கு, தெற்கு எல்லைப் பகுதிகளை நமக்கு உணர்த்துகின்றன.

## தொடர்ந்த பேரரசு

விஜயாலய சோழனால் உருவாக்கப்பட்ட இந்தச் சோழப் பேரரசு, இவனுக்குப் பிறகு வந்த, வீரமும் புகழும் வாய்ந்த அரசர் பலரால் சுமார் 450 ஆண்டுக்காலம் வரை நீடித்தது.

விஜயாலய சோழனுக்குப் பிறகு (கி.பி. 850-871) அவனது மைந்தன் முதலாம் ஆதித்தன் 'ராஜகேசரி' என்ற பட்டத்துடன் கி.பி. 871 முதல் கி.பி. 907 வரை ஆட்சிபுரிந்தான். இவனுக்குக் 'கோதண்டராமன்', 'தொண்டைநாடு பரவின சோழன்' என்ற பட்டப்பெயர்களும் உண்டு.

அபராஜிதன் என்ற பல்லவ அரசனைக் கி. பி. 885 இல் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தின் தலைவனாகவும் ஆதித்தன் திகழ்ந்தான். [1]

சுந்தர சோழனின் 'அன்பில் செப்பேடு' இவனை, 'அரசர்களில் இந்திரன்' என்றும், 'புகழும் அதிர்ஷ்டமும் இவனைத் தேடி வந்து அடைந்தன' என்றும் கூறுகின்றது.

## பள்ளிப்படைக் கோயில்

இவன் சித்தூர் மாவட்டத்தில் காளஹஸ்திக்கு அருகேயுள்ள தொண்டைமான் பேராற்றூர் என்ற இடத்தில் (கி. பி. 907) உயிர்நீத்ததாகத் தெரிகின்றது. இவனது மகனான முதலாம் பராந்தகன், இவன் உயிர்நீத்த இடத்தில், 'ஆதித்யேஸ்வரம்' எனப் பெயர்கொண்ட 'பள்ளிப்படைக் கோயிலைக்' கட்டியுள்ளான். இவ்வாறான பள்ளிப்படைக் கோயில்கள் தமிழ்நாட்டில் பல உருவானதை வரலாறு கூறுகிறது.

## பராந்தகச் சோழன்

இவனது மகன் முதலாம் பராந்தகன் (கி. பி. 907-955) ஏறத்தாழ நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது காலத்தில் கோயில் கட்டும் பணி மிகச் சிறப்பாக நடந்தது.

இவனுக்கு வீரசோழன், சாமரகேசரி, கோப்பரகேசரி முதலான விருதுகள் உண்டு.

பாண்டிய அரசன் மாறவர்ம ராஜசிம்மன் (கி. பி. 900-920) மற்றும் சிங்கள அரசன் ஆகியோரை வெற்றி கொண்டதனால், 'மதுரையும் ஈழமும் கொண்டவன்'[2] என்ற விருதும் பெற்றான். 'பண்டித வத்சலன்' என்ற இவனது மற்றொரு விருது இவன் ஓர் பேரறிஞன் என்பதை விளக்குகிறது.

## தில்லையில் பொன் வேய்ந்தவன்

ஆடல் அரசனாம் தில்லை நடராஜர் மண்டபத்திற்கு இவன் பொற்கூரை வேய்ந்தான். அதனால் இவனுக்குப் 'பொன் வேய்ந்த பெருமாள்' என்றொரு விருதுப் பெயரும் உண்டு.

---

1. தெ. இ. க. எண். 205, பக். 419. பா. 49
2. தெ. இ. க. தொகுதி 5; எண். 205

திருவாலங்காட்டுச் செப்பேடு இப் பராந்தகச் சோழனைச்,

'சிவனது பாதத் தாமரையில் உறையும் வண்டு'

என்று அழைக்கிறது.

### *யானைமேல் துஞ்சியவன்*

பிறகு இராஜாதித்தன் (கி. பி. 947-949) என்பவன் ஆட்சிக்கு வந்தான்.

தக்கோலம் என்ற இடத்தில், இவன் இராஷ்டிரகூடர்களிடம் போரிடும்போது, யானை மேல் உயிர் நீத்தான். அதனால், 'யானைமேல் துஞ்சிய தேவர்' எனப் பெயர் பெற்றான்.

### *திருவிசைப்பா இசைத்தவன்*

பின்பு, பராந்தக சோழனின் இன்னொரு மகனான கண்டராதித்தன் என்பவன் (கி. பி. 949-957) ஆட்சிக்கு வந்தான்.

இவன் மிகுந்த சிவபக்தனாக விளங்கினான். சிறந்த பக்திமானாக விளங்கிய துடன் தில்லை நடராஜர் மீது திருவிசைப்பாவும் பாடியுள்ளான்.

***'மேற்கிருந்தருளின தேவர்'*** என்ற இவனைப் பற்றிய கூற்றிலிருந்து, இவன் மேற்கு நோக்கி நோன்பிருந்து உயிர் நீத்ததாகக் கூறுவர்.

இவனது மனைவியான ***செம்பியன் மாதேவி*** என்பவள் எண்ணற்ற கோயில் களைக் கட்டினாள். மேலும் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்தல் முதலான அறப்பணிகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள்.

இதே காலத்தில் செப்புத் திருமேனிகள் செய்யும் கலையும் வளர்ந்தது.

### *அரிஞ்செயர்*

பிறகு, அரிஞ்சயசோழர் அல்லது அரிகுலகேசரி (கி. பி. 956-967) என்பவர் ஆட்சிக்கு வந்தார். இவரும் மேல்பாடிக்கு அருகே 'அரூர்' எனும் இடத்தில் போர்க்களத்தில் உயிர் துறந்தார். அதனால் 'அரூர் துஞ்சின தேவர்' என்ற புகழ் பெற்றார். திருமால்புரக் கல்வெட்டு வாயிலாக இச்செய்தியை அறிகிறோம்.

இவன் காலத்திய கல்வெட்டுகள் இவனது வீரத்தைப் புகழ்ந்து 'எதிரிகளுக்கு இவன் எமன்' என்று கூறுகின்றன.

பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்த இராஜராஜ சோழன், கி. பி. 1014 இல் இவனுக்காகப் பொன்னை நதிக்கரையில் (மேல்பாடிக்கு அருகே) பள்ளிப்படைக் கோயில் ஒன்றை எழுப்பித்து, அன்றும் இன்றும் என்றும் இவனது புகழைப் ரபட

வைத்துள்ளான். இக்கோயிலில் உள்ள சிவபிரானுக்கு 'அரிஞ்சகை ஈஸ்வரத்து மகாதேவர்' என்று பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இக் கோயிலில் உள்ள கல்வெட்டு,

ஸ்ரீ கோ ராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 2(0)ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து - பெரும்பாநாப்பாடி பள்ளிப்படையான உடையார் ஸ்ரீராஜராஜதேவர் எடுப்பித்தருளின திருவறிஞ் ஞீஸ்வரத்து மஹாதேவர்க்கு...'[1] என்று தொடர்கிறது.

### சுந்தர சோழன்

பிறகு, அரிஞ்சயனின் மகனான சுந்தர சோழன் (கி. பி. 967—973) ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு, சிறந்த வீரனாக விளங்கி இராஷ்டிரகூடர்களையும் பாண்டியர்களையும் தோற்கடித்தான்.

செவ்வூரில் நடந்த முக்கியமான போரில் தன் மகன் ஆதித்தன் துணையுடன் வீரபாண்டியனைத் தோற்கடித்து, வெற்றிவாகை சூடினான். இதைப்பற்றி 'லெய்டன் பெரிய செப்பேடு'[2], 'கரந்தை தமிழ்ச்சங்கச் செப்பேடு'[3] ஆகிய இரண்டும் குறிப்பிடுகின்றன.

இவனது 'இருங்கோளர்' படைத்தலைவனான பூதிவிக்ரமகேசரி என்பவனால், கொடும்பாளூரில் கட்டப்பட்ட 'மூவர் கோயில்' இவன் காலத்தில் அமையப்பெற்ற மிக உன்னதமான கலைப் பொக்கிஷமாகும்.

காஞ்சிபுரத்தில் தங்க மாளிகையில் சோழ மாமன்னன் சுந்தர சோழன் உயிர் துறந்ததால், 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்' என்ற பெயர் பெற்றான்.

### ஆதித்த கரிகாலன்

இவனது மூத்த மகனான, கரிகாலன் என்று அழைக்கப்படும் ஆதித்தனுக்கு, சுந்தர சோழன், தன் காலத்திலேயே (கி. பி. 964) இளவரசர் பட்டத்தைச் சூட்டினான். இரண்டே ஆண்டுகளில் இவன் வீரம் நாடெங்கும் பரவியது.

பாண்டிய அரசனைத் தோற்கடித்து இவன் 'வீர பாண்டியன் தலைகொண்ட' என்னும் விருதைப் பெற்றான்.

1. தெ. இ. க. தொகுதி 3, எண். 17
2. எ. இ. 22, 34.
3. எ. ஆர். இ. 1949, 50, பி. 49. 50.

ஆனால், அரசியல் சூழ்ச்சி காரணமாக, அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டான். சோழர்காலச் சரித்திரத்தில் இந்த நிகழ்ச்சி மட்டும் ஏனோ இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

### *மதுராந்தகன்*

சுந்தர சோழனின் இரண்டாவது மகனான முதலாம் இராஜராஜனே அடுத்து ஆட்சிப் பீடத்தில் அமரவேண்டும் என்று நாட்டுமக்கள் விரும்பினர். இராஜராஜனும் (அருண்மொழி) மிகுந்த வீரனாகவும் ஆட்சிப் பீடத்தில் அமர எல்லாவிதத்திலும் தகுதியுள்ளவனாகவும் இருந்தான்.

எனினும், தனது சிறியதந்தையும் கண்டராதித்தியன் மகனுமான உத்தம சோழன் என்கிற மதுராந்தகன் ஆட்சிப்பீடத்தில் அமர விருப்பம் கொண்டுள்ளான் என அறிந்து, ஆட்சியை விட்டுக்கொடுத்து, தான் இளவரசன் போலப் பொறுப்பை நிறைவேற்றி வந்தான்.

### *இராஜராஜன்*

இராஜராஜனின் இந்தத் தியாகச் செயலால் மக்கள் மனத்தில் மேலும் இவன் உயர்ந்து நின்றான்.

எனினும் கி. பி. 985 இல், சூழ்நிலை காரணமாக ஆட்சிப் பொறுப்பை இராஜராஜனே ஏற்றுக்கொண்டான் (கி. பி. 985 - 1014).

சோழ அரசர்களிலேயே அரசியலில் ஆழ்ந்த அனுபவமும் ஆற்றலும் நுண்ணறிவும் பெற்றவன் இராஜராஜன். வீரத்தோள்களைக் கொண்ட இவன், கலைகளைப் போற்றி வளர்த்தவனாகவும், மற்ற மதங்களையும் மதித்து நடந்தவனாகவும் திகழ்ந்தான் என்பதை அறிகிறோம்.

இவன், உள்நாட்டைத் தவிர ஈழம், லட்சத்தீவு, மாலத்தீவு முதலான வெளிநாடுகளையும் வெற்றி கொண்டு மாபெரும் அரசுக்கு அடிகோலினான்.

இவனது ஆட்சிக் காலத்தின் சிறப்பினைப் போற்றுமளவிற்கு மிகச் சிறந்த நினைவுச் சின்னமாக இவன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் அமைந்துள்ளது.

### *இராசேந்திரன்*

இராஜராஜனுக்குப் பின், அவனது மகன் இராஜேந்திர சோழன், பட்டத்திற்கு வந்தான். அவன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்துக்கு மாற்றினான்.

அதுமட்டுமன்றித் தஞ்சைக்கோயிலில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த ஸ்தபதி, சிற்பிகள் முதலானோரையும், தான் புதிதாகக் கட்டும் கோயிலுக்கு அழைத்துச் சென்று அங்கே பணிபுரிய வைத்தான்.

ஆகவேதான், தஞ்சைப் பெரிய கோயிலில் சில பகுதிகள் முடிவு பெறாமல் நின்றன போலும்!

இக் காலக்கட்டத்தில், அரேபிய யாத்ரீகரான *அல்புரூனி* என்பவர், இந்தியப் பயணத்தில் தஞ்சைக்கு வந்து பார்த்ததைக் குறிப்பு'எழுதிவைத்துள்ளார். அதில், தலைநகரமாகக் கங்கைகொண்ட சோழபுரம் ஆன பின்னர், தஞ்சை நகரம் பாழடைந்த தோற்றத்துடன் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இவனால் தனது 23ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1035) கட்டப்பட்ட 'இராஜேந்திர சோழீஸ்வரம்' அல்லது 'பிரகதீஸ்வரர் ஆலயம்' தோற்றத்தில் தஞ்சைக் கோயிலைப் போலவே அமைந்துள்ளது.

இராஜராஜ சோழனின் பட்டத்து அரசி, லோக மகா தேவியாவாள். எனினும் மற்றொரு அரசியான திரிபுவன மாதேவி யின் திருவயிற்றில் உதித்த மகனாவான், அவனது வாரிசான இராஜேந்திர சோழன்.

இராஜராஜனின் ஆட்சிக் காலத்திலேயே இராஜேந்திரன் தன் இருபத்தைந் தாவது வயதில் (கி. பி. 1012 இல்) இளவரசனாகப் பட்டம் சூட்டப்பெற்றான். தன் தந்தையின் கடற்படையை இவன் மிகத் திறமையாகப் பயன்படுத்தினான்; வெளிநாடுகள் சென்று தனது மாபெரும் ஆற்றலால் பலநாடுகள் வென்றான்.

கங்கை, கலிங்கம், தட்சிணகோசலம் முதலான வடநாடுகளை வென்று, கங்கை நீரைக் கொண்டுவந்து, புதிதாக ஏரி ஒன்றை அமைத்து அதிலே கலக்கச் செய்தான். ஆகவே 'கங்கை கொண்ட சோழன்' என்ற பெயரைப் பெற்றான்.

திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் பிரம்ம தேசத்தின் அருகே, நாட்டேரி என்ற ஊரில் அமைந்துள்ள சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டின்படி பிரம்ம தேசம் அருகே இராஜேந்திரன் உயிர் நீத்திருக்கலாம் எனத் தெரிகிறது.[1]

இவனது அரசி வீரமா தேவியாரும் இவனோடு உடன்கட்டை ஏறியதாகவும் அக் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

இராஜேந்திரனின் மகனான ராஜாதிராஜன் என்பவனின் (கி. பி. 1044ஆம் ஆண்டின்) பிரம்ம தேசம் நாட்டேரியில் உள்ள கல்வெட்டின் செய்திச்சாரத்தை இங்கே நினைவில் கொள்வது தகும்.

---

*1.* A.R.E. *1915*, No. *260*. *பகுதி* II, *பத்தி 14*.

அவ்விடத்தில் ஒரு மரத்தடியில் கூடிய அதிகாரிகள் எடுத்த முடிவின்படி, ஒரு நிலத்தை விற்று அவ் வருவாயைக் கொண்டு, அங்கு மறைந்த இராசேந்திர சோழன், அவனோடு உடன் கட்டை ஏறிய வீரமாதேவியார் ஆகிய இருவரது ஆத்மாக்களும் சாந்தியடையும் வண்ணம், ஒரு தண்ணீர்ப் பந்தல் நிறுவப்பெற்றது.

அத் தண்ணீர்ப் பந்தலை நிறுவியவன் வீரமாதேவியின் உடன்பிறந்தவனான சேனாபதி மதுராந்தகன் எனும் பரகேசரி வேளார் ஆவான்.

## இராஜாதிராஜன்

இராஜேந்திரசோழனுக்குப் பிறகு மீண்டும் தஞ்சாவூரே சோழர் தலைநகரமாகியது என்று தெரிகிறது. ஆயினும் இம் மாற்றம் நிகழ்ந்தது பற்றிய விவரம் அறிய சரியான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இராஜேந்திர சோழனின்மகனான முதலாம் இராஜாதிராஜன்(கி.பி.1018-54) நீண்ட நாள் நல்லாட்சி புரிந்தான்.

இவன் காலத்தில் மன்னார்குடியிலுள்ள இராஜாதிராஜேஸ்வரம் என்ற கோயில் கட்டப்பட்டது.

பின்னர் மேலைச்சாளுக்கியர்களுடன் ஏற்பட்ட யுத்தத்தில் இராஜாதிராஜன் இறந்தான்.

## இராஜேந்திரன் பிள்ளைகள்

பின்பு, இராஜேந்திரனின் இரண்டாவது மகனான இரண்டாம் இராஜேந்திரன் கி. பி. 1052 முதல் 1063 ஆம் ஆண்டுவரை அரசாட்சி புரிந்தான். இராஜேந்திரனின் மூன்றாவது மகனான வீரராஜேந்திரன் என்பவன் (கி. பி. 1063 - 1070) ஆட்சிக்கு வந்தான். இவன் தனது எட்டாவது ஆட்சியாண்டில் மறைந்தான். அவனுக்குப் பின் அவன்மகன் அதிராஜேந்திரன் பட்டத்திற்கு வந்தான். ஆயினும் இவனும் மிகக் குறுகிய காலத்திலேயே உயிர்நீத்தான். அதன் பிறகு ராஜகேசரி குலோத்துங்கன் என்பவன் ஆட்சிபீடத்தில் அமர்ந்தான்.

## குலோத்துங்கன்

முதலாம் ராஜேந்திரனின் மகள் அம்மங்காதேவிக்கும் கீழைச்சாளுக்கிய மன்னனான இராஜராஜ நரேந்திரனுக்கும் பிறந்தவன் இராஜேந்திரன். அவன் வேங்கியின் பட்டத்து இளவரசனாக இருந்தபோதிலும் அவனது அரசை அவன் சிறிய தந்தையான விஜயாதித்தன் கைப்பற்றிக் கொண்டான்.

இதற்கிடையில், சோழநாட்டில், வீரராஜேந்திரன் மறைவுக்குப்பின் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில், கி.பி.1070 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9ஆம் நாள் அம்மங்கா தேவியின் மகனான ராஜேந்திரன், சோழ அரசனாக, அரியணையில் அமர்ந்தான். இவனது நான்காம் ஆட்சியாண்டின் கல்வெட்டில் முதன்முறையாக இவனது பெயர் குலோத்துங்கன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவனது மற்றொரு கல்வெட்டில், சோழ அரசைத் தனது உரிமையின் மூலம் பெற்றதாகவும் அவ்வாறு பெற்றதால் தனிமையை அடைந்திருந்த காவிரி நாட்டிற்கு, தான் உற்ற துணைவனாகிவிட்டதாகவும் அவன் கூறிக்கொள்கின்றான்.[1]

'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலில் இவனை முதலாம் ராஜேந்திர சோழ தேவர் ஸ்வீகரித்துக்கொண்டு (சுவீகாரம்) தனது அரசவையிலேயே வளர்த்து வந்ததாகப் பாடப்பட்டுள்ளது.

எது எப்படி ஆயினும், சுமார் 50 ஆண்டுக்காலம் இவன் சோழப் பேரரசனாக நல்லாட்சி புரிந்திருக்கிறான்.

இவனுடைய ஆட்சிக் காலத்தில் கலைப்பணிகள் மேலும் தொடர்ந்து நடந்துள்ளன. இது தவிர, சரியான வரிவசூல் செய்வதற்கென்று நில அளவுமுறையும் நடத்தப்பட்டது என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

கி. பி. 1118 முதல் 1135 வரையிலும் குலோத்துங்கனின் மகன் முடிசூடி நல்லாட்சி புரிந்தான்.

இவனுக்குப் பிறகு அரியணையேறியவர்களில் மற்றொரு புகழ்பெற்ற அரசன் 'அனபாயன்' என்ற பெயர் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1135 -1156) ஆவான்.

இவனது காலத்தில், சைவ சமயச் சிவனடியார்கள் எனப் போற்றப்படும் 63 நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பான 'பெரிய புராணம்' சேக்கிழார் என்பவரால் தொகுத்தளிக்கப்பட்டது. வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகும்.

இவனுக்குப் பின் இரண்டாம் இராஜராஜன் என்ற ***இராஜகம்பீரன்*** (கி. பி. 1156-1163) ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் குடந்தையை யடுத்துள்ள தாராசுரத்தில் 'ஐராவதேஸ்வரர் ஆலயம்' என்ற புகழ்பெற்ற கோயில் கட்டினான்.

---

1. எ. இ. VII-5

கலைவளம் மிக்க இந்தக் கோயிலில் அறுபத்து மூன்று சிவனடியார்களின் திரு உருவங்கள் கல்சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

பிறகு இரண்டாம் இராஜாதிராஜன் என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவன் கி. பி. 1063 முதல் 1178 வரை ஆட்சிபீடத்தில் இருந்தான். அதன் பின்னர், திருபுவன வீரதேவன் என அழைக்கப்படும் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178 -1218) அரசனானான். இச் சோழ வம்சத்தின் புகழ்பெற்ற அரசர் வரிசையில் கடைசியாக வருபவன் இவனே.

கும்பகோணத்திற்கு 6 ஆவது கி. மீ. தொலைவில் உள்ள *பழையாறை* எனும் பழம்பதியில் உள்ள திருபுவனேஸ்வரம் என்ற சிவபெருமான் கோயில் இவனால் கட்டப்பட்டதாகும்.

இவனுக்குப் பின், மூன்றாம் இராஜராஜன் கி.பி. 1218 முதல் 1256 வரையும் மூன்றாம் இராஜேந்திரன் 1256 முதல் 1279 வரையும் ஆட்சி பீடத்தில் அமர்ந் திருந்தனர்.

### *கடைசிச் சோழன்*

சோழப் பேரரசின் கடைசி மன்னனான வீரசேகரன் என்பவன் 'நாகம நாயகன்' என்ற அரசனால் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. அளவற்ற புகழுடன் ஆட்சி செய்த இச் சோழ வம்சம் இவனுடன் முடிவுற்றது. [1]

இதற்கிடையே சோழ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டவன் பாண்டிய மன்னனே. அவன், ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (கி. பி.1251 - 1270) என்பவன் ஆவான்.

பின்பு, 14 ஆம் நூற்றாண்டில் வந்த அலாவுதீன் கில்ஜி என்ற டில்லி சுல்தானின் படைத் தலைவனான மாலிக்காபூரின் தென்னிந்தியப் படையெடுப்பினால் சோழமண்டலம் மிகவும் மோசமான நிலையை அடைந்தது கலைகளின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எனினும் விஜயநகரப் பேரரசின் (14 ஆம் நூற்றாண்டு)தோற்றத்தினால் அது மீண்டும் மெல்லத் தழைத்தோங்கியது.

---

1 The Great Temple of Thanjore - page 73
-sri J. N Somasundaram

## தஞ்சாவூர் நாயக்க மன்னர் பரம்பரை

*தஞ்சாவூர் நாயக்க மன்னர் மரபு*
*(கி. பி. 1549 — 1674)*

சிவப்பா — மூர்த்தியம்மா
*1549 — 1572*

*அச்சுதப்ப நாயக்கர் 1572 — 1614*

*ரகுநாத நாயக்கர் 1614 — 1630*

*விஜயராகவ நாயக்கர் 1662*

*மன்னாரு 1662* | *செங்கமலதாஸ் (இளவரசன்) 1662 — 1674*

விஜயநகரப் பேரரசர் அச்சுத தேவராயரின் பிரதிநிதியான செவப்ப நாய்க்கன் (கி. பி. 1549-1572) சிற்றரசனாகத் தஞ்சையை ஆளத் தொடங்கினான். அவனே தஞ்சை நாயக்கர் வம்சத்தை ஏற்படுத்தினான். இவன் திருவண்ணாமலையைச் சேர்ந்தவன் எனக் கருதப்படுகிறான். இவன் காலத்தில்(கி.பி.1570) நாகப்பட்டினத்திற்கு வந்த சீஸ்ஃபெட்ரிக் என்ற போர்த்துக்கீசிய சுற்றுலாப்பயணி, தஞ்சை நாயக்கர் ஆட்சியை மிகவும் புகழ்ந்து பாராட்டிக் குறிப்பு எழுதி வைத்துள்ளார். இவன் காலத்திலும் இவனுக்குப் பிறகு அச்சுதராயன், ரகுநாத நாயக்கன் ஆகிய அரசர்கள் காலத்திலும், கோயில்கள் பல விரிவுபடுத்தப்பட்டன. புதியகோயில்களும் தோன்றின.

தமிழகமெங்கும் வானுயர்ந்த கோபுரங்களும், திருமதிற்சுவர்களும், திருச்சுற்று மாளிகைகளும், அழகிய சிற்பங்களைக்கொண்ட மண்டபங்களும், பல கோயில்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டன. இவற்றுள் முக்கியமாக வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, ஸ்ரீசைலம், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் முதலிய இடங்களிலுள்ள கோயில்கள் அடங்கும். இவை தவிரப் புதிய கோயில்கள் பலவும் கட்டப்பட்டன.

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி வீழ்ச்சியுறத் தொடங்கியது.மராட்டிய மன்னன் ஷாஹாஜியின் மகனான வெங்காஜி என்ற எகோஜிராஜா (கி. பி. 1675-1687) என்பவன் தஞ்சையில் மராட்டியர் ஆட்சியை ஏற்படுத்தினான். இவன் மாவீரன் சத்ரபதி சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரன் ஆவான்.

### *தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் பரம்பரை*
### (கி. பி. 1675-1888)

ஷாஹாஜி
(1) ஜீஜிபாய் — (2) துக்காபாய் மொஹிதாய்

- சாம்பாஜி
- சிவாஜி (மராட்டிய மன்னன்)
- எகோஜி (என்ற) வெங்காஜி (தஞ்சாவூரில் மராட்டிய அரசை நிறுவியவர்) 1674—5 — 1687

எகோஜி (என்ற) வெங்காஜி:

- இரண்டாம் ஷாஹாஜி 1687—1710
- சரபோஜி 1711—1727
- துகாஜி 1728—1736

(தலைமைப் போட்டிக்குக் குழப்பமான காலம் 1735—39)

துகாஜி:

- சையாஜி 1739
- பாபா சாஹேப் 1735—36 — சுஜரண்பாய் 1736

பிராதாப்சிங் 1740 — 1763

- துல்ஜாஜி 1764—1787
- அமர்சிங் 1787—1798

துல்ஜாஜி:
(தத்து எடுத்த மகன்)
இரண்டாம் சரபோஜி — (ஆங்கிலேயர்வசம் நாட்டை ஒப்படைத்தவர்) 1787—1832

சிவாஜி 1832 — 1855

- ராஜாசபாய்
- விஜயமோகனா முக்தாபாய்

வெங்காஜிக்குப் பிறகு சகாஜி,முதலாம் சரபோஜி, துகோஜி முதலானவர்கள் கி. பி1728 முதல் கி. பி. 1736 வரை ஆட்சி புரிந்தனர். பிறகு பிரதாப்சிங் என்பவன் (கி. பி. 1740-1763) ஆட்சி செய்தான்.

பிறகு இரண்டாம் சரபோஜி (கி. பி. 1787—1833) ஆட்சி புரிந்தான். இவர் காலத்தில்தான் தஞ்சை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சரபோஜி மன்னர் பல துறைகளில் சிறந்த அறிஞராக விளங்கினார். அவர் சிறுவயது முதலே அவரது தந்தையின் நண்பரும் டேனிஷ் மிஷன் பாதிரியாருமான ‘ரெவரன்ட் ஸ்குவார்ட்ஸ்’ என்பவரின்பால் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவரிடம் கல்வியும் பயின்றார். தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் இவரால் மிகவும் விருத்தியடைந்தது. இவர் பனாரஸ் சென்றிருந்த சமயம் அங்குள்ள பண்டிதர்களைக்கொண்டு, வடக்கில் இருந்த பல சமஸ்கிருத நூல்களைப் பிரதி எடுக்கச் செய்து, தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் சேர்த்தார்.

இவரது இவ்வரிய பணியினைப் பாராட்டும் வகையில், இந்நூல், நிலையம் இவரது பெயரால் ‘தஞ்சாவூர் மஹாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால் என வழங்கிவருகிறது.

மராட்டியர் ஆட்சிக்காலத்திலும் (கி. பி. 1675—1886) தஞ்சையில் ஓவியம், நாடகம், சங்கீதம் முதலிய நுண் கலைகள் வளர்ந்தன. கட்டடக் கலையும் கூடவே வளர்ந்தது. எனினும் சோழர்காலம் மற்றும் நாயக்கர் காலத்தை ஒப்பிடும்போது, இவர்கள் காலத்தில் இக்கலைகளின் வளர்ச்சி மிகவும் குறைவே என்று கூறலாம்.





# சோழர் மரபுப் பட்டியல்

தமிழக வரலாற்றில், கி. பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை, சோழர்கள் ஆட்சியின் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது.

ஆட்டமில்லாத அரசியலும், அமைதியான மக்கள் வாழ்க்கையும், அபரிமித மான பொருளாதாரமும், இவை அனைத்திற்கும் மேலாக, ஆயகலைகளின் வளர்ச்சியும் அவர்களின் காலத்தைப் பொற்காலமாக்கின என்றால் மிகையாகாது.

இராஜேந்திர சோழனின் ஆறாம் ஆட்சியாண்டுக் காலத்திய திருவாலங் காட்டுச் செப்பேடு, சோழர்கள் சூரிய வம்சத்திலிருந்து உதித்தவர்கள் எனக் கூறுகிறது.

செப்பேடுகளில் அம் மன்னர்களது மரபுவழியை ஒரு பெரிய பட்டியலாகவே பாட்டுவரிகளில் தீட்டப்பெற்றுள்ளது. அப்பட்டியலையும் அடுத்த பக்கங்களில் காண்போம்.

## முதலாம் இராஜேந்திர சோழனின் ஆறாவது ஆட்சி(கி. பி. 1019, 20) யாண்டின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளவை.

### *சோழர் மரபுப் பட்டியல்*

(தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி: 3, பகுதி 205)

| பாடல் வரிசை எண். | மன்னர் வரிசை | மன்னர் பெயர் | பிற செய்திகள் |
|---|---|---|---|
| 4 | 1 | சூரியன் | |
| | 2 | மனு | |
| 5 | 3 | இட்சவாகு | |
| 6 | 4 | விகுக்கஷி | |
| 7 | 5 | புரஞ்செய | |
| 8 | 6 | காகுத்தன் | |
| 9 | 7 | காட்சிவத்(தன்) | |
| 10 | 8 | அரியமான் | |
| 11 | 9 | அனலப் பிரதாபன் | |
| 12 | 10 | வேணா | |
| 13 | 11 | பிருது | |
| 14 | 12 | துந்துமாறன் | |
| 15 | 13 | யுவனாஸ்வா | |
| 16 | 14 | மாந்தாத்திரி | |
| 17 | 15 | முசுகுந்தன் | |
| 18 | 16 | வல்லபன் | |
| 19 | 17 | பிருதுலாட்சன் | |
| 20 | 18 | பார்த்தீப சூடாமணி | |
| 21 | 19 | தீர்க்க பாகு | |
| 22 | 20 | சந்திர ஜித்தன் | |
| 23 | 21 | சான்ஸ்கிருதி | |
| 24 | 22 | பஞ்சாபன் | |
| 25 | 23 | சத்யவிரதன் (ருத்ரஜித்தன்-1) | |
| 26 | 24 | சிபி | |
| 27 | 25 | மருத்தன் | |
| 28 | 26 | பாண்டவர்கள் | |

| பாடல் வரிசைஎண். | மன்னர் வரிசை | மன்னர் பெயர் | பிற செய்திகள் |
|---|---|---|---|
| 29 | 27 | துஷ்யந்தன் | |
| 30 | 28 | பரதன் | |
| 31 | 29 | சோழன் (சோலார்) | |
| | 30 | சோழவர்மன் | |
| | 31 | ராஜகேசரி வர்மன் | |
| | 32 | பரகேசரி | |
| 32 | 33 | (பெயரில்லை) | |
| 33 | 34 | சித்திரரதன் | |
| | 35 | சித்தராஸ்வன் | |
| | 36 | சித்திரதன்வன் | காவிரியைக் கொண்டவன் |
| 34, 35 | | | |
| 36 | 37 | சுரகுரு (மிருத்யு ஜித்தன்) | |
| 37 | 38 | சித்ரரதன் (வியாக்ரகேது) | |
| 38 | 39 | நரேந்திரபதி | |
| | | திரேதாயுகம் முடிந்தது | |
| 39 | 40 | வசு (உபரிசதன்) இந்திரனிடம் தேர் பெற்றவன் | |
| 40 | 41 | விஸ்வஜித்தன் | |
| | | துவாபரயுகம் முடிவு கலியுகம் | |
| 41 | 42 | பெருநற்கிள்ளி | |
| 42 | 43 | கரிகாலன் | காஞ்சியில் பொன் மாளிகை கட்டியவன் காவிரியின் குறுக்கே கல்லணை கட்டியவன். (கரி - விரோதி, காலன்) - எமன் விரோதிகளின் எமன் என்ற பொருளும் உண்டு. சிறுவயதில் ஒருகால் கருகிப்போனதால் கரிகாலன் என்ற மற்றொரு கூற்று உண்டு. |
| 43 | 44 | கோச்செங்கண்ணன் (செங்கணான்) | |
| 44-46 | 45 | விஜயாலயன் | கி. பி. 850இல் தஞ்சையைக் கைப்பற்றித் தலைநகராக்கி, நிசும்பசூதனி-துர்க்கைக்குக் கோயில் எழுப்பினான். இதுவரை சோழர்களின் தலைநகர் உறையூர் (அ) பழையாறை என்று வரலாற்று வல்லுநர் கூறுவர். |

| பாடல் வரிசைஎண். | மன்னர் வரிசை | மன்னர் பெயர் | பிற செய்திகள் |
|---|---|---|---|
| 42-49 | 46 | ஆதித்தவர்மன் | |
| 50 | 47 | பராந்தகன் I. | (கி. பி. 907 - 955) |
| 51-53 | | | |
| 54 | 48 | முதல்மகன் ராஜாதித்தன் | (கி. பி. 947 - 949) தக்கோலப் போர் மற்றும் இராஷ்ட்டிரகூடர் போர் யானைமீது துஞ்சியவன். |
| | 49 | இரண்டாவது மகன் கண்டராதித்தன் | (கி. பி. 949 - 957) |
| 55 | 50 | மூன்றாவதுமகன்(அல்லது) அரூர் துஞ்சிய தேவர் | (மேல்பாடிக்கு அருகே - இராஷ்டிரகூடருடன் போர்.) (கி. பி. 956 - 967) |
| 56 - 60 | 51 | இரண்டாம் பராந்தகன் சுந்தர சோழன் | (பராந்தகனின் தம்பி. கி.பி. 956 - 73) |
| 61 - 63 | | அருள்மொழிவர்மன் | இராஜராஜன் பற்றிய செய்திகள் |
| 64 - 66 | | | சுந்தரசோழன் மரணம்பற்றிய செய்தி |
| 67 - 68 | | | ஆதித்த கரிகாலன், பாண்டியரால் கொல்லப்பட்டதாகக் கூறும் செய்தி |
| 69 - 70 | 52 | மதுராந்தக உத்தமசோழன் | (கி. பி. 969 - 985) |
| 71 | | | இவன் சிவபக்தன் என்னும் செய்தி |
| 72 | 53 | அருள்மொழித்தேவன் (முதலாம் ராஜராஜன்) | |
| 73 - 84 | | | இராஜராஜனின் செயல்கள், புகழ் பற்றியது |
| 85 - 98 | | | இராஜராஜனின் மற்றொரு மகனான மதுராந்தகன் எனும் இரண்டாம் உத்தம சோழன் செய்த போர்கள் பற்றியது. |
| 99 - 113 | | இராஜேந்திர சோழன் | அவன் காஞ்சி வருகை; சாளுக்கியருடன் போரிடல்; கங்கை படையெடுப்பு பற்றியது. இவனுக்கு விக்கிரம சோழன் எனும் பட்டப்பெயர் சூட்டுதல் (கி. பி. 1012.) |
| 114 | | | இவன் சந்திர வம்சத்தைச் சேர்ந்த இந்திர ரதனை வென்ற செய்தி |
| 115-136 | | | இவன், திருவாலங்காட்டுக் கோயிலுக்குப் (கி. பி. 1020) பழையனூர் எனும் ஊரைத் தானம் அளித்தல். |



# மாமன்னன் இராஜராஜன்

சோழர் குலத்தின் வழிவந்தவர்களில் ஒருவனான சோழவர்மன் என்ற அரசனின்மகன், இராசகேசரி வர்மன் ஆவான். இவனது மகன் பரகேசரி என்பவன்.

இந்த இரண்டு பெயர்களும் இவர்களுக்குப் பிறகு இம் மரபில் தோன்றிய ஒவ்வொரு அரசருக்கும் முடிசூட்டும் தறுவாயில் பட்டப்பெயர்களாக மாறி மாறி, அவர்களின் சொந்தப்பெயர்களுடன் சேர்ந்தமைந்தன.

இவ் வழக்கத்தின்படியே சோழ மரபில் வந்த மன்னன் விஜயாலயன் என்பவருக்குப் பரகேசரி என்ற பட்டப்பெயரும், இராஜராஜனுக்கு இராஜகேசரி என்ற பட்டப் பெயரும் அமைந்தன.

## புலியைப் பயந்த பொன்மான்

சுந்தர சோழனின் பட்டத்தரசி வானவன் மாதேவி என்பவள் ஆவாள். இவள் திருக்கோவலூர் மன்னன் மலையமானின் திருமகளார்! சோழப் பேரரசின் மிகச் சிறந்த மன்னர் மன்னரான இராசராசனை ஈன்றெடுத்த பேறு பெற்றவளும் இவளே.

**'திண்திறல் கண்டன் செம்பியர் பெருமான்**
**செந்திரு மடந்தைமன் ஸ்ரீஇராசராசன்**
**இந்திர சமானன் இராச சர்வஞ்ஞனெனும்**
**புலியைப் பயந்த பொன்மான்......**
**சுந்தரசோழன்...திருப்புய முயங்குந் தேவி...**

என்னும் கல்வெட்டுத் தொடர்களிலிருந்து இராசராசனின் பிறப்பை நாம் அறிகிறோம்.

ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் உதித்த இம்மாமன்னன், சோழர் சரித்திரத்திலேயே மிகச் சிறந்த வீரனாகக் காட்சி அளிக்கிறான்.

இராஜராஜ சோழனின் இளமைப்பெயர் 'அருண் மொழி வர்மன்' என்றும் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகிறது.

அருள்மொழி வர்மன் பிறந்தவுடன், ஆதிசேஷனின் தேவியர்கள், 'தங்களின் கணவன் சுமக்கும் பூமிபாரத்தை ஏற்றுக்கொள்ள இவன் அவதரித்துள்ளான்' என மகிழ்ச்சியில் திளைத்ததாகவும் திருவாலங்காட்டுச் செப்பேடு இவன் பிறப்பைப் பெருமையாகக் கூறுகிறது.[1]

**'உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் கோயிலில்**
**எழுந்தருளும் திருச்சதயத் திருவிழாப் பன்னிரண்டும்...**
**திருவிழா எழுந்தருளின தேவர்க்குத் திருவமுது செய்ய**
**ஆடவல்லானால் ...... பதக்கும்'**

*(தெ. இ. க. தொகுதி, 2 எண் 26, பக். 127)*

'ஸ்ரீராஜராஜ தேவர்க்கு **யாண்டு** 27...**திருவெண்காடு உடையார்க்கு**
... **திருவவதாரம் செய்தருளின ஐப்பிகைத் திங்கள் சதயத் திருநாள்**
**ஞான்று தீர்த்தமாடவும்...ஆறுநாள் திருவிழாப் போதவும்...**

*(தெ. இ. க. தொகுதி 5, எண். 979, பக். 367)*

**'சதய நாள்விழா வதியர்மண்டலம்**
**தன்னில் வைத்தவன்'**

*— கலிங்கத்துப்பரணி 8. 24*

### *திருமுறை கண்ட சோழன்*

தில்லை நடராஜர் கோயிலில், கரையான் புற்றினால் மூடப்பட்டு அழியக் கூடிய நிலையில் இருந்த, நாயன்மார்களால் பாடப்பட்ட 'திருமுறை' என்ற சைவ சமய நூலைக் காப்பாற்றினான். அதனைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியின் உதவியுடன் தொகுத்து, அளித்தான்.

தேவாரப் பதிகங்களைச் சிவாலயங்களில் ஓதச் செய்து, சைவ சமயத்திற்குப் பெருந்தொண்டு புரிந்தான் இராஜராஜன். அதனால் 'திருமுறை கண்ட சோழன்' என்ற பட்டப்பெயரையும் இராஜராஜன் பெற்றான். (திருமுறைகள் இவன் காலத்தில் தொகுக்கப்பெறவில்லை என்றும் ஒரு கருத்து உள்ளது.)

---

*1. தெ. இ. க. பா. 111. 7. 19*

அருள்மொழிக்குத்தான் பட்டம் சூட்டப்படவேண்டும் என்ற நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அரசாட்சியைத் தன் சிறியதந்தையான மதுராந்தகனுக்கு விட்டுக்கொடுத்து, அம் மக்களின் மனதிலே மேலும் உயர்ந்து, நீங்காத இடம் பெற்றான் இவன்.

தனது மூத்த சகோதரி குந்தவைப் பிராட்டியாரிடம் இராஜராஜன் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தான்.

தான் கொடுத்த நிவந்தங்களைத் தவிர, தனது சகோதரி, அரசியர் மற்றும் யார் கொடுத்தாலும் அவற்றையும் கல்வெட்டில் பொறிக்கும்படி இவன் உத்தரவு பிறப்பித்ததிலிருந்து இவனது பெருந்தன்மை நமக்கு நன்றாகப் புலப்படுகிறது.

இவன் பலநாடுகளையும் வென்று தனது ஆட்சியின்கீழ்க் கொண்டு செங்கோல் செலுத்தினான். எனவே மன்னர் மன்னன் என்று பொருள்படும் இராஜராஜன் என்னும் சிறப்புப் பெயர் இவனுக்கு உண்டாயிற்று. நாளடைவில் இயற்பெயர் மறைந்து, இராஜராஜன் என்னும் பட்டப் பெயர் நிலையாயிற்று. இப்பெயர் இவனது பத்தொன்பதாவது ஆட்சியாண்டுக் காலத்திய கல்வெட்டுகளில் காணப் படுகிறது.

இவன் நரபதி, அசுவபதி, கஜபதி என்பன போன்ற சிறப்புப் பெயர்களையும் உடையவன். இவை தவிர, அவனுக்கு வேறு பல பட்டப் பெயர்களும் உள்ளன என்று பல கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம். அதனை நூலின் பிற்பகுதியில் உள்ள வரலாற்றுப் பட்டியலில் கண்டு இன்புறலாம்.

### *புத்த விகாரத்திற்கு நிவந்தம்*

இராஜராஜனின் ‘லெய்டன்’ பெரிய செப்பேட்டின் மூலமாக, நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டிருந்த ‘இராஜராஜப் பெரும்பள்ளி’ என்றழைக்கப்பட்ட ‘சூடாமணி விஹாரம்’ என்ற புத்த விகாரத்திற்கு, ஆனைமங்கலம் என்ற கிராமமே இராஜராஜ சோழனால் தானமாக அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. இதிலிருந்து இம் மன்னனின் சமயச்சார்பற்ற தன்மையையும் நாம் அறிய முடிகின்றது.

### *கொடை பல வழங்கிய கோமான்*

இராஜராஜன் தன்பெயரால் பலநிவந்தங்களை அளித்துள்ளான். ஆண்டுக்குச் சுமார் 1, 20, 000 கல நெல் வருவாயாக வரக்கூடிய நிலத்தையும், 4000 க்கும் மேற்பட்ட கறவைப்பசுக்களையும், 4000 க்கும் மேற்பட்ட ஆடுகளையும் கொடை யாகக் கொடுத்துள்ளான். இதிலிருந்து இவனது கொடைத்தன்மையையும் அறச் சிந்தனையையும் நாம் தெரிந்துகொள்கிறோம்.

**உலகளந்தான்!**

கி. பி. 1001 இல் தனது ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் முழுவதையும் சீராக அளக்கச் செய்தான். இப்பணி குரவண் உலகளந்தான் இராஜராஜ மாராயன் என்பவன் தலைமையில் நடைபெற்றது. இரண்டே ஆண்டுகளில் இராஜராஜனின் ஆட்சிக்குட்பட்ட நிலங்கள் யாவும் அளந்து முடிக்கப்பட்டது. இதனால் இராஜராஜன் 'உலகளந்தான்' என்ற சிறப்புப் பட்டமும் பெற்றான். (நிலத்தை அளக்கப் பயன் பட்ட கோல் 16 சாண் நீளமிருந்தது.) இதிலிருந்து இவனது நிர்வாகத் திறனை நாம் அறியமுடிகிறது.

## பொது நோக்கு

இராஜராஜன் ஆற்றல் மிக்க பேரரசன். பகைவர்களை ஒடுக்குவதில் நிகரற்ற வன். சிவநேசன், அதனால் ஒழுக்க நெறிகளில் சிறந்து விளங்கினான். தான் சைவப்பற்றுடையவனாக இருப்பினும் பிற சமயங்களையும் போற்றினான். இத்தனை குணங்களை ஒருங்கே அமையப்பெற்றதனால் இவ் அரசனை மக்கள் விரும்பிப் போற்றியதில் வியப்பில்லை.

## வெற்றித் தோரணம்

★ கி. பி. 985 ஆம் ஆண்டு ஜூன் (அல்லது ஜூலைத்) திங்கள் 25 ஆம் நாள் மக்களின் மகிழ்ச்சிவெள்ளத்தின் நடுவே, அருண்மொழிவர்மன்எனும் முதலாம் இராஜராஜன் ஆட்சிபீடத்தில் அமர்ந்தான்.

★ தனது நான்காம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் சேர அரசனான பாஸ்கர ரவிவர்மன் என்பவன் மீது படையெடுத்துக் காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் அவர்தம் கடற்படையை அழித்தான்.

★ அடுத்த எட்டாம் ஆட்சி ஆண்டில் பாண்டியர்களை முறியடித்துத் தனது ஆட்சியை விரிவுபடுத்தினான்.

★ 14 ஆம் ஆட்சி ஆண்டுக் காலத்திற்குள் சங்கிலித் தொடர்போல, 'கங்கர்', 'நுளம்ப', 'தடிகை', 'வெங்கி', 'குடகு' முதலான பல நாடுகளை இராசராசன் வெற்றிகொண்டான்.

★ 'காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளிய கோ இராசகேசரி வர்மன்' என்ற தொடர்கள் தனி ஒரு மெய்க்கீர்த்தியாக இராசராசனின் நான்காவது ஆட்சி யாண்டு முதல் உள்ள கல்வெட்டுகள் சிலவற்றில் காணப்படுகின்றன.

இராசராசனின் கல்வெட்டுகளில் குறித்துள்ள நாடுகள், இக் காலத்தில் பெயர் மாற்றம் அடைந்துள்ளன. அவற்றை பக்கத்தில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. படிப்போர் தெளிவடைய உதவும்.

## பழைய நாடுகளின் இன்றைய பெயர்கள்

| | | |
|---|---|---|
| காந்தளூர்ச்சாலை | : | சேரநாடு |
| இரட்டைப்பாடி | : | பம்பாய் மாநிலத்தின் தென்பகுதி. |
| ஈழமண்டலம் | : | இலங்கை |
| கங்கபாடி | : | மைசூர்காட்டின் தென்பகுதியும் சேலம் மாவட்டத்தின் வடக்குப்பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பு |
| நுளம்பபாடி | : | சேலம் மாவட்டத்தின் தென்பகுதி வடஆர்க்காடு பெல்லாரி, கோலார், தும்கூர் முதலிய பகுதிகள். |
| தடிகைபாடி | : | மைசூர் மாவட்டத்தின் பெரும்பகுதி அடங்கிய நாடு |
| குடகுமலை நாடு | : | குடகு நாடு |
| கொல்லம் | : | பழைய திருவாங்கூர்ப் பகுதி |
| கலிங்கம் | : | வங்கக்கடலை அடுத்து கோதாவரி- மகாநதிக்கு இடைப்பகுதி |
| பழந்தீவு | : | கன்னியாகுமரியின் தென்மேற்கே இந்தியப் பெருங் கடலில் அமைந்துள்ள தீவுகள் பலவற்றின் தொகுதி. |

### மும்முடிச் சோழன்!

சோழப் பேரரசின் முடிதாங்கிய மன்னனான இவன், பாண்டியர்களையும் சேரர்களையும் வென்று அவர்தம் முடியாட்சியையும் கொண்டான் எனப் பொருள்பட 'மும்முடிச்சோழன்' என்று அழைக்கப் பெற்றான். இப் பட்டப்பெயர் முதன்முறையாக மேம்பாடிக் கல்வெட்டில் காணப்படுகிறது.

இராஜராஜன் தனது 18ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் சாளுக்கிய நாட்டையும் கலிங்கத்தையும் வெற்றிகொண்டான்.

20 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலிருந்து படையெடுப்பதை நிறுத்திவிட்டு, அதுவரை வெற்றி கொண்ட நாடுகளை ஒருங்கிணைப்பதிலும், நிர்வகிப்பதிலும். சமாதானத்தை நிலைநாட்டுவதிலும், கோயில்களைக் கட்டுவதிலும், சமயக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்புவதிலும் இராசராசன் தனது முழுநேரத்தையும் ஈடுபடுத்தினான்.

### சிவபாத சேகரன்

சைவ சமயத்திற்கு இவன் செய்த தொண்டு இவனுக்குச் 'சிவபாத சேகரன்' என்ற மற்றொரு சிறப்புப் பட்டப் பெயரையும் பெற்றுத் தந்தது.

போரில் வெற்றி பெற்று எதிரிகள் நாட்டிலிருந்து இவன் கொண்டு வந்த செல்வங்கள் அனைத்தையும், தான் எடுப்பித்த பெரியகோயில் தெய்வமாம் தஞ்சைப் பெருவுடையாருக்கே காணிக்கையாக்கினான்.

கடற்படை மூலமாக இவன் அடைந்த வெற்றிகளுக்குப் பிறகு, தனது பட்டத்து ராணி லோகமகா தேவியுடன் கும்பகோணம் அருகேயுள்ள திருவிசலூரில் உள்ள சிவயோக நாதஸ்வாமி கோயிலுக்குச் சென்று, 'துலாபாரமும்' 'ஹிரண்ய கர்ப்பமும்' [1] செய்து காணிக்கை செலுத்தினான்.

இக்கோயில் சுவரில் இராஜராஜன்தன் பட்டத்தரசியுடன் கைகூப்பிய வண்ணம் சிவபிரானை வழிபடுவது போன்று உள்ள சிலைக்கு அருகே காணும் கல்வெட்டிலிருந்து இதை நாம் அறிகிறோம். ஆயினும் தற்சமயம் இக்கோயில் புதுப்பிக்கப் பட்டதால் அக்கல்வெட்டுகள் மறைந்துவிட்டன. இது வருந்தத்தக்க நிலையாகும்.

சோழ அரசர்கள் யாவரும் சிவவழிபாட்டில் அதிக நாட்டம் கொண்டவர்களாய் இருந்தனர். அவ்வழியில் வந்த இராஜராஜ சோழனும் அதே கடவுளின் பரம பக்தனாக விளங்கினான்.

அதனால், தஞ்சையில், மிகச் சிறந்த முறையில் ஒரு கோயில் எடுப்பிக்க வேண்டும் என்றும், அக்கோயில், கடவுள் வழிபாட்டிற்கு மட்டுமன்றிக் கலைகளின் இருப்பிடமாகவும் திகழ வேண்டும் என்றும் இராஜராஜ சோழன் விரும்பினான். இக்கனவை நனவாக்க அவன் செய்த முயற்சியின் விளைவே இன்று நம்மிடையே தஞ்சைத் தரணியில் மிகச் சிறந்த கோயிலாக பெரியகோயில் விளங்குகின்றது.

இராஜராஜனின் 30 ஆண்டு ஆட்சிக்காலம் சோழர் ஆட்சியை விரிவான, மிகப்பெரிய பேரரசாகத் திகழவைத்த காலமாகும். நிர்வாகத் திறன், போர்ப்பயிற்சி, கலை, சமயம் ஆகிய பல துறை அறிவும் வாய்க்கப் பெற்றவன் இராஜராஜன்.

1. எடைக்கு எடை தங்கம். அணிமணிகள் முதலிய பொருள்களைக் காணிக்கையாக்குதல்.

திருவிசலூர் சிவன் கோயிலில், இராசராசன் பட்டத்தரசியுடன்
எடைக்கு எடை பொன்தானம் தரும் சிற்பக் காட்சி



அந்நாளில் இருந்த நிலை ↑

இன்றுள்ள காட்சி ↓






*கோட்டை, அகழி*

சிவகங்கைக் கோட்டை எனப்படும் இக் கோட்டை, சுமார் ஒரு சதுர கி. மீ. பரப்பளவில் அமைந்துள்ளது.

இக் கோட்டையைச் சுற்றிலும் இரண்டு பெரிய மதிற்சுவர்கள் கட்டப் பெற்றுள்ளன. ஒன்று, அகழியை ஒட்டித் தாழ்வாகவும் மற்றொன்று இடைவெளி விட்டு உட்புறமாகச் சற்று உயரமாகவும் அமைந்துள்ளன. கோட்டையைச் சுற்றிலும் ஆழமான அகழியும் அமைந்துள்ளது.

வடக்குப்புறம் உள்ள இவ்வகழிப் பகுதி மண்ணால் நிரப்பப்பட்டுப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இன்றுள்ள நகரை ஒட்டிய பகுதியாகத் தோற்றமளிக்கிறது.

ஆனால் அதே சமயம், தெற்குப்புறம் உள்ள அகழிப்பகுதி, மேலும் ஆழப் படுத்தப்பட்டு, மேட்டூர்க் கால்வாய் என்ற பெயருடன், காவிரித் தண்ணீரைப் பாசனத்திற்குக் கொண்டு செல்ல வாய்ப்பாகப் பயன்படுத்தப் பெறுகின்றது.

மேற்கிலுள்ள அகழி பாழடைந்து காணப்படுகிறது. எனினும் பழைய அமைப் பைப் பெரும் அளவு காட்டியவாறுள்ளது. ஆறுதலான காட்சி எனலாம்.

கோட்டையின் கிழக்கே அமைந்த அகழியின் குறுக்கே மண் நிரப்பிப் பாதை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அவ் வழியாக நாம் கோயிலுக்குள் செல்ல வேண்டும்.

புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் பாதையும், மராட்டியர் காலத்தில் பழுது பார்க்கப்பட்ட கோட்டையின் நுழைவாயிலும்,

'இதற்குமுன் கோயிலுக்குச் செல்ல ஒரு பாலத்தைக் கடந்து செல்ல ஒரு பாதை அமைந்திருக்கலாம்' என்ற எண்ணத்தை நம்முள் ஏற்படுத்துகிறது.

வடக்குப் புறத்திலிருந்தும் கோட்டைக்குள் செல்ல இப்பொழுது ஒரு வளைவு நுழைவாயில் உள்ளது. இவ்வழியாகச் சென்றால் சிவகங்கைக்குளம், 'ஸ்குவார்ட்ஸ் சர்ச்' எனப்படும் கிறித்தவக் கோயில் ஆகியவற்றை அடையலாம்.

இக்கோட்டை முழுதும் முதலில், மண்ணால் அல்லது செங்கற்களால் கட்டப் பட்டிருக்க வேண்டும் என்றும், நாயக்கர் காலத்தில் இது செம்பாராங்கல் என்ற ஒருவகை சிவப்புக்கல்லினால் மாற்றி அமைக்கப்பட்டது என்றும் வரலாற்று ஆசிரியர்களில் ஒருசிலர் கருதுகின்றனர்.

இவ்வாறே சிவகங்கைக் குளம் நாயக்கர் காலத்தவை என்பர். கோயில் கட்டிய காலத்தில் குளம் இருந்திருக்குமே என்றும் நினைக்கிறோம்; அதுபொருத்த மானதுதானே!

கோட்டையின் வெளிப்புறத்தில் தென்மேற்கே அமைந்துள்ள 'செவப்பன வாரி' என்ற ஏரியும் செவப்ப நாயக்கன் பெயரை உடன் கொண்டிருப்பதால், அது அந்த நாயக்க மன்னனால் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

ஊரில் ஆங்காங்கே காணப்படும் கோட்டையின் இடிந்த பகுதிகளும், உதாரண மாக, இப்பொழுது **கீழவாசல்** என்ற இடத்திலுள்ள கோட்டை வாயிலும், மற்றும் மிகப்பெரிய பீரங்கி ஒன்றைத் தாங்கிநிற்கும் 'இராஜகோபாலன் பீரங்கி மேடு' என்ற கோட்டைச்சுவரும், அகழியும், ஒரு காலத்தில் இந் நகர் ஓர் அழகிய கோட்டையால் சூழப்பட்டிருந்ததை நம் நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

'திருவிசைப்பா' என்ற கருவூர்த் தேவரின் பாடல்களில் 'இஞ்சி சூழ் தஞ்சை' என்ற சொல் வாயிலாகத் தஞ்சாவூர், கோட்டையால் சூழப்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளும் நமக்கு அப்போதிருந்த ஊரின் அமைப் பைப்பற்றித் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

அதன்படி இவ் வூரைச் சுற்றிக் கோட்டையும், கோட்டைக்கு வெளியே, ஆனால் அருகிலேயே, அரசரின் அரண்மனையும் அமைந்திருந்ததாகக் கருதப் பெறுகிறது. இவை யாவும் 'உள்ளாலை' (உட்பகுதி), 'புறம்பாடி' (வெளிப்பகுதி) என இரண்டு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது.

ஊரைச் சுற்றி யிருந்த கோட்டையின் வடக்குப்புறம் அமைந்த சிறிய (சிவகங்கைக்) கோட்டைக்குள் கீழ்த்திசையை நோக்கியவாறு கோயில் ஒன்று அமைந்துள்ளது.

சில முக்கிய தெருக்கள் மற்றும் அங்காடி (கடை) வீதிகள் முதலியவற்றின் பெயர்களும் கல்வெட்டில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| ஆனைக்கடுவார்தெரு | கொங்கவேளார் அங்காடி |
| கந்தர்வ தெரு | வீரசோழப் பெருந் தெரு |
| ஜெயங்கொண்ட சோழப் பெருந்தெரு | திரிபுவன மகாதேவி பேரங்காடி |

முதலிய சிலவற்றை மட்டும் நாம் இங்குக் குறிப்பிடுகிறோம். பிறவற்றை நூலின் பின்பகுதியில் தந்துள்ள வரலாற்றுப் பட்டியலில் காணலாம்.

இதுதவிர, 'தளிச்சேரி' என்ற இரண்டு மிகப் பெரிய தெருக்களைக் கோயிலின் நாட்டியப் பெண்களுக்காக (தேவரடியார்) இராஜராஜசோழன் ஏற்படுத்தினான்.

குந்தவைப்பிராட்டியால் பராமரிக்கப்பட்டு வந்த ***சுந்தர சோழ விண்ணகர் ஆதுரசாலை'*** என்ற மருத்துவமனை ஒன்றையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## கால்வாய் அமைப்பு

மிகச் சிறந்த பாதாளக் கால்வாய்த் திட்டம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவையும் நாயக்கர் காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டவையே. இவைகளில் பல, இன்றும் மக்கள் பயன்படுத்தும் நிலையில் இருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும் கோயில் வளாகத்திற்குள் பொழியும் மழைநீர், வடமேற்கு மூலையிலிருந்து பாதாளக் கால்வாய் வழியாகச் சிவகங்கைக் குளத்தை அடைகிறது.

இது தவிர, 'செவப்பனவாரி' என்ற ஏரியில் இருந்து வரும் உபரிநீரும், அதைப் போலவே ஒரு பாதாளக் கால்வாய் வழியே இக்குளத்தை வந்தடைகிறது. ஊரின் குடிநீர் நிலைகளான பல குளங்களுக்கு இச் சிவகங்கைக் குளத்திலிருந்து அமைந்துள்ள பாதாளக் கால்வாய் வழியாக, தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஊரின் நடுவே உள்ள ஐயன் குளம் என்ற நீர்நிலைக்கு இத்தகைய தண்ணீர் செல்லும் பாதாளக் கால்வாய் இன்றும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

அண்மைக் காலத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் நடத்திய அகழ்வாராய்ச்சியின்போது, கோயிலுக்கு வெளியே மேற்குப்புறத்தில், நட்சத்திர வடிவமைப்பில் நந்தவனம் ஒன்றும் அதன் பாசனத்திற்காக முன்னோர் அமைத்திருந்த கால்வாய்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை பிற்காலத்தைச் சேர்ந்தவை; எனினும் சோழர்கால நந்தவனமாக இங்கு இருந்திருக்கலாம் என அறிஞர் பலர் கருதுகின்றனர்.

ஒருவேளை கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் பூசைக்குரிய மலர்கள் யாவும் இந்த நந்தவனத்திலிருந்துதான் கோயிலுக்கு அளிக்கப்பட்டு வந்தனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.


இராஜராஜனின் பேரரசு


கும்பகோணம்
திருச்சி
தஞ்சாவூர்
சோழ மண்டலத்தின்
முக்கிய ஊர்கள்


தஞ்சாவூர் மாவட்டம்
திருச்சிராப்பள்ளி
புதுக்கோட்டை
கும்பகோணம்
பாபநாசம்
தஞ்சாவூர்

## இஞ்சி (கோட்டை) சூழ் தஞ்சையும் பெரிய கோயிலும்




1. பெரிய கோயில் 2. சிவகங்கை (சிறிய) கோட்டை 3. ஸ்குவார்ட்ஸ் சர்ச்
4. இராஜ கோபால பீரங்கி மேடு 5. நாயக்கர் மற்றும் மராட்டியர் கால அரண்மனை
6. சங்கீத மஹால் 7 கலைக்கூடம் மற்றும் சரஸ்வதி மஹால் நூலகம



பெரிய கோயிலின் கிழக்குப் புறத்திலிருந்து காணும் தோற்றம்.
வெளி மதிற்சுவரும் அகழியும் அமைந்துள்ள காட்சி.



பெரிய கோயிலின் மிக உயர்ந்த அழகிய விமானமும் கட்டட அமைப்பும்,



அகழியும் கோட்டை மதிலும் சூழ பெரிய கோயில் (தென்புறம்)



கிழக்கில் அகழிக்கு வெளியிலிருந்து காணும் தோற்றம்.



இராஜராஜன் திருவாயிலும் உயர்ந்தோங்கிய விமானக் காட்சியும்



நந்தி வரிசையுடன் கோயில் மதிற்சுவர் தோற்றம்



கோயில் தளத்திலிருந்து தோற்றம். நந்திமண்டபம் மதிற்சுவருடன் கேரளாந்தகன் திருவாயில்



பெரியகோயில் விமானம் — ஒரு காட்சி



மேல் தளத்திலிருந்து கிழக்கிலுள்ள கோபுரங்களும் மதிலும்



விமானத்துடன் பெரிய கோயில் வளாகம்



கொடி மரம் (நாயக்கர் காலம்)



பெருவுடையார், இராஜராஜேஸ்வரம் (லிங்க வடிவம்)



நந்தியம் பெருமான் [நாயக்கர் காலம்]



தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானம்

## மராட்டியர் வாயில்

கோட்டையின் கிழக்கே, அகழியைக் கடந்து சென்றால், நாம் முதலில் காண்பது, மராட்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட வளைவான நுழைவாயில் ஆகும். இதன் முகப்புப் பகுதி, சுதைச் சிற்பங்களினால் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

வாயிலின் இருபுறமும் விநாயகர், முருகர் இருவருக்கும் இரண்டு சிறிய சன்னிதிகள் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன.

## கோபுரங்கள்

மராட்டியர் நுழைவுவாயிலைக் கடந்து உள்ளே சென்றால், நம்மை வியப்பில் ஆழ்த்தும் அழகிய, சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு கோபுரங்களைக் காணலாம்.

முதல் கோபுரம் இரண்டாவதைவிடச் சற்று உயரமானது. 'கேரளாந்தகன் திருவாசல்' என்று இது அழைக்கப்படுகிறது.

அடுத்து உள்ள கோபுரம் 'இராஜராஜன் திருவாசல்' என்ற திருப்பெயர் கொண்டது.

இந்த இராஜராஜன் திருவாசல், கோயில் கட்டும்பொழுதே அதன் திருச்சுற்று மாளிகை மதிற்சுவருடன் சேர்த்து அமைக்கப்பட்டதாகும்.

### கேரளாந்தகன் திருவாயில்!

முதலில் அமைந்துள்ள கேரளாந்தகன் திருவாயில், இராஜராஜ சோழனால் சேர (கேரள) நாட்டின்மீது போர் தொடுத்து வெற்றி பெற்ற பின், தனியாகக் கட்டப்பட்டதாகும்.

இக்கோபுரம் 29. 25 மீட்டர் நீளமும் 17. 40 மீட்டர் அகலமும் கொண்டதாகும்.

மேல் தளத்திலும் கீழ்த்தளத்திலும் கோபுரத்தின் இரண்டு பகுதிகளிலும் தனித்தனியே உட்பகுதியில் சுற்றுவழிகள் அமைந்து உள்ளன.

கேரளாந்தகன் கோபுரம், ஐந்து நிலைகளைக் கொண்டது. இதன் மேற்பகுதியில் அமைந்துள்ள சுதை வேலைப்பாடுகளும் விக்கிரக அமைப்புகளும் மிகவும் வியக்கத் தக்கவையாக அமைந்துள்ளன.

அவற்றுள் கிழக்கே வடபுறத்தில் அமைந்துள்ள *சிவதாண்டவ உருவம்*, அதற்கேற்றாற்போல் தென்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள *காளியின் உருவம்*,

மற்றும் பார்வதி, சிவன், விநாயகர், பிரம்மா, விஷ்ணு, சண்முகர் முதலான கடவுளர்களின் உருவங்கள் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தின்மேல், நடுவில் கிழக்கிலும் மேற்கிலும் காணப்படும் வாயில்களின் இரண்டுபக்கமும் அழகிய துவாரபாலகர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோபுரத்தின் மீதுள்ள சுதை வேலைப்பாடும் உருவங்களும் மிகவும் பழுதடைந்து, பின்பு நாயக்கர் காலத்திலும் மராட்டியர் காலத்திலும் செப்பனிடப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சமீபத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் இவற்றைப் பழமை மாறாமல் முழுதும் செப்பனிட்டுச் சீரமைத்துள்ளனர்.

## இராஜராஜன் திருவாயில்!

இரண்டாவதாகக் காணப்பெறும் இராஜராஜன் கோபுரம், மூன்று நிலை களைக் கொண்டதாகும். இதன் மேற்குப்புறத்தில் இருபக்கங்களிலும்அமைந்துள்ள இரண்டு சன்னிதிகள் இந்திரன், நாகராஜன் ஆகிய இருவருக்கும் உரியனவாகும்.

கோபுரத்தின் நுழைவு வாயிலின் இருபக்கமும் உள்ள இரண்டு சிறிய சன்னிதி களிலும் கணபதி உருவம் காணப்படுகிறது.

கோபுரத்தின் கிழக்குப்புறம் மிகப் பெரிய உருவங்களாக இருபுறமும் இரண்டு துவாரபாலகர் சிலைகள் அமைந்துள்ளன.

இராஜராஜன் கோபுரத்தின் மேற்குப்புறம் வடபகுதியில், கங்காளமூர்த்தி, கஜசம்ஹார மூர்த்தி முதலான சிவனது உருவங்கள் எழிலோடு செதுக்கப்பெற்று இன்றும் காட்சிதருகின்றன.

தெற்குப்புறம் கந்தபுராணமும் சிவபுராணமும் குறிப்பிடும் கதைகளுக்கேற்பப், புத்தபகவான் உருவம் கொண்ட திருமால், திரிபுரத்து அசுரர்கள் முதலிய சிற்பங்கள் உள்ளன.

இவை யாவும் சோழர்களுக்கே உரிய சிறந்த கலைப் பாணியில் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்ட கற்சிற்பங்கள் ஆகும்.

## புராண விளக்கக் காட்சிகள்

கீழே வெளிச்சுவரில் (கிழக்கில்) அமைந்துள்ள சிறிய சிற்பங்கள் புராணக் கதைகளின் சில பகுதிகளாக உள்ளன.

சிவபெருமான், பார்வதி திருமணக் கோலம்
மார்க்கண்டேயனுக்கு அபயம் அளித்தல்
அர்ச்சுனனுக்குப் பாசுபதம் எனும் ஆயுதம் வழங்குதல்
வேடன் கண்ணப்பனின் சரிதக் காட்சிகள்

ஆகியவை இடம் பெற்றுள்ளன.

மேலும் வினாயகர், கார்த்திகேயர்
முதலான சிற்பங்களும் மிக அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன.



# தஞ்சைப் பெரிய கோயில் கட்டடக் கலை

மாமன்னன் மகேந்திரவர்மன் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மண்டகப் பட்டு என்னும் இடத்தில், முதன் முறையாக அமைத்த கற்றளி எனும் கற்கோயில், அதற்கு முன்பு கட்டப்பட்ட, விரைவில் அழியக்கூடிய பொருள்களினால் ஆன கோயில்களிலிருந்து மாறுபட்டு அமைந்தது. முதன்முதலில், தான் செய்த இந்தப் புதிய செய்கைக்காக அம்மன்னன் தன்னை '*விசித்திர சித்தன்*' என அழைத்துக் கொண்டான். இதை மண்டகப்பட்டிலுள்ள கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

அதன்பிறகு தமிழகக் கோயில் கட்டடக் கலை வரலாற்றில், மாமல்லை தர்மராஜர் ரதமும், கடற்கரைக் கோயிலும், காஞ்சி கைலாசநாதர் ஆலயமும், வைகுந்தப் பெருமாள் கோயிலும், பனைமலை தாலகிரி ஈஸ்வரர் கோயிலும், திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலும், நார்த்தாமலை விஜயாலய சோழீஸ் வரமும், திருச்சி அருகே சீனிவாச நல்லூர் குரங்குநாதர் கோயிலும், குடந்தை நாகேசுவரர் ஆலயமும் அடுக்கடுக்கான வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

## திராவிடக் கட்டடக் கலை!

இக்கோயில்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டின் முற் பகுதிவரை, தமிழகக் கோயில்களின் கட்டடம், விமானம், கோபுரம், திருமதில் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் வளர்ச்சியை அறிய நமக்கு உதவுகின்றன.

இத்தகைய வளர்ச்சியின் சிகரமாகவும், திராவிடக் கட்டடக் கலையின் திலக மாகவும் திகழ்வதே மாமன்னன் இராஜராஜன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்னும் *இராஜ ராஜேஸ்வரம்* ஆகும்,

அன்றைய தமிழகத்தில், ஏறத்தாழ ஆயிரமாண்டுகளுக்கு முன்பு (கி. பி. 1010) தோன்றிய இவ்வழகிய கலைக்கோயில், தமிழனின் காலச்சாரத்தை, பண்பாட்டை எட்டுத்திசைக்கும் புகழ் பரப்பும் கம்பீரமானதோற்றத்துடன் அழியாப் பேருருவாக, அருங்காட்சிக்கூடமாகத், தென்னகத்து இமயம்என்றழைக்கப்பெறும் தென்திசையின் மேருவாகத், தஞ்சைத் தரணியில் பெரியகோயில் இன்றும் திகழ்கிறது.

## விண் முட்டும் விமானம்

வானளாவ உயர்ந்து விண்ணை முட்டும் தோற்றத்துடன் அமைந்த இந்த ஆலயம் இருநூற்றுப் பத்தொன்பது (66 மீட்.) அடி உயரத்தில் காட்சி தருகிறது. விமானத்தின் உயரத்தை நோக்கி வியந்து நிற்கிறோம்.

அதற்குரிய அடித்தளத்தின் அமைப்புமுறை பற்றியும்,
திருச்சுற்றின் பரப்பளவு பற்றியும்,
இடைநாழி, அர்த்த மண்டபம், மஹாமண்டபம்,
நாட்டிய மண்டபம், நந்தி மண்டபம்,
கோபுர வாயில்கள்,
உள்சுற்று,
பெரிய மதில்களுடன் கூடிய திருச்சுற்று மாளிகை,
அவற்றை யடுத்துக் கோட்டை கொத்தளம்,
அதைச் சுற்றிலுமான அகழி

ஆகியவை கூடிய அமைப்பின் அழகைப்பற்றியும் எண்ணி யெண்ணி அதிசயித்து ஆனந்தம் கொள்கிறோம்.

இத்தகைய கோயிலின் கட்டடக் கலை சோழர்களின் கட்டடக்கலை வகையிலேயே மிகவும் சிறந்து விளங்குகிறது.

உப பீடம்முதல் ஸ்தூபி வரை வானளாவி ஓங்கி உயர்ந்து நிற்கும் விமானம், இக்கோயில் வளாகத்தின் பிற்பாதியில் நடுவே அமைந்துள்ளது. இவ் விமானம் அமைந்த அதன் சம காலத்தில் உருவான மற்ற கட்டடங்கள் இராஜராஜன் திருவாயிலுடன் (இரண்டாம்கோபுரம்) ஒட்டிய திருச்சுற்று மாளிகை, சண்டிகேஸ்வரர் கோயில், பிள்ளையாருக்கான சிற்றாலயம் ஆகியவை மட்டுமே.

கேரளாந்தகன் கோபுரம் எனும் முதற்கோபுரம் இராஜராஜனால் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, இக்கட்டடங்கள் கட்டி முடித்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகே தனியாக கட்டப்பட்டதாகும் இது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனால் அமைக்கப்பட்ட அம்மன் கோயிலும், பதினாறாம் நூற்றாண்டில் விஜயநகர பாணியில் அமைந்த சுப்பிரமணியர் கோயிலும் இரண்டாம் சரபோஜி காலத்தில் அமைந்த நடராஜர் மண்டபமும், கணபதியார் கோயிலும் பிற்காலத்தில் பெரிய கோயிலுடன் இணைக்கப்பட்டவையாகும்.



பெரிய கோயில் விமானம்
தென்மேற்குத் திசையில் காணும் எழில் தோற்றம்

## விமானம் வெட்டுமுகத் தோற்றம்




4½ | 4. மீ | 2.15 | 3.45 | 7. 77 | 3. 45 | 2.15 | 4.மீ | 4½

## அழகிய அமைப்பு! அரிய அமைப்பு!

முக்கிய விமானத்தின் அடித்தளம் நூறு அடி சதுரத்தில் அமைந்துள்ளது. பிரம்மாண்டமாய்க் காட்சியளிக்கும் இதன் உபபீடத்தின் உயரம் ஆறு அடி ஆகும். அதன் மேலுள்ள பீடப்பகுதி எனும் அதிட்டானம் எட்டடி மூன்று அங்குலம் உயரம் உடையது. தொண்ணூறு அடி ஒன்பது அங்குலம் சதுர அமைப்பைக் கொண்டுள்ளது.

இந்த அதிஷ்டானம், பத்மபந்தம் எனும் வகையைச் சார்ந்ததாகும். இது பத்மம், உபானம், ஜகதி, வட்டக் குமுதம், கண்டம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

இப்பீடத்தின் மேல் பகுதியைப் பல புதியவடிவ யாளி உருவங்கள் அலங்கரிக்கின்றன. அதற்குமேல் சுவர்ப்பகுதியைக் காண்கின்றோம். சுவர் நெடுகிலும் அரைத்தூண்களும், தேவகோட்ட மாடங்களும், அகாரை எனப்படும் உள்ளடங்கிய இடைப்பகுதியும், அதை அலங்கரிக்கும் அழகிய கும்ப பூஞ்சரங்களும் அமைந்து க்கட்டடத்துக்கு எழிலூட்டிப் பார்ப்போரைக் கவர்ந்து விடுகின்றன.

தேவ கோட்டங்களில் சிவனது பல்வேறு வடிவங்களான திரிபுராந்தகர், கால சம்ஹாரர், நடராஜர், பைரவர் போன்ற உருவங்கள் சிற்ப வடிவில் அற்புதமாகப் படைக்கப்பெற்றுள்ளன.

இத் தேவகோட்டங்கள் மீது மகரத் தோரணங்கள் அலங்கரிக்க அதன் நடுவே பல்வேறு தெய்வ உருவங்களை, அர்த்த (பாதி உருவம்) சித்திரங்களாகக் காண்கிறோம்.

தேவ கோட்டங்களின் பக்கங்களிலுள்ள தூண்கள் எளிமையாக அமைந்து விளங்குகின்றன. இத்தூண்கள் பாதம், உடல், இடை, கலசம், தாடி, கண்டம், குடம், பத்மம், பலகை, வீரகண்டம், ஆகிய உறுப்புகளோடு சேர்கின்றன. இவ்வாறு அதிட்டானத்திற்கு மேலுள்ள சுவர்ப்பகுதி இரண்டு அடுக்குகளாக அமைக்கப்பெற்றுள்ளது. நாம் இதில் கட்டடக்கலையின் நேர்த்தியைக் கண்டு களிக்கிறோம்.

கருவறையைச் சுற்றி உள்ள திருச்சுற்றில் சித்திரக்கூடம் அமைந்துள்ளது. அதற்கு நேராக மேல் தளத்தில், நாட்டிய சிற்பக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலே விமானத்தை ஒட்டி முன்புறம் மட்டும் அமைந்த மூன்றாவது நான்காவது தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பும் அழகும் பொறியியல் நுட்பமும் இக்கோயிலில் மட்டும் உள்ள புதுமைகளாகும்.

விமான அமைப்பின் உள்பகுதி, குடைந்தெடுத்ததைப் போன்று அமைந்துள்ளது. (படம் : பக். 78)

### கிரீவம், சிகரம்!

விமானம் மொத்தம் பதின்மூன்று நிலைகளைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதன்மீது எண்பட்டை வடிவில் *கிரீவம்* என்னும் கழுத்துப்பகுதி காணப்படுகிறது.

அதனருகே நான்கு மூலைகளிலும் வேதிப்படையில் மூலைக்கு இரண்டாகஎட்டு நந்திகள் நேருக்கு நேராகவும் நம்மை நோக்குவன போலவும் படுத்த வண்ணம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

கிரீவத்தின் மீது எட்டுப்பட்டையுள்ள *சிகரம்* எனும் பகுதி திராவிட பாணியில் அமைந்துள்ளது. இதன் நான்கு புறங்களிலும் மகாநாசிகள்அலங்கரிக்கின்றன.

கிழக்கில் உமையுடன் சிவனும், தெற்கில் தென்திசைக் கடவுளும், மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும் சுதைச் சிற்ப வடிவில் காட்சி தருமாறு அமைந்துள்ளன.

சிகரத்தின் மீது உள்ள *ஸ்தூபி* எனப்படும் 3.50 மீட்டர் உயரமுள்ள கலசம் விமானத்திற்கு எடுப்பான தோற்றத்தையும் அழகையும் அளிப்பதாக அமைந்துள்ளது.

## கோயில் வளாகம்

### திட்டமிட்ட அருஞ்செயல்

இராஜகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ இராஜராஜதேவர் என்னும் முதலாம் இராஜராஜன் இக்கோயிலைக் கட்டிமுடிக்க எடுத்துக்கொண்ட காலம் ஏற்றத்தாழ ஆறு ஆண்டுகளே (கி. பி. 1003—1009) ஆகும்.

குறுகிய காலத்தில் இக் கோயிலைக் கட்டிமுடிக்க இம்மன்னனுக்கு உதவியாக இருந்தவை, இவனது மிகச் சிறந்த திட்ட அமைப்புகள், அதிலே அவன்கொண்ட ஈடுபாடு, எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவபெருமானிடம் இவன் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி ஆகியவையே எனலாம். இத்துடன் கருவூர்த்தேவர் என்ற அவனது குருவின் உதவியும் சேர்ந்திருந்தது.

தஞ்சை மாவட்டத்தில் மலைகள் ஏதும் இல்லை என்பதை நாம் அறிவோம். ஆகவே இக்கோயிலைத் கட்டிமுடிக்கத்தேவையான கற்களை இவன் வெகுதூரத்தி லிருந்தே கொண்டுவந்தான்.

பரம்பரைக் கூற்றின்படி, திருச்சியின் அருகே உள்ள 'மம்மலை' என்ற இடத்திலிருந்து கொண்டுவந்தான் என்ற செய்தி, மேலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இது தஞ்சையிலிருந்து சுமார் 85 கி. மீ. தூரம் உள்ளது.

இக்கோயிலின் மொத்தப்பகுதி, கிழக்கு மேற்காக 244 மீட்டர் நீளமும் தெற்கு வடக்காக 122 மீட்டர் அகலமுமாக அமைந்துள்ளது.

முக்கிய கோயில் பகுதி, உண்ணாழி (கருவறை) அதைச் சுற்றிலும் உள்ள திருச்சுற்றுப் பகுதி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நாட்டிய மண்டபம், முக மண்டபம் இவைகளைக் கொண்டுள்ளது.

இவை யாவும் ஒன்றாக அமைக்கப்பட்ட ஒரே அடித்தளத்தின் மேல் கட்டப் பட்டவை.

## பிற்காலத்துப் படிகள்

முகமண்டபத்திற்கும் அர்த்தமண்டபப் பகுதிக்கும் செல்ல, பக்கவாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் படிகளே முன்பு பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்பொழுது முகமண்டபத்திற்குச் செல்வதற்கு, கிழக்கே அமைந்துள்ள படிகள், இரண்டாம் சரபோஜி காலத்தில் கட்டப்பட்டவை.

அர்த்த மண்டபத்தில் தெற்கு நுழைவாயில் மேற்பகுதியில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழன் திருவாசல்' என்ற கல்வெட்டு காணப்படுகின்றது. விக்கிரம சோழன் என்பது இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழனின் மறு பெயராகும்.

இராஜராஜ சோழன் காலத்திலேயே (கி. பி. 1012—இல்) இராஜேந்திர சோழனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. அப்பொழுதே இராஜேந்திரன் மிகுந்த வீரனாக விளங்கி, வடநாடு வரை சென்று வெற்றிவாகை சூடி வந்தான். ஆகவே அதைப் பாராட்டும் வகையில் இராஜராஜன், இந்த வாசலுக்குத் தன் மகனின் செல்லப்பெயரை வைத்ததாகக் கூறுவர்.

இதற்கு நேராக வடக்கே அமைந்துள்ள வாசல், 'திருஅணுக்கவாசல்' என அழைக்கப்படுகிறது. (திரு என்றால் 'கடவுள்' என்றும் அணுக்கம் என்றால் 'மிக நெருங்கிய' என்றும் பொருள்படும்.) கருவறையின் அருகே அமைந்த காரணத்தால் இவ்வாசலுக்கு அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.





உள்நாழியிலுள்ள பெருவுடையாரைத்
துதிக்க நுழையும் தென்புற வாயில்



உள் நாழி — வடக்கு வாயிலின் வனப்புமிகு தோற்றம்

வரலாற்று ஆசிரியர் ஒரு சிலர் இப்பெயர், முகமண்டபத்தில் அமைந்துள்ள கிழக்கு வாசலுக்குப் பொருந்தும் எனக் கூறுகின்றனர். இவ் வடக்கு வாசலின் மேல் 'அஷ்டமங்கலம்' எனப்படும் திருச்சின்னங்களான (பொருள்களான) தீபம், விசிறி, குடை, கண்ணாடி, வெண்சாமரம், யானை, நந்தி, யாளி ஆகியவை சிற்ப வடிவில் அமைந்துள்ளன.



## மாபெரும் நந்தி!

முக்கிய கோவிற்பகுதிக்கு முன்பாக, கிழக்கே, சற்று உயர்ந்த மேடைமீது காணப்படும் மண்டபம், மற்றும் அதனுள்ளே இருக்கும் நந்தியம்பெருமான் இவை யாவும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவையாகும். மண்டபத்தூண்களில் கைகூப்பிய நிலையில் அமைந்துள்ள நாயக்கமன்னர்களின் வடிவங்களேஅதற்குச் சான்றாகும்.

மூலவரான மபொரும் லிங்க உருவத்திற்கு ஏற்றதாக நந்தி (காளை)யின் சிற்பம் காட்சி தருகின்றது. இந் நந்தி சுமார் 6 மீட்டர் நீளமும், 2.5. மீட்டர் அகலமும், 3.66 மீ. உயரமும் உடையதாகும். மேலும் ஒரே கல்லினால் ஆனது.

இதேபோல ஒரே கல்லினால் ஆன மேலும் இரு பெரிய நந்திகள் தென்னிந்தியாவிலேயே உள்ளன. ஒன்று, ஆந்திர மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்தில் லேபாக்ஷி என்ற இடத்திலும், மற்றொன்று, மைசூருக்கு அருகிலுள்ள சாமுண்டி மலைமீதும் இருப்பவையாகும்.

அதிசயிக்கத் தக்க வகையில் இம் மூன்றுமே விஜயநகர கலைப் பாணியில் அமைந்துள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

எதிரே தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி வைக்கப்பட்டு இருக்கும் அழகிய, ஆயினும் அளவில் சற்றே சிறிய நந்திதான் சோழர் காலத்தியது. இந்த நந்தி கருவறையில் அமைந்துள்ள சிவபெருமானின் மிகப்பெரிய உருவத்திற்கு ஈடாக இல்லாததால், நாயக்கர் காலத்தில் மாற்றப்பட்டு இருக்க வேண்டும்.

## ஒரு சிற்பியின் மதிப்பீடு!*

*நீண்ட உடலும், நிமிர்ந்த தலையும், குறுங்கொம்பும், பக்கங்களில் விரிந்த காதுகளும், பரவசமூட்டும் பார்வையும், வரிசையான பற்களும், பிறை வடிவமான நாசியும், நாசியை நீவும் நாக்கும், திரண்டு பருத்த திமிலும், அளவான கால்களும், வலுவான விலாவும், நீண்ட வாலும் பெற்று இந்நந்தி கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.*

* ஸ்தபதி வே. இராமன் (தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை)

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் - நந்தி மண்டபம்.



கிழக்கிலிருந்து பார்க்கும்போது நந்தியின் பின்புறத் தோற்றம்

நந்தியின் கழுத்தில் முறுக்கிய கயிறை யொத்த கழுத்து வாரும், சதங்கையும், ஒலிக்கும் மணியும் அலங்கரிக்கின்றன. உடலையும் முன்கால் விலாவையும் இணைக்கும் வகையில் மற்றொரு ஒலிக்கும் மணி வரிசையும் வலுவாகக் காட்டப்பட்டுள்ளது.

நந்தியின் உறுதியான கால்களை உருவகப்படுத்தும் வகையில் நந்தியின் முன்கால் மீது கீர்த்திமுகம் காட்டப்பட்டுள்ளது. கழல் அணியப் பட்ட நந்தியின் இடது முன்காலும் அதன் அமைப்பும் அதன் அசைவுகளை வெளிப்படுத்துவது போன்ற தோற்றத்தையும், அது எந்நேரத்திலும் எழுந்து விடலாம் என்ற பிரமையையும் ஏற்படுத்துகின்றது.

நந்தியின் மேல் உடலில் வனப்புமிகு கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது. அக்கம்பளத்தையும், அடி வயிற்றையும் இணைக்கும் அணி செய்யப்பட்ட இடைவார்க் கச்சையும் காட்டப்பட்டுள்ளது.

அங்கத்தின் ஒவ்வொரு பகுதியும் அதன் ஒவ்வொரு அசைவினையும் அழகினையும் வெளிப்படுத்தும் வகையில் இயற்கையாக நந்தி செதுக்கப் பட்டுள்ளது.

குறுங்கொம்பு, கண்களின் பார்வை, பற்களின் வரிசை, அகண்ட தாழ்வாய், விரிந்த காது, அளவான உடல் அமைப்பு...ஏன்? உறுதியான குளம்புகள்கூட மிகவும் கவனமாக வடிக்கப்பட்டுள்ளது.

இம்மாபெரும் நந்தியின் நீளம் 19 அடி, அகலம் 8 அடி, உயரம் 12 அடி ஆகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கற்களே இல்லாத சோழ நாட்டில் இவ் விதம் பிரம்மாண்டமாக வடிவமைத்துள்ள இந் நந்தியை உருவாக்க எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்பதனை நினைக்கும்போது நாம் வியப்படையாமல் இருக்கமுடியாது.

எல்லாவித வசதிகளும் கொண்ட இந்நாளில் இதனை உருவாக்க என்ன செலவாகும் என்பதனைக் கணக்கிடுவோமானால்,...

| | | |
|---|---|---|
| நந்தியின் அளவு — 19, 8, 12, | = | 1824 கனஅடி. |
| கல் கிரயம் | ரூ. — | 1, 82, 400—00 |
| செய்கூலி | — | 70, 000—00 |
| உளி தளவாடப்பொருள்கள் | — | 35, 000—00 |
| சார அமைப்பு | — | 12, 600—00 |
| (திருச்சி மாவட்டத்திலிருந்து எடுத்துவருவதாக மனதிற்கொண்டு) கல் எடுத்துவரும் செலவு | — | 1, 50, 000—00 |
| மொத்தம் | ரூ. | 4, 50, 000.00 |

ஏறத்தாழ 4½ லட்சம் ரூபாய் ஆகலாம்.

ஒரு தேர்ந்த சிற்பியின் கீழ் 5 பேர் பணிபுரிந்து சுமார் 9 மாதக் காலத் தில் இப்பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கலாம்.

*நந்தி அமைப்பிற்கே இவ்வளவு செலவாகலாம் என்றால், பெரிய கோயிலின் முழு அமைப்பையும் இந்நாளில் செய்வதென்றால் ...?*

*இந்நாளில் சிற்பிகள் உள்ளனரா? எவ்வளவு காலமாகும்? இவற்றையெல்லாம் நம் மனக்கண் முன நிறுத்திவைத்துப் பார்க்கையில், மாமன்னன் இராசராசன் புகழ், அவன் எழுப்பிய கோயிலைவிட வானளாவ உயர்ந்து நிற்கின்றது!*

## திருச்சுற்று மாளிகை

கோயிலைச் சுற்றி உயரமாக அமைந்துள்ள மதிற்சுவரை யொட்டி உட்புறமாக வரிசையாக இரு தூண்களுடனும் ஆங்காங்கே சிறு சன்னிதிகளுடனும் அமைந்துள்ள மண்டபப் பகுதி, 'திருச் சுற்று மாளிகை'என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டின்படி ஓலைநாயக்கன் கிருஷ்ணன் இராமன் என்னும் மும்முடிச் சோழ மாராயன் என்பவனால் இத்'திருச்சுற்று மாளிகை' எழுப்பப்பட்டது எனத் தெரிகின்றது. 9. 25 மீட்டர் உயரம் உள்ள திருமதிற்சுவர் மீது வரிசையாக அமர்ந்து இருக்கும் நந்தி உருவங்கள் இக் கோயிலுக்கு அழகுடன் தெய்வீகச் சூழ்நிலையையும் ஏற்படுத்துகின்றன.

இம்மதிற்சுவரையொட்டி உட்புறமாக இரண்டு வரிசைக் கால்களைக்கொண்ட இத் திருச்சுற்று மாளிகைக் கட்டடக்கலை, இராஜராஜ சோழன் காலத்தில்தான் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழன் கங்கை கொண்டசோழபுரத்தில், தான் எடுப்பித்தகோயிலில் இதே பாணியைப் பின்பற்றியுள்ளான். (அதில் வடக்குப்புறம் ஒரு பகுதி தவிர, மற்றப் பகுதிகள் தற்போது காணப்படவில்லை) [1].

இதன் பிறகு சிதம்பரம் கோயிலிலும், திருவையாறு கோயிலிலும் இத்தகைய கட்டடப் பாணி பின்பற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.



1. கி. பி. 1855ல் வெளிவந்த செய்தி ஒன்றின்படி இக்கோயிலின் கோபுரம் மற்றும் மதிற்சுவருடன் கூடிய திருச்சுற்று மாளிகை முதலியவை இடிக்கப்பட்டு, அவற்றின் கற்கள், கீழ் அணை கட்டுவதற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலின் இன்றைய அவலநிலைக்கு இந்நிகழ்ச்சியே பெரிதும் காரணமாகும்.



திருச்சுற்று மாளிகையின் ஒரு பகுதி



பெரியகோயிலின் ஆறடி உயரமுள்ள அதிஷ்டானமும்
சிற்பங்கள் நிறைந்த சுவரின் பகுதியும்



கோட்டைக்குள் அமைந்துள்ள சிவகங்கைக் குளமும் விமானமும்



அகழியை அடுத்துள்ள அழகிய முகப்புடைய மராட்டியர் வாயில்



இராஜராஜன் திருவாயில் (இரண்டாவது கோபுரம்)



உண்ணாழிக்குச் செல்லும் தென்புற வாயில்



தெ[illegible]த் திருச்சுற்று மாளிகையில் உள்ள
சோழர் கால நந்தி



செப்புத்தகட்டால் மூடப்பெற்ற கொடிமரத்தின்
பீடம். கண் கொள்ளாக் காட்சி

நந்தி மண்டப மேற்குச் சிற்பத்தூண்களில் நாயக்க மன்னர் உருவச் சிலைகள்









முகமண்டபம்— துதியாளியுடன் கூடிய சிற்பத் தூண்களும் கொடுங்கையும்

முதல் தளத்திலிருந்து
விமானத் தோற்றம் [கிழக்கு]



திருச்சுற்று மாளிகை- தென் கிழக்கு மூலை
அக்கினி தேவன் சன்னிதியின் விமானம்





ஓங்கி உயர்ந்த விமானம் தஞ்சைப் பெரிய கோயில்

# தனிச் சன்னிதிகள்

இப்பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகையின் நான்கு மூலைகளிலும் மற்றும் ஆங்காங்கேயும் சிறிய விமானத்துடன் கூடிய தனித் தனிச் சன்னிதிகள் கட்டப் பட்டுள்ளன. இவை யாவும் எண்திசைக் காவல் கடவுளர்களுக்காக அமைக்கப் பட்ட சன்னிதிகளாகும்.

இத்திருச்சுற்று மாளிகையில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பகுதி களிலும் மூன்று நுழைவாயில்கள் அமைந்துள்ளன. இவை, அரண்மனையைச் சேர்ந்தவர்கள் கோயில் வழிபாட்டிற்கு வந்து செல்வதற்காக அமைக்கப்பட்டவை என்று கூறுவர். இதுதவிர தென்கிழக்குப் பகுதியிலும் ஒரு நுழைவாயில் அமைந் துள்ளது.

வடக்குப்புற வாயிலில் வெளிச்சுவரில் இருபக்கமும் 'சங்கநிதி', 'பதுமநிதி' என்ற இரண்டு சிற்பங்கள் அமைந்துள்ளன.

அதிசயிக்கத்தக்க வகையில் இம்மூன்று வாயில்களும் கருவறையின் வெளிச் சுவரில் அமைந்துள்ள மூன்று வாயில்களுக்கும் நேர் எதிராக அமைக்கப்பட்டுள்ளன.

நாயக்கர் கால ஓவியங்கள் இந்தத் திருச்சுற்று மாளிகையின் தெற்குப்பகுதி உள் சுவரிலும், அதேபோன்று திருவிளையாடற்புராணத்துப் பகுதிகளைக் குறிக்கும் மராட்டியர்கால ஓவியங்கள் வடக்குப் பகுதியிலும் (தற்போது பழுதடைந்த நிலையில்) காணலாம்.

## பிள்ளையார் சன்னிதி

பெரிய கோயிலின் தென்மேற்கில் அமைந்துள்ள பிள்ளையார்கோயில், இராஜ ராஜன் கட்டியதாகும். இது இரண்டாம் சரபோஜி காலத்தில்முழுதுமாகப் பிரித்துக் கட்டப்பட்டது. அவ்வாறு கட்டும்போது, அதன் தற்போதைய முன் மண்டபம் சேர்க்கப்பட்டதாகும்.

இங்குள்ள கல்வெட்டு, இரண்டு பிள்ளையார் கோயில்களைப் பற்றிய குறிப்பை நமக்களிக்கின்றது.

ஒன்று, 'ஆலயத்துப் பிள்ளையார் கணபதியார்.[1] மற்றொன்று, பரிவாராலயத் துப் பிள்ளையார் கணபதியார்.' [2]

ஆலயத்துப் பிள்ளையார் கணபதியாருக்கென்று தனியாக வடமேற்கு மூலையில் அமைந்துள்ள சிறிய கோயிலையும் பரிவாராலயத்துப் பிள்ளையார் கணபதியாருக்கென்று திருச்சுற்று மாளிகையில் உள்ள ஒரு சன்னிதியையும் குறிக்கும்.

---

1. தெ. இ. க. தொகுதி 2 எண். 37
2. தெ. இ. க. தொகுதி 2 எண். 86

### கருவூரார் சன்னிதி

முக்கிய கோயிலின் பின்புறம், மேற்கே அமைந்துள்ள சிறிய சன்னிதி கருவூர்த் தேவருக்கு (பிற்காலத்தில்) அமைக்கப்பட்ட கோயிலாகும்.

இவர் கருரைச் சேர்ந்த 'சித்தர்' ஆவார். இராஜராஜனின் குருவும், இக் கோயில் அமைய உதவியவருமான கருவூரார் என்ற கரூர்த்தேவர், இக் கோயிலில் குடி கொண்டுள்ளார்.

மரத்தடியில் இருந்த சித்தர் சிலைக்குச் சன்னிதியும் மண்டபமும் அமைத்துள்ளனர். இங்கு ஏராளமான பக்தர்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர்.

### முருகன் திருக்கோயில்

பெரிய கோயிலின் வடமேற்கு மூலையில் நாம் காணும் மற்றொரு அழகிய கோயில் குறிப்பிடத்தக்கது. பார்வைக்குச் சிறிய கோயில்! ஆனால் அதிநுட்பமான கலைச் சிறப்புடன் கூடிய கோயில்; இது சுப்பிரமணியருக்கு உரியது.

இக்கோயில், நாயக்கர் காலத்திய விஜயநகரக் கலைப்பாணிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இதன் விமான அமைப்பு, சுவரின் கலைநுட்பம், ஊசிமட்டும் நுழையக்கூடிய துவாரங்கள் அமைந்த நுண்ணிய சிற்ப வேலைப்பாடு முதலியவற்றைக் காணும் போது நமக்குள் மலைத்து வியந்து நிற்கிறோம்.



முருகன் கோயிலின் எழில்மிகு கட்டடப் பகுதி



கருவறையில் அமைந்துள்ள ஒரே கல்லினால் ஆன ஆறுமுகங்களைக்கொண்ட முருகப் பெருமான் அழகுடன் அருள் பாலிக்கின்றார். அருணகிரிநாதரால் மிக அழகாகப் பாடப் பெற்ற ஆண்டவர் இவர் என்பதும் மற்றொரு சிறப்பாகும்.

இக் கோயிலின் வெளிச் சுவரில் மூன்று பக்கங்களிலும்,சிறுசிறு சிற்பங்கள் பல, அழகிய வடிவில் செதுக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம். கண் கொள்ளக் காட்சி!

தெற்குப்புறம் அமைந்துள்ள படிகளின் இரு பக்கங்களிலும் அழகிய இரண்டு யானைகளின் உருவங்கள். போர்க்களத்தில் வீரர் இருவரைத் துதிக்கையால் தூக்கிக் கொல்ல முயற்சி செய்வது போலச் சிறப்புற அமைந்துள்ளது.

## உட்புறக் காட்சி

வடக்குப்புறம் உள்ள படிகளின் இருபுறமும் அமைந்துள்ள யானைகள் சற்று வித்தியாசமாகவும் அதிசயிக்கத் தக்க வகையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இப் படிகளின் மேற்குப்புறம் அமைந்துள்ள யானையின் உருவம், தன்முன்னே குதிரையின்மேல் செல்லும்வீரனை அப்படியே இலாவகமாக, துதிக்கையால் தூக்கி எறிந்து கொல்ல முயற்சி செய்கிறது.

சுருண்ட வாலும் கண்களில் உள்ள வெறியும் இந்த யானைக்கு ஏற்பட்டுள்ள கோபத்தை நம் கண்முன் சித்திரிக்கின்றன.

அதேசமயம் கிழக்குப் பகுதியில் உள்ள யானையை நோக்கினால், கொல்லப் பட்ட அவ்வீரனின் உடல் துதிக்கையிலிருந்து நழுவி கீழே விழும் தறுவாயில் உள்ளதைக் காணலாம்.

சுருண்ட வால் நீண்டுள்ளதையும் முகத்தில் உள்ள அமைதியும் காணும்போது இதன் கோபம் தணிந்தது என்பதையும் நாம் அறிகிறோம்.

இவ் வுருவங்கள் யாவும் உயிர்கொண்டு நம்முடன் உறவாடுவது போன்று தோற்றம் அளிக்கின்றது என்றால் அது மிகையாகாது

## துர்க்கையின் போர்க்கோலம்!

வடக்குப்புறம் சுவரின் நடுவில் உள்ள தேவகோட்டத்தில் மகிஷன் (எருமை) மீது நிற்கும்துர்க்கையையும் அதன் கீழே அவ்வசுரனுடன் சமர்புரியும் துர்க்கையையும் அழகிய சிற்பவடிவில் காண்கிறோம்.

## மார்க்கண்டேயன் சிற்ப மாண்பு

தேவகோட்டத்தின் கிழக்கே, நம் கண்ணையும் கருத்தையும் கவரும் மற்றுமொரு அழகிய சிற்பக் காட்சி மார்கண்டேயன் கதை சார்ந்ததாகும்.

நந்தவனத்தில் கொய்த மலர்களைக் கொண்ட பூக்கூடையுடன் சிவபெருமானைப் பூசிப்பதற்காகச்சென்றுகொண்டிருக்கும் மார்க்கண்டேயன், தன் பின்னால் பாசக்கயிறுடன் எமன் துரத்தி வருவது கண்டு, அஞ்சி ஓடி, சிவ இலிங்கத்தைத் தழுவிக் கொண்டு சரணடைகிறான்.

அதற்கு அருகில் சிவபெருமான் 'காலாந்தக மூர்த்தி' உருவத்தில் தோன்றி, மார்க்கண்டேயனைக் காத்து, 'என்றும் பதினாறாக' இருக்க வரம் அருள்கிறார்.

## கண்ணுக்கினிய காட்சிகள்!

இதுபோன்ற அழகான சின்னஞ்சிறு சிற்பங்கள் இன்னும் பல, இக்கோயிலில் வெளிச்சுவரில் காணப்படுகின்றன.

புத்தரின் வடிவம்
வாலியும் சுக்கிரீவனும் போரிடும் காட்சி
குழந்தை வடிவத்தில் (தவழ்ந்த கோலத்தில்) அசுரனை அழிக்கும் கண்ணனின் உருவம்
பிட்சாடனமூர்த்தி

என்பன போன்ற பல அரிய சிற்பங்களைத் திருமுருகன் திருக்கோயிலில் காண்கிறோம்.

தெற்குப் படிகளில் கிழக்கே உள்ள இரணியனை அழிக்கும் நரசிம்மமூர்த்தியின் உருவமும் கணபதியின் உருவமும் காணவேண்டிய கலைவடிவங்களாகும்.

இருபுறமும் அமைந்த கருங்கல்லினால் செதுக்கப்பட்ட சக்கரங்களும் அவற்றின்முன்னேஅமைந்த குதிரைகளும். இக்கோயிலின் முன் மண்டபப் பகுதிக்கு ஒரு தேரைப் போன்ற தோற்றத்தை அளிக்கின்றன.

### பிற்கால ஓவியங்கள்

முருகன்கோயில் முன் மண்டபத்தில் உள்சுவர்களில் மராட்டிய மன்னர்களின் உருவங்கள் வண்ண ஓவியங்களாய் வனப்புடன் காட்சி தருகின்றன. இவை மராட்டியர் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களாகும்.

### சண்டிகேஸ்வரர் சன்னிதி

முருகன்கோயில் அருகே, சற்றே தென்மேற்குத் திசையில் தெற்கு நோக்கிய நிலையில் உள்ளது. பெரியகோயில் விமானத்திற்கு அருகே வடக்கில் அமைந்துள்ளது. இச் சண்டிகேஸ்வரர் சன்னிதி இராஜராஜன் காலத்ததே!

இக்கோயிலில் கீழ்ப்பகுதிகளிலும் வெளிச் சுவரிலும் சோழர்காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

### அம்பாள் சன்னிதி

பெரிய கோயிலுக்கும் நந்தி மண்டபத்திற்கும் இடையே தெற்கு நோக்கிய நிலையில் உள்ளது உலக நாயகியாகிய அம்மன் திருக்கோயில். இது சிறிய கோயில். 'கோனேரின்மை கொண்டான்' என்ற பாண்டிய மன்னனால் 13ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றதாகும். 'உலகம் முழுதும் உடையாள்' அல்லது 'பெரிய நாயகி' எனப் பெயர்கொண்ட பார்வதியம்மை இந்தக் கோயிலில் கொலுவிருந்து காட்சி தருகின்றாள்.

அம்மன்கோயில், உண்ணாழிகை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முக மண்டபம் என்ற நான்கு பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளது.

கருவறையின் மேல், ஒரே நிலை விமான அமைப்பைக் கொண்ட கோயில் இது. இங்கு தேவ கோட்டச் சிலைகளாக மூன்று சக்திகள் இடம் பெற்றுள்ளன. அவை 'இச்சா சக்தி', 'கிரியாசக்தி', ஞான சக்தி' என்பனவாம்.

முன் மண்டபத்தின் சுவரிலும் மூடுதளத்தின் கீழ்ப்பகுதியிலும் நாயக்கர் கால, மராட்டியர் கால ஓவியங்கள் தீட்டப் பெற்றுக் கவினுறக் காணப்படுகின்றன.

### நடராஜர் சன்னிதி

கோயிலின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள மண்டபம் இது. தெற்கு நோக்கிய நிலையில் உள்ளது. பிற்பகுதியில் சிறிய சன்னிதியுடன் கூடியதாய்க் காட்சி தருகின்றது; பிற்காலத்தில் இரண்டாம் சரபோஜி மன்னரால் அமைக்கப்பட்டுள்ளது.

நடராஜர் மண்டபம் என்று அழைக்கப்படும் இதன் சன்னிதியில் சோழர்கால ஐம்பொன் உருவமான நடராஜர் சிலை உள்ளது.[1]

---

1. மராட்டியர் காலத்தில் இதன் பாதம் உடைந்து போகவே மராட்டிய அரசி இதனைப் பழுதுபார்த்து அப்பாதப் பகுதியிலேயே பழுது பார்த்த, செய்தியையும் கல்வெட்டாக, மராட்டிய மொழியில் பொறித்துள்ளார்.

இம் மண்டபத்தின் நேர் எதிரே, வெளியில், நீண்ட சதுர அமைப்பிலும் வட்ட வடிவமான அமைப்பிலும் செங்கற்களாலான இரண்டு மேடைகள் காணப்படு கின்றன. நந்தி மண்டபத்திற்குக் கிழக்கில் நீண்ட சதுரமான திட்டான அமைப் பைக் காணலாம். ஐந்தடி உயரமுள்ள வட்டமான மேடை தென்புறம் அமைந் துள்ளது.

## சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

இரண்டாம் சரபோஜி மன்னன் காலத்தில் அரசவைப் புலவராக இருந்த 'கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்' என்பவரால் இயற்றப்பட்ட 'சரபேந்திர பூபாலக்குறவஞ்சி' என்ற நாடகம், இந்த நீண்ட சதுர மேடைமீது சித்திரைத் திரு விழாவின் எட்டாம் நாளன்று நடத்தப்பட்டு வந்துள்ளது.

இது வட்ட வடிவமான அமைப்பிலுள்ளது. மேடைமீது அமர்ந்து இரண்டாம் சரபோஜி மன்னர், நாடகத்தைக் கண்டு களிப்பது வழக்கமாம். இதைச் செவிவழிச் செய்தியால் அறிகிறோம்.

'இராஜராஜ விஜயம்'

'இராஜராஜேஸ்வர நாடகம்' என்பன இங்கு நடித்துப் பாடப்பெற்றுள்ளன.

இராஜேந்திர சோழதேவனின் ஆறாவது ஆட்சிஆண்டுக்காலத்துக் கல்வெட்டு ஒன்று நமக்கு அளிக்கும் செய்தியின்படி, 'சந்திக்கூத்தன் திருவேளார் திருமுது குன்றன்' என்பவனும் அவனது வழிவந்தோரும் 'இராஜராஜேஸ்வர நாடகம் என்ற நாடகத்தை வைகாசி விழாவின்போது நடத்த வேண்டும் என்றும் 'இராஜ ராஜ விஜயம்' என்ற பாடல் தொகுப்பைச் சித்திரைத் திருவிழாவின்போது பாட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்திருந்ததை நாம் அறிகிறோம்.

இப்பழக்கம் எப்பொழுது கைவிடப்பட்டது என்பதும் இக்கலை நிகழ்ச்சிகளும் இதே மேடையில் நடத்தப்பட்டனவா என்பதும் நமக்குத் தெரியவில்லை.

## வராகி சன்னிதி

'வராகி' என்ற தேவதை ஏழு கன்னிகைகளில் சேனாதிபதியாவாள். தேவி பராசக்தியான அம்பாளின் அம்சமான இத் தேவதைக்குரிய கோயில், திருச்சுற்று மாளிகையில் அமைந்துள்ள சன்னிதிகளில் ஒன்றாகும்.

ஆகம விதிப்படி இத்தேவதை, தென்கிழக்கு மூலையில் உள்ள அக்னி தேவ தைக்கும் தெற்கேயுள்ள எமனின் சன்னிதிக்கும் இடையே தென்புறத் திருச்சுற்று மாளிகையில் உள்ள சன்னிதியில் கொலுவிருக்க வேண்டியவள்.

இத்தகைய தேவதையான வராஹிக்கு ஒரு சிறிய மண்டபமும், ஆஞ்ச நேயருக்கு மற்றொரு சிறிய சன்னிதியும் காணப்படுகின்றன இவை பெரிய கோயில் வளாகத்தின் தென் புறத்தில் உள்ளன. இத் திருச்சன்னிதிகள் சமீபகாலத் தில் அமைக்கப்பட்டவையாகும்.

# விமானம்

கோபுரம் என்பது கோவில் நுழைவாயிலின் மீது கட்டப்பட்டுள்ள உயர்ந்த கட்டடப் பகுதியாகும்.

விமானம் என்பது, இறைவன் உருவம் வீற்றிருக்கின்ற உண்ணாழிகை எனும் கருவறையின் மீது காணப்படும் தேர் போன்ற உயர்ந்த கட்டடப் பகுதியாகும்.

## அறிஞர்தம் ஆய்வுரைகள்

மாமல்லைக் கடற்கரையில் ஜலசயனப் பெருமாள் கோயிலிலும் காஞ்சிபுரம் கயிலாய நாதர் கோயிலிலும் வாயில் கோபுரம் சிறியதாகவும் விமானம் உயரமாகவும் கட்டப்பெற்றுள்ளது. ராஜசிம்மப் பல்லவனால் உருவான இவை இரண்டு கோயில்களே 'பழமையான கோபுரங்கள்' உடையன என்பது குறிப்பிடதக்கதாகும்.

சாதாரணமாக, நாம் காணும் கோயில் கோபுரங்கள் மிக உயர்ந்தும், கருவறை மீது அமைந்த விமானங்கள் அதைவிடச் சிறியனவாகவும் அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பு முறை விஜயநகரக் காலத்து கலைமுறையாகும். பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிறகு வந்த கலை.

இராஜராஜ சோழன் காலத்தில் அம்முறை இன்றிக், கருவறை மீது அமைந்த விமானம் மிக உயர்ந்தும், நுழைவாயிலாக வுள்ள கோபுரங்கள் சிறியனவாகவும் அமைந்தன. இதைப் பெரிய கோயிலில் இன்றும் நாம் காண்கிறோம்.

புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான திரு.[2] கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி இக் கோயிலைப் பற்றிக் கூறும்போது,

> 'இக்கோயில், சோழர் காலக் கோவில்களிலேயே மிகச்சிறந்த முறையில் வரையறுக்கப்பட்டுக் கட்டப்பட்ட, தமிழர்களின் கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ள கோயிலாகும்' என்கிறார்.

மேலும் அவர், 'மிகவும் பிரமிக்கத்தக்க அளவில், அதேசமயம் எளிமையுடன் இதன் கலையம்சம் கண் கவரும்படி அமைந்துள்ள' தாகவும் கூறுகிறார்.

மற்றொரு வரலாற்று ஆசிரியரான திரு. பா. வெங்கட்ராமன் அவர்கள் கூற்று:

> 'முதலாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தை நாம் நினைவுகூரும்போது, நம் கண்முன் தோன்றுவது, அவன் செய்த வீரயுத்தங்களோ, வெற்றிபெற்றுச் சேர்த்த நாடுகளோ, அவனது கடற்படைகளோ, அவனது சிறந்த ஆட்சி முறையோ, அவன் அடைந்திருந்த இராணுவ பலமோ அல்ல; ஆனால் இவை யாவிற்கும் மேலாக, சோழர்களின் தலைநகரமாகிய தஞ்சையில் அவன் எடுப்பித்து, இன்றும் அழியாமல் நிற்கும் 'இராஜ ராஜேஸ்வரம்' என்ற சிவாலயமே ஆகும்.

'கற்றளி இராஜராஜேஸ்வரம்' என்று கல்வெட்டுகளில் அழைக்கப்படும் தஞ்சைப் பெரிய கோயில், முதலாம் இராஜராஜ சோழனால் கி. பி. 1003 முதல் 1009க்குள் கட்டி முடிக்கப்பட்டது.

கல்வெட்டின்படி இப் பெரிய கோயிலில் குடிகொண்டுள்ள ஆண்டவனுக்கு 'ஆடவல்லான்' என்று பெயர்.

திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் இக்கோயிலை மிகவும் பொருத்த மான பெயரில், *'தேவாலய சக்கரவர்த்தி'* என்று அழைக்கிறார்.

திரு. பா. வெங்கட்ராமன் என்ற சரித்திர அறிஞரின் கூற்றுப்படி, தஞ்சைப் பெரிய கோயிலையும் சேர்த்து இராஜராஜசோழன் காலத்தில் கட்டப்பட்ட கோயில் கள் ஐம்பத்திரண்டு எனவும், அவற்றில் ஏற்கனவே அமைந்திருந்த செங்கற் களாலான சில கோயில்கள் கருங்கல் கோயில்களாக மாற்றி அமைக்கப்பட்டன எனவும், மற்றும் பல புதிதாகக் கட்டப்பட்டவை எனவும் அறிகிறோம்.

இராஜராஜ சோழனின் இத் தஞ்சைப் பெரிய கோயில், பிற்காலக் கோயில் கட்டடக்கலைக்கு மிகச் சிறந்த முன் உதாரணமாகவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வண்ணம் வரலாற்று அறிஞர் பலராலும் காலந்தோறும் புகழப்படும் இக் கோயிலுக்குள் நாம் நுழைந்து வானளாவி நிற்கும் விமானத்தை நோக்குங்கால், நமது மெய் சிலிர்க்கிறது. வியப்பால் விம்மிதங்கொண்டு மலைத்து நிற்கிறோம்.

எத்தகைய அழகிய முறையில், இத்தகைய கலைநுட்ப வேலைப் பாடுகளுடன் இந்த உயரத்திற்கு, சிறப்பாக அம் மாமன்னனால் இக்கோயிலை எடுப்பிக்க முடிந்தது என்பதை நினைக்கும்பொழுது, நமக்கு எழும் வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

இனிப், பெரிய கோயில் கட்டட அமைப்பு முறையைக் கவனிப்போம்.

29 மீட்டர் சதுரத்தில் அமைக்கப்பட்ட அடித்தளத்தின் மீது கனத்த சுவர்கள் இரண்டு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன. இவ் உயர்ந்த நெடிய சுவரின்மீது, நாற்புறமும் சற்றே உட்புறமாகச் சாய்ந்தவாறு விமானம் 13 நிலைகளாக வானோக்கி உயர்ந்து செல்கிறது. அதன்மேலே 'பிரம்மராந்திரக்கல்' என்ற மூடு கல்லைப் பொருத்தியுள்ளனர். (படம் : பக். 78)

அதற்கும் மேலே எட்டுப் பக்கங்களைக் கொண்ட கழுத்துப் பகுதி (கிரீவம்) அமைந்துள்ளது.

அதற்கும் மேலே *சிகரம்* என்ற தலைப்பகுதி, கலசம் என்ற மேல் பகுதியின் அடியில் குறுகி முடிவுறுமாறு அமைத்துள்ள திறமையினை என்னென்று உரைப் பது! எவ்வாறு வியப்பது!

அண்ணாந்து பார்த்தாலும் ஆயிரமாண்டுக்கு முந்தைய தமிழரின் அறிவியல் கலையை அறிந்து கொள்ள முடியாமல் அதிசயித்து நிற்கின்றோம்! அறுபத்து நான்கு மீட்டர் உயரமுள்ள இவ்விமானம், கோயில் விமானங்களிலேயே மிகவும் உயர்ந்ததாகும்.

**சாரப் பள்ளம்**

தஞ்சையின் ஏழாவது கிலோமீட்டர் தொலைவில் வயலூர்(இவ்வூர் சாரப்பள்ளம் என அழைக்கப்படுகிறது) என்ற இடத்தில் அமைக்கப்பட்ட சாரத்தின் மீது 80 டன் எடையுள்ள இந்த பிரம்மராந்திரக்கல்லை மேலேற்றி, விமானத்தின் உச்சி மீது பொருத்தியதாக அறிஞர் சிலர் கூறுவர்.

ஒரு சிலர் இதன் சிகரப் பகுதிதான் ஒரே கல் என்பர்.

இக்கூற்றுகள் இரண்டுமே தவறானவை.

இக்கோயிலில் நான் பணிபுரியும்போது இவ்விமானத்தின் மேலே செல்லும் வாய்ப்பு பலமுறை எனக்குக் கிட்டியது. அவ்வமயம் நேரில் ஆராய்ந்து பார்த்ததில் இவ்விமானத்தின் மூடுகல்லும் சரி, கழுத்துப் பகுதியும் சரி, சிகரப் பகுதியும் சரி, ஒரே கல்லினால் ஆனதல்ல என்பது உறுதியாயிற்று.

மேற்கண்ட மூன்று பகுதிகளும் பல கற்களை இணைத்தே கட்டப்பட்டுள்ளன.

**உச்சியில் 8 நந்திகள்!**

விமானத்தின் பதின்மூன்றாம் நிலைக்குமேல், கல்பலகை மூடியாக அமைக்கப் பெற்றுள்ளது. அக் கற்பலகைத் தளத்தின்மீது நான்கு மூலைகளிலும், மூலைக்கு இரண்டு வீதம் எதிரெதிராக, அதேசமயம் நேராக நம்மை நோக்குவது போல, பெரிய பெரிய நந்தியெம்பெருமான் கல் உருவங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

இந்த நந்திகள் ஒவ்வொன்றும் ஒரே கல்லினால் ஆனவை.இவைஒவ்வொன்றும் 10 டன் எடையுள்ளனவாகும். ஆகவே இந்த எட்டு நந்திகளின் மொத்த எடை சேர்ந்தால் 80 டன் ஆகிறது. விமானத்தின்மீது இவையே 80 டன் எடையுள்ளன வாக அமைத்துள்ளனர்.

**கலசம்**

சிகரத்திற்கு மேலே உள்ள கலசம், 3. 5 மீட்டர் உயரம் உடையது.

அது 339. 55 கிலோகிராம் எடையுள்ள செப்பு உலோகத்தினால் செய்யப் பட்டுள்ளது; அதன்மீது 2,926 கழஞ்சு எடை (12. 5 கி. கி.) தங்கமுலாம் பூசப் பட்டுள்ளது.

இராஜராஜ சோழனால் தனது 25 ஆவது ஆட்சியாண்டின் 275ஆம் நாள், விமானத்தின்மீது பொருத்துவதற்கென இக்கலசம் அளிக்கப்பட்டது. நாம் இதை அவனது கல்வெட்டின் மூலம் [1] அறிகிறோம்.

1. தெ.இ. க. தொகுதி. 2, எண். 1

## தென் கயிலாயம் (தட்சிணமேரு)

வடக்கேயுள்ள இமயமலை, சிவபெருமானும் பார்வதியும் வாழும் கயிலாயம் என்றும், அது உத்திர (வட) கயிலாயம் என்றும் வழக்கத்தில் கூறப்படுகிறது.

அதேபோன்று தஞ்சாவூர் கோயில் விமானம், ஒரு சிறு குன்றினைப் போன்று தோற்றமளிப்பதாலும் அதன் கிழக்கே சிவன், பார்வதியுடன் பல கடவுளர்சூழச் சிற்பங்கள் (கைலாயக்காட்சிகள்) அமைந்திருப்பதாலும் இந்த விமானத்திற்கு 'தட்சிணமேரு' அல்லது 'தென்கயிலாயம்' என்று வழங்கப்பெற்றது.

இங்குக் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைத், 'தட்சிணமேரு விடங்கர்' என்றும் கல்வெட்டில் அறிகிறோம். 'பிரகதீஸ்வரர்' என்ற வடமொழிப் பெயரும் உண்டு.

## பொறியியல் நுட்பம்

கருவறை என்னும் உண்ணாழிகையைச் சுற்றி அமைந்துள்ள இரண்டு சுவர் களின் இடையே உள்ள இடைவெளிப் பகுதியைப் புதுமுறையாக அமைத்துள்ள னர். இந்த இடைவெளிச் சுவர்களை, மிகச் சிறந்த முறையில் ஓவியக் காட்சிகளை அமைக்கப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

இதற்கு நேராக மேலே அமைத்துள்ள முதல் தளத்திலும் இதே போன்ற அமைப்பினை ஏற்படுத்தியுள்ளனர். இங்குள்ள சுவரில் பரதநாட்டிய முத்திரை களைக் கற்களில் சிற்ப வடிவங்களாகச் செதுக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

## அகன்ற சுவர்கள் !

13 அடி அகலமுள்ள வெளிச்சுவரும் 11 அடி அகலம் உள்ள உள்சுவரும் சுமார் 7 அடி இடைவெளியுடன் தனித்தனியே உயர்ந்து செல்லுமாறு கட்டப்பட்டுள்ளன. இச் சுவர்கள் கருவறையைச் சுற்றிலுமாக அமைக்கப்பட்டுள்ளன. இதே அளவு சுவர்கள் 7 அடி இடைவெளியுடன் முதல் தளமாகவும் அமைக்கப்பட்டிருப்பது வியக்கத்தக்க கட்டடக்கலையாகும். இக் கட்டடக்கலை, பல்லவர்களின் காஞ்சி கயிலாச நாதர் கோயில் உண்ணாழிச் சுவர்களின் அமைப்பிலிருந்து வளர்ச்சி பெற்ற நிலையைக் காட்டுகிறது.

இத்தகைய கட்டடக் கலை நெறியைக் 'சாந்தாரபாணி' என்று கட்டடக் கலைத் துறையினரால் கூறப்படுகிறது. வெளிச்சுவருக்கு வடமொழியில் 'பாகபிட்டி' என்றும் உள்சுவருக்கு 'அந்தர பிட்டி' என்றும் கூறுவர்.

விமானம், வெளியே முழுதும் கற்களால் நிரப்பப்பட்டது போலத் தோன்றி னாலும் உண்மையில் உட்புறம் குடைந்தெடுத்தது போல அமைந்துள்ளது.

விமானத்தின் மொத்த கன எடையும் அதன் கீழ்ப்பகுதியில் உள்ள இரண்டு அகன்ற சுவர்களின்மீது சமமாகப் பிரித்து விடப்பட்டிருக்கிறது.

இத்தகைய அமைப்பினால் விமானத்தின் மொத்த எடையையும் அதன் அழுத்தத்தையும் இரு சுவர்களின்மீது பரவலாகப் பிரித்துக் கட்டடத்தின் உறுதியை நிலை நிறுத்தியுள்ளனர். இந்தப் பொறியியல் நுணுக்கமே விந்தையானதுதான்.

இது மட்டுமா? இதோ மேலும் ஒரு விந்தை!

இம்மாபெரும் கட்டடத்திற்கு சாதாரணமாக, ஆழமான அடித்தளம் அமைதல் வேண்டும் அல்லவா? ஆயின், இங்கு அமைந்துள்ள அடித்தளப் பகுதியின் ஆழம் மிகவும் குறைவேயாகும். (5 அடி அல்லது 10 அடி எனப்படுகிறது.)

அடித்தளம் (கடைக்கால்) அமைந்துள்ளபகுதியின் கீழே பூமியில் 'செம்பாறாங் கல்' என்ற பாறை வகை இயற்கையாகவே உறுதியாய் அமைந்துள்ளது. இதனால் கட்டடத்தின் உறுதி முதலிலேயே நிச்சயிக்கப்பட்டு, அடித்தளத்தின் ஆழம் மிகக் குறைவாக அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பொறியியல் நுட்ப வேலைப்பாடுகளெல்லாம் மிக உயரமான விமானத்திற்கு ஒரு சிறு பழுதும் ஏற்பட வாய்ப்பில்லாமல் இருக்க, முன்னேற்பாட்டுடன் செய்யப்பட்ட செயலாகும். அதை எண்ணும்போது சோழ நாட்டினர் கட்டடக்கலைப் பொறியியலிலும் உயர்ந்த நிலையை அடைந்திருந்தனர் என்பது தெற்றென விளங்குகிறது. அதனால்தான் விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ள வெளிநாட்டார்அனைவரும் வந்து பெரிய கோயிலைப்பார்த்தவண்ணமுள்ளனர்; பார்த்து வியந்து மலைத்து நிற்கின்றனர்.

## விமானத்தின் நிழல்

இவ்விமானத்தின் நிழல் கீழே விழாது என்று கூறும் வழக்கம் ஒன்று உண்டு. ஆனால் அதுசரியல்ல.

பின்பு ஏன் இவ்வாறு ஒரு தவறான, அதேசமயம் இக்கோயிலுக்குத் தேவையற்ற, ஒரு விளம்பரம் பரவியுள்ளது?— என்பது என் நெஞ்சத்தில் நெடுநாளாக இருந்துவரும் கேள்வி!

இதற்குப் பொருந்தினாற்போல நம்மால் ஓரளவுக்கு விடை காண முடியும்.

இக்கட்டடத்தின் உறுதியை உணர்த்த, 'இதன் நிழல்கூடக் கீழே விழாது' என்ற சொல்லே, நாளடைவில் 'விமானத்தின் *நிழல்* கீழே விழாது' என்று ஏற்பட்டிருக்க வேண்டும்.

இயற்கையின் நியதிப்படி சூரிய வெளிச்சத்தில் உள்ள எந்த ஒரு பொருளுக்கும் நிழல் உண்டு. தஞ்சைக் கோயில் விமானமும் இந்த இயற்கை நியதிக்கு விதிவிலக்கல்ல.

தினமும் (சூரிய வெளிச்சம் இருக்கும்போது) காலை வேளையிலும் மாலையிலும் வளாகத்தில் இவ்விமானத்தின் நிழலை முழுதும் காணலாம்.

## விமானத்தில் ஐரோப்பியர் உருவம்

இவ்விமானத்தின் வடபுறம் தொப்பியுடன் கூடிய ஐரோப்பியரது உருவச் சிற்பம் ஒன்று உள்ளது; இது இராஜராஜன் காலத்தியது அல்ல.

தஞ்சை மன்னன் இரகுநாத நாயக்கன், தரங்கம்பாடியில் ஹாலந்து நாட்டினருக்கு, கம்பெனி அமைக்க அனுமதி அளித்தான். அதன் பிறகு தஞ்சைப் பகுதிகளில் ஐரோப்பியர் நடமாட்டம் வளரலானது.

அவர்களது வினோதமான உருவத்தைக் கண்டு மகிழ்ந்த சிற்பிகள், தங்கள் கலைப்பணியில் அவர்களது உருவங்களைச் சேர்த்துக் கொண்டனர். இவ்வாறு பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட சுதைச் சிற்பமே அந்த ஐரோப்பியரது உருவமாகும்.



ஐரோப்பியரது உருவம் அமைந்துள்ள நாசிக்கூடு விமானத்தின் வடபுறம்,

# கோயில் சிற்பங்கள்

## கலைச் சிற்பங்கள்

கட்டடக் கலையைக்கண்டு வியந்து நிற்கும்போதே கோயிலைச் சுற்றியுள்ள கற்சிலைகளும் தம் அழகைக் காண நம்மை அழைக்கின்றன.

பெரிய கோயிலின் வெளிச்சுவரில் கூடுகளிலும் (தேவ கோட்டங்கள்) அதன் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் மிக அழகாகவும் சோழர்காலப் பாணியின் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளன.

## சுதையும் வண்ணப்பூச்சும்

முழுதும் கற்களினாற் செதுக்கப்பட்ட இச் சிற்பங்கள், தம்மீது சுதை மற்றும் வண்ணங்களைத் தாங்கி நிற்கின்றன.

சான்றாக ஆங்காங்கே, குறிப்பாகக் கூடுகளில் உள்ள சிற்பங்கள் மீது சிறிதளவே கனத்தினால் (மெல்லிய) சுதை வேலைப்பாடும் வண்ணப்பூச்சுகளும் இருப்பதைக் காணலாம்.

கருவறையைச் சுற்றி அமைந்துள்ள சுற்று மாளிகையில், மேற்கேயும் வடக்கேயும் அமைந்துள்ள 'சத்யோஜாதம்', 'வாமதேவம்' எனும் சிற்பங்கள் மீது சுதை வேலைப்பாடுகளும் வண்ணப்பூச்சுகளும் இன்றும் உள்ளதை நாம் காணலாம்.

இங்குள்ள கல் சிற்பங்கள் யாவும் மிகவும் வழவழப்பாகச் செதுக்கப்படாமல் சுதைப் பூச்சுக்கள் நன்றாக அவற்றின் மீது ஒட்டிக்கொள்ளுமாறு சற்றே கரடுமுரடாகச் செதுக்சப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.



## தேவகோட்டத்தில் உள்ள சிற்பங்கள்




1 கணபதி
2. ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமால
3. கெஜலட்சுமி
4 5. துவாரபாலகாகள்
6. சூரியன் மற்றும் லிங்கோத்பவர்
7. பிட்சாடனர்
8 வீரபத்திரர்
9. 10. துவாரபாலகர்கள்
11. தட்சிணாமூர்த்தி
12. காலாந்தகா
13. நடராஜா
14. அரியும் சிவனும்
15 லிங்கோத்பவர்
16 17. துவாரபாலகாகள்
18. சந்திரசேகரா
19. (பிரபாவளியுடன) சநதிரசேகரா
20. அர்த்தநாரீஸ்வரா
21. கங்காதரா
22 23 துவாரபாலகர்கள்
24 பாசுபத மூததி
25. ஆலிங்கனமூாத்தி
26 பாசுபத மூததி
27. 28. துவாரபாலகர்கள்
29. சரஸ்வதி
30. மகிஷமர்த்தினி
31. பைரவர்
32. அசோகரர்
34. வாமதேவர்
35 - 38 இராஜராஜனும்
43-46. இராஜேந்திரனும்,
39, 42. துவாரபாலகர்கள்
40. துர்க்கை
41. கணபதி

தெற்குப்புறத்தில் இருந்து கோயிலை வலமாக வந்தால், நாம் காணும் சிற்பங்கள் பெயர் வரிசைப்படி கீழே கண்டு மகிழலாம்.

1. கணபதி, 2.ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமால், 3. கஜலட்சுமி, 4,5. துவார பாலகர்கள், 6.லிங்கோத்பவர், 7. பிட்சாடனர், 8. வீரபத்திரர், 9,10. துவார பாலகர்கள், 11. (பிற்காலத்தில் அமைக்கப்பட்ட படிகளுடன் கூடிய சிறிய கோயிலுக்குள்ளே) தட்சிணாமூர்த்தி, 12. காளாந்தகர், 13, நடராஜர், 14. ஹரி ஹரர் 15. லிங்கோத்பவர், 16, 17. துவாரபாலகர், 18. சந்திரசேகரர் (பிரபாவளி யுடன்), 19. சந்திரசேகரர், 20. அர்த்தநாரீஸ்வரர்,21. கங்காதரர், 22,23. துவார பாலகர்கள், 24. வீரபத்திரர், 25. ஆலிங்கனமூர்த்தி, 26. கையில் சூலத்துடன் சிவ பெருமான், 27, 28. துவாரபாலகர்கள், 29. சரஸ்வதி (இந்த சரஸ்வதியின் வலப் புறச் சுவரில் இரண்டு சிறிய சிற்பங்கள் உட்கார்ந்த நிலையில் காணப்படுகின்றன. அவ் வுருவினர் இராஜராஜ சோழனும் கருவூர்த் தேவரும் ஆவர். 30. துர்க்கை, 31. பைரவர்.

முக மண்டபத்தின் வாயிலில் இருபுறமும் துர்க்கை, கணபதி இருவரும் இடம் பெற்றுள்ளனர்.

### காவலராக அரசர்கள்!

இவர்களின் அருகே இருபுறங்களிலும் பெரிய துவாரபாலகர்கள் உருவங்கள் உள்ளன. இவற்றையடுத்து கைகளில் வாளும் கேடயமும் ஏந்திய அரசர் இருவரது உருவங்கள் அமைத்துள்ளனர்.

வரலாற்று வல்லுநர் சிலரது கூற்றின்படி, இச் சிற்பங்களில் ஒன்று, இராஜ ராஜ சோழன்; மற்றொன்று, அவனது புதல்வனான இராஜேந்திரசோழன் ஆவர்.

இது போன்ற சிற்பங்களை வடபுறத்து மூலையிலும் தென்புறத்து மூலையிலும் காணலாம்.

> இராஜராஜன் கட்டிய இக்கோயிலுக்கு, துவாரபாலகர்களைப்போல் தன்னையும் தன் மகனையும் காவலர்களாகச் சித்திரிக்க வைத்திருப்பதி லிருந்து, இராஜராஜனின் பக்தியுடன் கூடிய பணிவை நாம் அறிந்து மெய்சிலிர்க்க வியந்து நிற்கிறோம். அதைச் சிற்பிகள் நன்கு வெளிப் படுத்தி இருக்கின்றனர் எனலாம்.

அரசர்களைக் காவலர் என அழைக்கும் மரபு நம்மிடையே உண்டு. இராஜ ராஜன் நாட்டையும் மக்களையும் காத்தது போலவே, கோயிலையும் (கட்டிக்) காத் தான் என்று கருதுமாறு இச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

### சிவனின் தோற்றங்கள்

இது தவிர, விமானத்தின் முதல் தளத்தின் வெளிச்சுவர்க் கூடுகளில், முப்புரம் எரித்த சிவபொருமானின் உருவங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. இவையும் இராஜராஜ சோழனை மனதில் கொண்டு செதுக்கப்பட்டவையாக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர் ஒருசிலர் கூறுவர்.

'பிற கடவுளர்களுக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை, அசுரர்களுடன் போரிட்டு முப்புரம் அழித்த திரிபுராந்தகனுக்குக் கொடுத்து, சிற்பங்களிலும் ஓவியங்களிலும் வடித்துள்ளான் இராசராசன். அதற்குக் காரணம், அவன் பல நாடுகளை வெற்றி கொண்டு மிகப் பெரிய வீரனாக விளங்கியதேயாகும்.[1]'

சிறந்த வீரனான இராஜராஜனைச் சிவபெருமானது முப்புரம் எரித்த கோல மான வில்லம்புடன் கூடிய வீரனின் திருக்கோலத்தில் சிற்பிகள் கண்டதாகக் கூறுவது மிகவும் பொருத்தமே.

மூன்று அசுரர்களை எரித்ததால், 'திரிபுரம் எரித்த சிவன்' அல்லது 'திரிபுராந் தகன்' என்ற சிவபிரானது திருநாமத்தை, இராஜராஜனின் 'மும்முடிச் சோழன்' என்ற பட்டப்பெயருடன் சிற்பிகள் ஒப்பிட்டுப் பார்த்திருக்கக்கூடும். அக் கற்பனை யில் உதித்த சிற்பங்களே இவை என்று கூறினால் அது மிகையாகாது.

## படிச்சுவர் சிற்பங்கள்

அர்த்த மண்டபத்தை அடைய அமைக்கப்பட்டுள்ள படிகளிலும் கலையழகைக் காணமுடிகிறது. இதன் இருபுறத்துக் கைப்பிடிச் சுவர்களிலும் புராணக்கதைகளின் சில பகுதிகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் சில அமைந்துள்ளன.

அதிலும் முக்கியமாகத் தென்புறத்துப்படிகளின் கிழக்குச் சுவரில் உள்ள புத்தர் சிற்பத்தையும் அதைப் பற்றிய புராணக் கதையையும் காணலாம்.

கந்தபுராணம், சிவபுராணம் ஆகியவற்றின் கூற்றுப்படி, திரிபுரங்களின் அசுரர் கள் சிவ பக்தர்களாவர்.

சிவவழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்வரை அவர்களைச் சிவபெருமானால் அழிக்க இயலாது. எனவே திருமால், புத்தபிரானின் உருவம்கொண்டு மரத்தடியில் அமர்ந்து அவ்வசுரர்களின் சிவ சிந்தனையை மாற்ற முயற்சி செய்கிறார்.

இக் கதையையொட்டியஇச் சிற்பங்கள் மிகவும் அழகிய, எளிய முறையில் இச் சுவரில் அமைக்கப்பட்டுள்ளன.

வடபுறத்தில் அமைந்துள்ள திரு அணுக்கன் வாயிலின் மேற்புறத்தில் 'அஷ்ட மங்கலம்' எனப்படும் பூசனைக்குரிய கோயில் திருச்சின்னங்கள் எட்டும் அழகிய சிற்பவடிவில் அமைத்துள்ளனர் என்பதை முன்னரே பார்த்தோம்.

இதே படிக்கட்டுகளில் மேற்குப் புறத்தில் நாம் காணும் சிற்பங்கள் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடக்கும் திருமணத்திருக்கோலக் காட்சியாகும்.

மேலே மன்மதனைச் சுட்டெரிக்கும் காட்சி உள்ளது.

---

1. '5000 years of the Art of India', page 257, maris Bussagli & Sivaramamurthi



மரத்தடியில் புத்தர் உருவில் திருமால்!
திரிபுர அசுரர்கள் சூழ்ந்திருக்கும் காட்சி

வடக்குப்புறம் இதே போன்று அமைந்துள்ள படிக்கட்டுகளின் கைப்பிடியின் மேற்குச் சுவரில் தட்சன் செய்யும் யாகமும், சிவன் தட்சனை அழிக்கும் கோலமும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்குப் படிச் சுவரில் சிவபெருமான் அர்ச்சுனனுக்குப் 'பாசுபதாஸ்திரம்' வழங்கும் காட்சி முதலியவை சிறந்த கலையழகுடன் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

இவை தவிர சண்டேசரின் சரிதமும் சிவபெருமான், சண்டேச-அனுக்கிரக மூர்த்தியாய்க் காட்சி அளிக்கும் கோலமும் கண்டு களிக்கக் கண்கள் ரண்டு போதா

## வைணவச் சிற்பங்கள்

வடக்கு வாசல் அருகே கபோதத்தின் கீழ், ஆலிலை மேல் கண்ணபெருமான் பள்ளி கொண்டுள்ள காட்சியும், மற்றொரு இடத்தில் பூதகியைக் கண்ணன். சம்ஹாரம்(அழித்தல்)செய்யும் காட்சியும் சிறப்பாகச் சிற்பவடிவில்அமைந்துள்ளன.





மகிஷாசுர மர்த்தினி
கோயிலின் வடக்குச்சுவர் சிற்பம்



லிங்கோற்பவர்
கோயிலின் மேற்குச் சுவர் சிற்பம்



விக்கிரம சோழன் திருவாயில் - இலக்குமி



திரு அணுக்கன் வாயில் அருகில் சரஸ்வதி



துவார பாலகர், கிழக்கு வாயில்





துவார பாலகர் இருவர்



ஒன்பது வாயில்களில் ஓங்கி உயர்ந்து காணும் துவாரபாலர்களில், ஐந்து சிலைகளை இங்கே காணலாம்.



யானையை விழுங்கும் பெரும் பாம்பு காலடியில் இருப்பதைக்கொண்டு துவாரபாலகரின் நெடி தோங்கிய உருவை நினைத்துப் பார்க்கச் செய்துள்ளார் சிற்பி.

பெருவுடையார் சன்னிதியில் கோமுகம் பூதகணம் தாங்கி நிற்கும் அருமை!





சிவபெருமான் சண்டேசுரருக்குப் பரிவட்டம் கட்டி அருளுதல்

**விமான வடபுற வாயில் சுவரில் காணப்படும் காட்சி. இராஜராஜனும் கருவூர்த் தேவரும் என்று கருதப்படுகிறது.**





கருவூர்த் தேவரும் இராஜராஜனும் (ஓவியத்தின் அமைப்பு)



விமானச் சுவர்களில் அமைந்துள்ள அழகிய கும்ப பஞ்சரம்.



முருகன் கோயிலின் கலை எழில் மிக்க கோமுகமும்
அதில் வரும் திருமஞ்சனநீரைத் தாங்கும்
சிற்ப வேலைப்பாடுள்ள தொட்டியும் (நாயக்கர்காலக் கலை)









அதிட்டானம் எனும் நிலைக்களத்தின் மேல் முகப்புகளாக உள்ள சிற்பத் தோரணங்கள் !

பூதகண வரிசை, யாளி வரிமானம், குமுதப்படைகள் முதலான அமைப்புகளுக்குத் தலைமையாக அமைந்துள்ள மகரமீன் வாய்க்குள் போரிடும் வீரர் உருவம், சிங்கவீரர் வரிசை, முதலான காட்சிகள்.



முக மண்டபத்தின் கூரை முகப்பில்
மரவேலைப்பாடு போன்று கல்லில் செதுக்கியுள்ள
கலை எழில் மிக்க கொடுங்கை !



வனப்புடைய
பூதகணம்

## கண்ணில் படாத சிற்பங்கள் !

உண்ணாழிகையை (கருவறையை)ச்சுற்றிலும் அமைந்துள்ள ஓவியஅறைகள் ஒவ்வொன்றிலும் மூடுதளத்தின் அருகில் நாற்புறமும் அதிசயிக்கத்தக்க அழகிய சிற்பங்கள் பல அமைந்துள்ளன. இவற்றில் பலவகையான இசைக் கருவிகளும், தாள வாத்தியங்கள் இசைப்பவர்களும், மற்றும் பலவிதமான முத்திரைகளில் நடனம் புரியும் மாதர்களும் காணப்படுகின்றனர்.

இவ்வழகிய சிற்பங்கள் யாவும் மூடுதளத்தின் அருகே உயரத்தில் அமைந் துள்ளதாலும் அங்குப் போதிய வெளிச்சம் இன்மையாலும் சாதாரணமாய்க் காண முடிவதில்லை.

இச் சிற்பங்கள் யாவும்1970இல் இவ்வுண்ணாழியில் திருப்பணிசெய்யும் சமயம் 'இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை'யினரால் (இந் நூலாசிரியரால்) கண்டு பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அரிய சிற்பங்கள் யாவும் இப் பெரிய கோயிலின் சிற்பக் கலைக் கடலில் சேரும் சிறுசிறு துளிகளாக விளங்குகின்றன,

# நெஞ்சில் நிறுத்துங்கள்!

1. கோயிலைக் கட்டிய மன்னன் : இராஜராஜன் (கி. பி. 985—1014)

2. கோயில்கட்ட ஆரம்பித்த வருடம் : கி. பி. 1004 (அரசனின் 19 ஆவது ஆட்சி ஆண்டு)

கட்டி முடிக்கப்பட்ட வருடம் : கி. பி. 1010 (அரசனின் 25 ஆவது ஆட்சி ஆண்டு

4. கல்வெட்டுகள் செதுக்கிய தேதி : கி. பி. 1011 முதல்

5. கட்டடக்கலை வல்லுநர்கள் :
   1. வீரசோழன் குஞ்சரமல்லன் எனும் இராஜராஜன் பெருந்தச்சன்
   2. நித்தவினோத பெருந்தச்சன்
   3. கண்டராதித்ய பெருந்தச்சன்
   4. குணவன் மதுராந்தகன்

6. கல்வெட்டில் கோயிலின் பெயர் : ஸ்ரீ ராஜராஜீஸ்வரம்

7. குடமுழுக்கு நடந்த வருடம் : கி. பி. 1010 (மன்னனின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டின் 275ஆவது நாள்)

8. முக்கிய தேவதைகள் : பெருவுடையார்எனும்பிரகதீஸ்வரர்
   பெரியநாயகிஎன்னும் பிரகந்நாயகி

9. வகை : மாடம் (மேரு விமானம்)
   திராவிடக் கலை.

10. முக்கிய வாசல்கள் (கல்வெட்டில் உள்ளபடி) : கேரளாந்தகன் திருவாசல்
    இராஜராஜன் திருவாசல்
    விக்ரம சோழன் திருவாசல்
    திரு அணுக்கன் வாசல்



| | | |
|---|---|---|
| 11. | பரப்பளவு கோட்டை மதில் உள்பட | : 244 மீட்டர் நீளம், 122 மீட்டர் அகலம். 29, 762 ச. மீ. |
| 12. | முக்கிய விமானம் | : 'தக்ஷிணமேரு' 13 நிலைகளைக் கொண்டது. 66 மீட்டர் உயரம், கீழே29 மீட்டர் சதுரம், இருநிலை கருவறை அமைப்பு. |
| 13. | பிரம்மராந்திரக் கல் (விமானத்தின் உச்சியில் கழுத்துப் பகுதியின் அடிப்பாகம் - மூடுபலகை) | : ஒரே கல்; 80 டன் எடையுள்ளது என்ற பரம்பரைக் கூற்று தவறானது; 7 கி. மீ. தூரமுள்ள வயலூர் என்னும் ஊரிலிருந்து சாரம் அமைத்து மேலேற்றப்பட்டது. அது சாரப்பள்ளம் என்று இப்பொழுதும் வழங்கப் படுகிறது. |
| 14. | கலசம் | : 3. 50 மீட்டர் உயரம். 339. 55 கிலோ எடையுள்ள செப்பினால் செய்யப்பட்டது. 2926½ கழஞ்சு, எடை தங்கமுலாம் பூசப்பட்டது (12. 80 கி. கி.) |
| 15. | கலசம் பொருத்தப்பட்ட நாள் | : அரசனின் 25 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் 275 ஆம் நாள் இக் கலசம் பொருத்தப்பட்டது. |
| 16. | நந்தியம்பெருமான் | : நாயக்கர் காலத்தியது. ஒரே கல்லில் ஆனது. உயரம் 3.66 மீ., நீளம் 5. 94. மீ. அகலம் 2. 51 மீ. |
| 17. | கோயிலின் பாகங்கள் | : கருவறை (திருச்சுற்றுடன் கூடியது), அர்த்தமண்டபம், மஹாமண்டபம், நர்த்தன மண்டபம், முகமண்டபம். |



| | | |
|---|---|---|
| 18. | துவார பாலகர்கள் | : முக்கிய துவாரபாலகர் ஒன்பது ஜோடிகள். ஒவ்வொன்றும் 5. 48 மீ. உயரம்; 2.50 மீ. அகலம். |
| 19. | பொன் நகைகள் கொடுத்தது. | : 22 கி. கிராம் (10, 200 காசு) |
| 20. | தங்கப் பாத்திரங்கள் | : 41,559 கழஞ்சு (182 / 60 கிலோ) |
| 21. | வெள்ளிப் பாத்திரங்கள் | : 50,650 கழஞ்சு (222 / 86 கிலோ) |
| 22. | கோயில் பணியாளர்கள் | : 985 பேர்கள்; அவர்களில் 400 பேர் 'தளிப்பெண்டுகள்' எனப்படும் தேவரடியார்கள் ஆவர். |
| 23. | விமானத்தின் நிழல் | : தரையில் விழுகிறது. |
| 24. | ஓவியங்கள் | : கருவறையைச் சுற்றியுள்ள அறைச் சுவர்களில் உள்ளன. சோழர் கால ஓவியங்கள், நாயக்கர்கால ஓவியங்கள் ஆகிய இரண்டும் உள்ளன. |
| 25. | பரதநாட்டிய முத்திரைகள் காட்டும் சிற்பங்கள் | : பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் : என்ற நூலின்படி மெத்தம் 108 முத்திரைகளில் 81 மட்டும் சிற்பங்களாக முடிவு பெற்றுள்ளன. இவை விமானத்தின் முதல் நிலைத் திருச்சுற்றின் (முதல் தளம்) உள் சுவர் ஓரமாக அமைந்துள்ளன. |



# சோழர்கால வண்ண ஓவியங்கள்

## கோட்டுருவம்



விமானம்



இராஜராஜனின் தேவியரில் மூவர்



அணிமணிகளும் ஆடைக்கட்டுகளும்





கந்தர்வக் கலைக் குழுவினர்



இராஜராஜனின் மெய்க்காவலர்.
இடையில் வட்டுடையும்
மேலே சட்டையும்
அணிந்துள்ள காட்சி

வெள்ளை யானைமீது சுந்தரமூர்த்தி நாயனாரும் குதிரைமீது சேரமான் பெருமாளும் கயிலை செல்லும் காட்சி,



### புதிய காட்சி

கருவறையின் சுற்றுப்புறம் அமைந்துள்ள திருச்சுற்றின் இருபுறச் சுவர்களிலும் சோழர் கால ஓவியங்கள் உள்ளன. அதன்மீது பிற்காலத்தில் நாயக்கர் கால ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. இப்பகுதியில் இவ்வோவியங்கள் இருப்பதே தெரியாமல் இருந்து வந்தது அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த திரு. எஸ். கே. கோவிந்தசாமி என்பவர் 1951 ஆம் ஆண்டு இவற்றைக் கண்டு பிடித்தார். அதன் பிறகுதான் இங்குள்ள ஓவியங்களைப்பற்றி அறிய நேர்ந்தது.

### பராமரிப்புப் பணிகள்

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இக் கோயிலைத் தங்கள் பராமரிப்பின் கீழ் எடுத்துக்கொண்ட பின்பு, இங்குள்ள ஓவியங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டனர். அவ்வகையில் கருவறையிலிருந்து இதன் உள்ளே செல்லும் புகையைத் தடுக்க, முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்குள்ள சோழர் காலத்து ஓவியங்களின் மீதே தஞ்சைநாயக்கர் காலத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன.

பின்பு இராசயன முறையில், நாயக்கர்கால ஓவியங்களைச் சீராக்கும்போது தான் அவற்றிற்கும் உள்ளே சோழர்கால ஓவியங்கள் மறைந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மிகுந்த முயற்சியினால் அவை வெளிக்கொணரப்பட்டன.

### ஐயம் தரும் நிலை

கருவறையிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் முதல் நான்கு அறைகள் வரை சோழர்கால ஓவியங்கள் ஏதும் காணப்படவில்லை.

ஒருவேளை, நாயக்கர் காலத்தில் அவை முழுதுமாக நீக்கப்பட்டு வேறு ஓவியங்கள் (அவர்களால்) வரையப்பட்டனவா, அல்லது சோழர் காலத்திலேயே இவ்விடங்களில் ஓவியங்கள் தீட்டப்படவில்லையா என்ற கேள்விகளுக்கு இப்பொழுது விடை காண்பது கடினம்.

### ஓவிய முறை

இங்குள்ள சோழர்கால ஓவியங்கள் 'ப்ரஸ்கோ' (Fresco) எனும் முறையைச் சார்ந்தவை. அதன்படி சிறிதளவு கனத்தில் சுண்ணாம்புக் கலவையைச் சுவரின்மீது பூசவேண்டும். அக்கலவை உலர்வதற்குள் பச்சிலை மூலிகையால் தயார் செய்யப் பட்ட வண்ணக் கலவையினால் ஓவியம் தீட்டப்படவேண்டும்.

அதாவது ஓவிய வண்ணக் கலவையும், சுண்ணாம்புக் கலவையும் ஒன்றாகச் சேர்ந்து உலர்தல் வேண்டும்.

இப்படிச் செய்வதால் வண்ணக் கலவை சுண்ணாம்புப் படலத்தில் ஊடுருவிச் சென்று நெடுநாள்வரை பழுதாகாமல் இருக்கும். அது மட்டுமன்றி, வண்ண மாற்றமும் ஏற்படாது. இம்முறையில் அமைந்த இங்குள்ள சோழர்கால ஓவியங் களைக் காண வாசகர்களை நாம் அழைத்துச் செல்கிறோம்.

### *நாயக்கர்கால ஓவியங்கள்*

முன்னரே கூறியபடி, முதல் அறையில் உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. இங்கு மேற்குச் சுவரின்மேலே உள்ள ஓவியம் வேடன் கண்ணப்ப னைப் பற்றியது.

□ வேடுவன்(இவரே பின்பு கண்ணப்ப நாயனார் என்ற சிவனடியார் ஆகிறார்) ஒருவன், தன் காலால் சிவனதுஇரத்தம் வடியும் கண்களை அடையாளம் வைத்துக் கொண்டு, அம்பினால் தன் இரண்டாவது கண்ணைப் பெயர்த்தெடுப்பது போல உள்ள இவ்வோவியம் மிகவும் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளது.

அண்மையில் அச் சித்திரத்தின் கீழே கண்டுபிடிக்கப்பட்ட, தெலுங்கில் உள்ள எழுத்துக்களில் *'அப்பல பெத்ரல ராமையா ராசின சிதருலு'* என்றுள்ளது. இதன் மூலம் இவ்வோவியங்களை வரைந்தவரின் பெயர் பெத்ரலராமையா என்று நமக்குத் தெரிகின்றது.

எதிர்ச் சுவரில் இதே போன்று உள்ள அக்காலத்தெலுங்கு எழுத்துக்களில், நாயக்க மன்னர்களின் பெயர்களான செவப்பா, அச்சுதப்பா, ரகுநாதர் என எழுதப்பட்டுள்ளது.

### *கடல்கடையும் காட்சி*

இரண்டாவது ஓவிய அறையில், வடக்கு நோக்கி இருக்கும் சுவரில் தேவர் களும் அசுரர்களும், வாசுகி என்ற அரவத்தைக் கயிறாகவும், மேருமலையை மத் தாகவும் கொண்டு பாற்கடலைக் கடையும் காட்சி மனதைக் கவரும் வண்ணம் அமைத்துள்ளது.

□ இதன் அருகே, மேற்கு நோக்கி சுவரில்,தேவர்களும்அசுரர்களும்திருப்பாற் கடலைக் கடையும் சமயம், அதிலிருந்து வெளிவந்த ஐராவதம் (யானை) உச்சஸ்வம் (குதிரை), காமதேனு (பசு), கற்பக விருக்ஷம் (கற்பக மரம்), லட்சுமி முதலானவை காணப்படுகின்றன.

### *ஒரு போர்க் காட்சி*

□ மூன்றாவது ஓவிய அறையில் வடக்கு நோக்கிய சுவரில், பராசுரர் என்ற முனிவர் பூஜையும் தவமும் செய்தலும், தெற்கு நோக்கிய சுவரில் துர்க்கையும் திருமாலும், தஞ்சன், தாரகன், தாண்டவன் ஆகிய மூன்று அசுரர்களை வதம் செய்யும் காட்சி அமைந்துள்ளது,

நான்காவது அறையில் சிவபெருமான் தனது ஐந்து அம்சங்களில்[1] ஒன்றான 'அகோரம்' என்ற நிலையில் சிலை வடிவத்தில் அமர்ந்த கோலத்தில் கம்பீரமாக காட்சியளிக்கிறார்.

**புலனாகாதவை**

ஐந்தாவது ஓவிய அறையில் தெற்கு நோக்கிய சுவரில், நாம் காண இருப்பது. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் வெளிக்கொணரப்பட்ட சோழர் கால ஓவியமாகும்.

சிதைந்த நிலையில் உள்ள இந்தச் சுவர் ஓவியத்திலிருந்து முழுமையாக நாம் எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. எனினும், ஆங்காங்கே உள்ள உருவங் களைத் தனித்தனியாக அறிய முடிகிறது.

முதலாவதுதாக, சிவரின் மேற்பகுதியில் சிவபெருமானும் பார்வதியும் நடுவில் யில் முருகனுடன் அமர்ந்திருக்கும் காட்சியான சோமாஸ்கந்தர் எனும் ஓவியம் ஆகும்.

**திருக்கோலம்**

அந்தப் பகுதியின் கீழ், சற்றே கிழக்காகச் சிவபெருமான் பைரவர் கோலத்தில் காணப்படுகிறார். அவரது அருகில் நாய் ஒன்றும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

**உயிரோவியங்கள்**

இவ்வோவியங்களுக்குக் சற்றுக் கீழ் நாம் காண்பது-ஒரு வனத்தின் தோற்றம் போல உள்ளது. அதன் நடுவே உள்ள மிகப் பெரிய மரம் ஒன்றின் கிளைகளில் பறவைகள், குரங்கு, மயில், அணில், பாம்பு முதலியவற்றைக் காண்கிறோம்.

பாம்பைக் கண்டு குரங்கு பயந்து ஓடுவது போன்று தீட்டப்பட்டுள்ள அழகிய ஓவியம் உயிர்கொண்டு நம்முடன் உரையாடுவது போன்றுள்ளது.

இம்மரத்தின் இருபுறமும் குறைகள் பல காணப்படுகின்றன. அவற்றில் சில குகைகளில் சிங்கம், யானை, குரங்கு போன்றவை இருப்பதுபோலவும் மற்ற குகை களில் முனிவர் சிலர் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.

---

1. ஆகமம் தெரிந்த அறிஞர்கள் பலர், இக்கோயிலில் சிவபெருமானின் ஐந்து அம்சங் களும் ஒருங்கே அமைந்திருப்பதாகக் கூறுவர். அவை 1, தத்புருஷம் (மூலவிக்கிரகமான இலிங்கவடிவம்) 2. ஈசானம் (விமானம்), மற்றும் அகோரம், சத்யோஜாதம், வாம தேவம் இவை மூன்றும் சிலை வடிவத்தில் கருவறையைச் சுற்றி முறையே தெற்கு, மற்றும் வடக்குப் பகுதிகளில் அமைந்துள்ளன என்பர்,

*அரிய சித்திரங்கள்*

□ இவ் ஓவியங்களின்கீழே நாம் காணும் மிகப் பெரிய உருவம், ஒரு முனிவர் தான். ஆனால் அவர் யார் என்று தீர்மானிப்பதுதான் கடினமாக உள்ளது. பொதுவாகத் தென்திசைக் கடவுளான தட்சிணாமூர்த்தி என்றே கருதுகின்றனர்.

□ தலையில் ஜடாமகுடமும், தாடியுடன் கூடிய முகமும், பருத்த வயிறும் கொண்டு நடுவே இம்முனிவர் அமர்ந்திருக்க, இவரை நோக்கியபடி வலது பக்கம் இராஜராஜ சோழன் கருவூர்த் தேவருடன் நிற்பது போன்ற காட்சியும், இடது புறத்தில் இரண்டு அரசகுலப் பெண்கள் அமர்ந்திருப்பது போன்று அமைந்துள்ள காட்சியும் நம் கண்களையும் கருத்தையும் கவர்கின்றன.

*பிற்காலம்*

ஆறாவது ஓவிய அறையில் நாயக்கர் காலச் சித்திரங்களே காணப்படுகின்றன.

*மாபெரும் காட்சி*

□ ஏழாவது ஓவிய அறைக்குள் சென்றால், மேற்கு நோக்கியுள்ள சுவரில் உள்ள ஓவியம் நம்மை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் அமைந்துள்ளது. நால்வரில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களின் சரித்திரக்காட்சி இச் சுவர் முழுவதையும் அலங்கரிக்கிறது.

இது கீழ்ப்பகுதி, இடைப்பகுதி, மேல்பகுதி என மூன்று நிலைகளில் வரையப் பட்டுள்ள மாபெரும் ஓவியம் ஆகும்.

கீழ்ப்பகுதியில் சுந்தரரின் திருமண ஏற்பாடுகளும், திருமண வீட்டில் குழுமி இருக்கும் உற்றார் உறவினர்களும், மற்றும் சமையல் ஏற்பாடுகளும்கூட மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டு இருக்கின்றன.

சற்றே இடப்புறம் நாம் காண்பது, வயதானவர் உருவத்தில் வந்துள்ள சிவபெருமான்! அவர் தன் இடது கையில் குடையுடனும், வலது கையில் ஓலைச் சுவடியுடனும் சுந்தரரைத் 'தடுத்தாட்கொள்ளும்' காட்சியாகும்.

இதற்கு இடதுபுறம், திருவெண்ணெய்நல்லூர்க் கோயிலும் அங்குச் சிவபெருமானால் 'எனக்கு நீ அடிமை' என்று கூறி அழைத்துவரப்பட்ட சுந்தரரும், கருவறை உள்ளே நுழைந்து மறையும் தறுவாயில் உள்ள சிவ பெருமானும் காட்சியாக்கப்பட்டுள்ளனர்.

*கலை விருந்து!*

□ இதற்கு மேலே உள்ள இடைப்பகுதியில் நம்மைக் கவரும் ஓவியம் சுந்தர மூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் கயிலை செல்லும் காட்சியாகும்.

சுந்தரர் ஆறு தந்தங்களைக் கொண்ட வெள்ளையானை (ஐராவதம்) மீதும் சேரமான்பெருமாள் நாயனார் வெள்ளைக்குதிரை மீதும் அமர்ந்து கடல்தாண்டிச் செல்வது போன்றமைந்த இக்காட்சி மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

□ மேகத்தின் இடையே தோன்றும் கந்தர்வர்கள் இவர்களை வாழ்த்திப் பூமாரி பொழிவதையும் காணலாம். இதற்குச் சற்றே இடப்பக்கம் கந்தர்வக் கன்னி யொருத்தியின் 'திரிபங்க' நடனம், நம் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது.

□ சுந்தரர் அமர்ந்துள்ள யானையின் வாலைப் பிடித்தபடி அவருடன் கயிலைக் குச் செல்லும் முனிவர் ஒருவரின் உருவமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இவர், இந்த ஐராவதம் என்ற யானையுடன் சுந்தரரை அழைத்துச் செல்ல வந்தவர் என்றும், திரும்பச்செல்லும்போது சுந்தரருக்குச் சமமாகத் தானும் யானை மேல் அமர்ந்து செல்வது சரியாகாது என்பதால், அதன் வாலில் தொங்கியபடி உடன் செல்கிறார் என்றும் அறிஞர் சிலர் கூறுவர்.

□ மேல்பகுதியில் நாம் காண்பது கயிலாயக் காட்சி. புலித்தோலின் மீது சிவபெருமான் பார்வதியுடன் அமர்ந்து இருக்கின்றனர். நந்தியும் பூதகணங்களும் சூழ, நடுவில் மாதர் இருவர் நடனம் புரிய, அதற்கேற்பத் தாள வாத்தியங்கள் ஒலிக்க, எதிரே சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் அமர்ந்து ரசிப் பதைப் போன்றமைந்துள்ளது. கண் நிறைந்த இக் காட்சியைக் காணும்போது, நாமும் இக் கயிலையில் இவர்களுடன் இருந்து ரசிப்பதுபோன்ற பிரம்மை நமக்குள் ஏற்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

*நடன நாயகர்*

□ எட்டாவது ஓவிய அறையில் சத்தியோஜாதம் என்ற சிவபிரானது நடனச் சிற்பம் மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளது. வலதுபுறம் திருமால் மத்தளம் கொட்ட, இடதுபுறம் பார்வதி நின்றிருக்கச் சிவபெருமானது இந்த நாட்டியக் கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

*தில்லையம்பலக் காட்சி!*

□ ஒன்பதாவது ஓவிய அறையில், மேற்கு நோக்கிய சுவரில் நாம் காண்பது, (அக்காலத்) தில்லைநடராஜர் கோயிலின் தத்ரூபமான காட்சியாகும். கோயிலின் நான்கு புறத்திலும் நான்கு நுழைவாயில்களும், பராந்தக சோழனால் அமைக்கப் பட்ட பொற்கூரை மண்டபத்தின் நடுவில் தில்லை ஆடற்கூத்தனாம் நடராஜர் எனும் 'ஆடவல்லான்' நடம் புரிய, அவர் பாதத்தின் அருகே 'பிங்கி' என்ற காளியும் 'காரைக்கால் அம்மையாரும்' இருக்கும் காட்சி, நம்மை தில்லைக்கே அழைத்துச் செல்கின்றது.

### ஆடை, அணி வகைகள்

□ இடதுபுறம் அரசியர் மூவருடன் கைகூப்பி வணங்கி நிற்கும் இராஜராஜ சோழனும் மற்றும் படைவீரர்கள் முதலானோரும் மிக இயற்கையாக வரையப் பட்ட வண்ணச் சித்திரங்களாகும்.

இத்தகைய அற்புதமான ஓவியக் காட்சியில் படை வீரர் சிலர் அணிந்துள்ள மேல் சட்டைகள் தற்காலத்தில் உள்ள 'புஷ் ஷர்ட்' என்ற மேலங்கியைப் போன்றுள்ளது. பிற்காலத்திய உடை நாகரிகத்தைப் போலவே அக்காலத்திலும் இருந்துள்ளதை இவ்வோவியத்திலிருந்து நாம் கண்டு வியந்து மகிழ்கின்றோம்.

□ இதன் எதிர்ச் சுவரில், இக்கோயிலில் நடக்கும் திருவிழா ஒன்றினைச் சித்திரிக்கும் காட்சியினைக் காணலாம்.

### குடமுழக்கு விழா!

அலங்காரம் செய்யப்பட்ட 'ஆடவல்லான்' எனும் இலிங்க வடிவமான சிவபெருமான் நடுவே உள்ள மண்டபத்தில் கொலுவிருக்க, எதிரே 'தளிப் பெண்டுகள்' நடனமாட, சுற்றிலும் மக்கள் வெள்ளம் சூழ்ந்திருக்க, வலதுபக்கம் மிகப் பெரிய உருவத்தில் இராஜராஜன் வீற்றிருக்க, அருகில் கீழே வரிசையாய் அவனது பதினான்கு அரசியர்களும் அமர்ந்திருக்க, உடன் அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் சூழ்ந்திருக்கும் இவ்வோவியம், இக்கோயிலில் நடந்த குடமுழுக்கு விழாவை நாம் காண்பதுபோன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

### யாரோ, இவர் யாரோ?

□ பத்தாவது ஓவிய அறையில் வடக்கு நோக்கிய சுவரில், நம்மைப் பிரமிக்க வைக்கும் உருவங்கள் இராஜராஜ சோழனும் அவனது குருவான கருவூர்த் தேவரும் ஆவர். இவ் வுருவங்களில் ஐயப்பாடும் தெரிவிக்கின்றனர். மாமன்னரும் இளவரசரும் என்பது ஒரு கருத்து.

□ மேலே கைகூப்பிய முனிவர்களும், அடுத்த சுவரில் நடனப் பெண்மணிகளுடன் தாளக் கருவிகளுடன் சங்கீதம் பாடும் பெண்டிரும் ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளனர்.

### தேடல் தொடர்கிறது!

□ கிழக்கு நோக்கிய சுவரில் காணப்படுவது சமீபத்தில் புதிதாகக் கண்டு வெளிக் கொணரப்பட்ட கலியாணசுந்தரர் ஓவியம் ஆகும். இவ் வோவியம் இன்னும் முழுமையாக சுத்தம் செய்து வெளிக் கொணரவில்லை.

அழகிய கிரீடமகுடத்துடன் சில தலைப்பகுதிகள் மட்டும் தெற்கு நோக்கிய சுவரில் நமக்குத் தெரிகின்றன. ஆனால் அவை இன்னதென்று அறிய முடியாமல் இருக்கின்றன.

## திரிபுரம் எரித்த காட்சி

பதினொன்றாவது ஓவிய அறையில் வடக்கு நோக்கிய சுவரில், நம்மைப் பிரமிக்க வைக்கும் காட்சி, முப்புரம் எரித்த சிவபெருமானுடைய திருக்கோலம் ஆகும்.

நடுவேயுள்ள சிவபெருமான் எட்டுக் கைகளிலும், வில் அம்பு மற்றும் பல ஆயுதங்களுடனும், முகத்தில் கோப பாவத்துடனும் தேரின்மேல் நின்று இருக்கும் போர்க்கோலக் காட்சி, நம் மனதில் உண்மையிலேயே அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தாரகாசுரர்களின் மைந்தர்களான வித்யான்மாலீ, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற மூன்று அசுரர்கள், தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தீமை இழைத்து வந்தான்.

அத் துன்பத்தைத் தாங்கமுடியாது, தேவர்களின் அதிபதியான இந்திரன், அவ்வசுரர்களுடன் போரிட்டான். அவனது வஜ்ராயுதமும் அவர்களை அழிக்க முடியாமல் திரும்பியது.

பிறகு தேவர்கள், பிரம்மாவிடம் முறையிட, பிரம்மா சிவனது உதவியை நாட, இம்மூன்று அசுரர்களையும் அழிக்க சிவபெருமான் போர்க்களம் நோக்கிப் புறப்படுவதே இத் திரிபுர சம்ஹாரக் காட்சியாகும்.

புராணப்படி பூமியே தேராகவும், நான்கு வேதங்கள் நான்கு சக்கரங்களாகவும் உள்ளன. சிலர், சூரியன் மற்றும் சந்திரன் இருவரும் இரண்டு சக்கரங்களாக உள்ளனர் என்பர்.

படைப்புக் கடவுளாம் பிரம்மன் தேரோட்டும் சாரதியாகவும், நந்தியம் பெருமான் தேரை இழுக்கும் வாகனமாகவும் காணப்படுகின்றனர்.

திருமால், அக்னி, யமன் உடன் சேர்ந்து அம்பாகவும், பக்கத்தில் சிங்கத்தின் மீது அமர்ந்த காளியும், மூஞ்சூறு வாகனத்தின் மேல் அமர்ந்த விநாயகரும், மயில் மீதமர்ந்த முருகப்பெருமானும் உடன் செல்வதாக அமைக்கப்பட்டுள்ள இவ்வோவியம், நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. எழுத்தாளனின் கருத்தை வண்ணத் தூரிகையால் வனப்புறக் காட்சியாக்கியுள்ள சித்திரக் கலைஞர்களின் சீரியக் கலைத்திறனைப் புகழவும் திறனின்றி வாய்மூடி நிற்கிறோம் நாம்.

சிவபெருமான் தனது புன்சிரிப்பினாலும் நெற்றிக் கண்ணைத் திறந்தும் திரிபுர அசுரர்களை எரித்ததாகப் புராணம் கூறுகிறது. முடிவில் மூன்று பாணங்களைச் செலுத்தி அம்மூன்று அசுரர்களையும் அழித்ததாகவும் கூறப்படுகிறது.

## இராவணன் அகந்தை அழிதல்

இதன் எதிர்ச்சுவரில் மிகவும் சிதைந்து போன நிலையில் உள்ள சோழர்கால வண்ண ஓவியம் நம்மைத் தடுத்து நிறுத்துகிறது.

□ இராவணன், தனது பத்துச் சிரங்களுடன் கயிலாய மலையைப் பெயர்த்து எடுக்கும் காட்சியாகும்.

கயிலாயத்தில் பார்வதியுடன் யோகத்தில் ஆழ்ந்திருக்கும் சிவபெருமானைத் தரிசிக்க வந்த இராவணனை நந்திகேஸ்வரர் தடுத்து நிறுத்தியதால், கோபமுற்ற இராவணன், கயிலை மலையையே பெயர்த்தெடுக்க முற்பட்டான்.

கயிலாய மலையில் சிவபெருமானுடன் அமர்ந்திருந்த பார்வதி, எதிர்பாராமல் திடீர் என்று தாங்கள் அமர்ந்துள்ள மலை ஆட்டங்கண்டதனால், சற்றே அச்சம் கொண்டு, சிவபெருமானைத் தழுவிக்கொள்ளும் காட்சி, இங்கு இயற்கையாக, உணர்ச்சி பொங்கத் தீட்டப்பட்டுள்ளது.

சிவபெருமானின் கழுத்தில் ஆபரணமாக இருந்த நாகம், அருகிலுள்ள பூத கணங்கள், முனிவர் முதலானோர், மலையின் ஆட்டத்தினால் கீழே விழுவதுபோல அமைந்துள்ள இவ் ஓவியம், மிகவும் அற்புதமாக வரையப்பட்டுள்ளது.

யோகம் கலைந்து, நிலைமையை உணர்ந்த சிவபெருமான் தனது கால் கட்டைவிரலால் மலையைச் சற்றே அழுத்தினார்.

அதனால் இராவணன் மலையைப் பெயர்த்தெடுக்க முடியாமல் போனது மட்டுமல்ல, அதன் அடியில் அகப்பட்டுத் துடித்தான்.

பின்பு அவன் தன் தவறை உணர்ந்து சிவபெருமானைத் துதிக்க, அவரும் மனமிரங்கி இராவணனுக்கு அருள் புரியலானார். இடதுபக்கம் உள்ள காட்சியில் கைகூப்பிய நிலையில் இராவணன் சிவபெருமானை வணங்கி, அவரது அருளைப் பெறுகிறான். சிவபெருமானும் 'இராவண அனுக்கிரஹ மூர்த்தியாக'க் காட்சி யளிக்கிறார்.

□ பன்னிரண்டாவது அறையில் நாம் காணும் சிறபம் 'வாமதேவம்' என்ற சிவபெருமானது அம்சமாகும்.

பத்மாசனத்தில் அமர்ந்துள்ள இச் சிற்பம், வலது கையில் துளசிமாலையைப் பற்றியுள்ளது. அது கலைமகள் அம்சத்தை உணர்த்துவதாகும். இடது கையில் கொண்ட தாமரைப்பூ, திருமகள் அம்சத்தை உணர்த்துவதாகும்.

'வாம' என்றால் இடப்புறம் என்று பொருள். சிவபெருமானது இடப்புறத்தில் உமையன்னை இருக்கின்றாள்,

ஆகவே இச்சிலையில் முப் பெருந் தேவியரையும் சேர்த்துச் சிவபெருமான் 'வாமதேவம்' என்ற உருவில் இருப்பதாகக் கூறுவர்.

□ அடுத்த அறையில் உள்ள ஓவியங்கள் யாவும் நாயக்கர் காலத்தவை; அவை மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன.

இவை யாவற்றையும் கண்டு வியந்து நிற்கும் நம்மை, சோழர் காலத்தில் விளங்கிய சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக் கலை முதலியன யாவும் அவர்களுக்குப் பிறகு அடைந்துள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிச் சித்திக்கத் தூண்டுகின்றன.

கட்டடக் கலையும் சிற்பக்கலையும், நாயக்கர் காலத்தில் உன்னதநிலை அடைந்து, மராட்டியர் காலத்தில் மிகவும் வீழ்ச்சியுற்றது புலனாகிறது.

ஆனால் ஓவியக்கலையோ, நாயக்கர் காலத்திலேயே நலிந்துபோனதை நாம் இக்கோயிலிலேயே கண்கூடாகக் காண்கிறோம்.

இங்கு அமைந்துள்ள நாயக்கர் காலத்தைச் சேர்ந்த சுப்பிரமணியர் கோயிலை, கட்டடக் கலையின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

அதேசமயம் இங்குள்ள நாயக்கர் கால ஓவியங்களை நோக்குங்கால், இக்கலையின் நலிவுற்ற தன்மையை நாம் அறியமுடியும்.

நாயக்கர் காலத்து ஓவியமும் சரி, அவற்றில் உள்ள வண்ணங்களும் சரி, சோழர்களின் ஓவியத் தரத்தில் மிகவும் குறைந்ததாகும் என்பதைக் கூறாமல் இருக்கமுடியவில்லை.





# நாட்டிய முத்திரைகள்

பரதமுனிவரின் 'நாட்டிய சாஸ்திரம்' என்னும் நூலின் நான்காவது அத்தியாயத்தில் 'கரணம்' எனும் நடனக் கோர்வைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடல் அங்கங்களைப் பற்பல அமைப்புகளில் நிலைநிறுத்தி, அதற்கு ஏற்ப, கை முத்திரைகளில் கருத்துகளை வெளிப்படுத்தும் கலை பரதக்கலை எனப்படும்.

இதற்கு, நடனம் செய்வோரின் உடல் அமைப்பும் தசைகளில் கட்டுப்பாடும் மிகவும் அவசியம்.

108 வகை என வரையறுத்துள்ள இக் கரணங்கள், நாட்டிய அபிநயத்தின் உயிர்நாடியாக இருந்து வருகின்றன.

தமிழ்நாட்டில் கோயில்கலைகளை வளர்த்த மன்னர்கள் பலரால் நாட்டியக் கலையும் போற்றப்பட்டன.

தில்லையில் அமைந்துள்ள இந் நாட்டியச் சிற்பங்கள் ஒவ்வொன்றின் கீழும்அக் கரணத்தின் இலக்கணத்தைச் செய்யுள் வடிவில் பொறித்து வைத்திருப்பதைக் காணலாம்.

தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள கரணங்கள், காலத்தால் மிக முற்பட்ட நிலையில், சரியான வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன.

பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்திற்கு இக் கரண முத்திரைகள் இலக்கணமாகஅமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

இக் கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள ஓவிய அறைகளுக்கு நேராக, மேலே, முதல் தளத்தில் அமைந்துள்ள திருச்சுற்றின் உட்புறச் சுவரின் வெளிப்பக்கம் தனித் தனிக் கற்களில் நடன முத்திரைக் காட்சிகளைச் செதுக்கி வைத்துள்ளனர்.

நாம் காணும் சிற்பங்கள், பாரத முனிவரின் 'நாட்டிய சாஸ்திரம்' என்ற நூலில் உள்ளபடி சிவபெருமானே ஆடிக் காட்டும் '*அடவுகள்*' எனப்படும் பரத நாட்டிய முத்திரைகளாகும்.

இச் சிற்ப வடிவங்களைக் காணும் போது, கும்பகோணம் சாரங்கபாணிக் கோயில் கோபுரத்தில் அமைந்துள்ள இதே போன்ற பரத நாட்டிய முத்திரை வடிவச் சிற்பங்களும் மற்றும் பழையாறைக் கோயில் சிற்பங்களும் நம் நினைவுக்கு வருகின்றன.

பெரியகோயிலில் உள்ள சிற்பங்கள், சிவபெருமானே நான்கு கரங்களுடன் ஆடுவது போல அமைந்திருப்பது தனித்தன்மை வாய்ந்த சிற்பக்கலையாகும்.

பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி 108 முத்திரைகளை அமைப்பதற்காகக் கற்கள் சுவரில் ஏற்கனவே பதிக்கப்பட்டு இருந்தாலும் 81 சிற்பங்களே முடிவுற்றுள்ளன.

மிகுந்துள்ள 27 சிற்பங்கள் செதுக்கப்படாத நிலையில் சுவரில் வெறும் கற்களை மட்டும் பார்க்கும் போது நம் நெஞ்சு திடுக்கிடுகிறது. இவைகளிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும் என்ற ஏக்கம் எவர் மனதிலும் ஏற்படுவது இயற்கையே.

பெரிய பெரிய எண்ணங்களையே எண்ணி, அவற்றை யெல்லாம் முறையாகச் செய்து முடித்திருக்கிற பெரிய சாதனையாளனாகப், பேரரசன் இராஜராஜன் நம் இதயத்தில் பேருருக் கொண்டு, ஓங்கி உயர்ந்து காட்சி தருகின்றான்.

உலக வரலாற்றில் வேறெங்கும், வேறெப்பொழுதும் தோன்றியதாக அறிய இயலாத வகையில், தனித் தன்மையோடு, தகுதி பெற்ற மாமன்னனாகவும், தாயகத்தை அன்பால் நேசித்து வளர்த்தவனாகவும், நாட்டையும் மக்களையும் கண்போல் காத்துவந்ததைப் போன்றே, பக்தியையும் இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம் முதலான அருங்கலைகளையும் மேலும் வளர்த்து வளப்படுத்தியவனாகவும் ஆயிரம் ஆண்டுகளாகப் புகழொளி வீசித் தன்னைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறான் இராஜராஜன், இப் பெரிய கோயிலின் மூலம்.

பல துறைகளிலும் அவனது பார்வை படிந்திருக்கிறது. பார்த்தவற்றிலெல்லாம், புதுமையும் பெருமையும் பெரிய அளவில் சேர்த்து வைத்திருக்கிறான். இனிக்கும் தமிழில், சொல்லை உணர்த்தும் கல்வெட்டுத்துறையில் அவன் செய்து வைத்துள்ள புதுமையையும் இனிக் காண்போம்.

## கல்லெழுத்துக் கலை!

கல்லில் சொல்லைச் செதுக்கிடும் முறை பண்டைய காலம் முதலே இருந்து வந்திருக்கிறது. பல்லவர்காலக் கல்வெட்டுகளும் நன்கு அமைந்திருப்பவையாகும். பிற்காலச் சோழர்கள் கல்வெட்டுகளும் சிறந்த முறையிலேயே காணப்படுகின்றன. எனினும் இராஜராஜன் வரையச் செய்துள்ள கல்வெட்டுகளோ தனித்த புதுமையோடு, அவனது இயல்புக் கேற்பப், புதுமுறையில் விளக்கமாகவும் நல்ல தமிழ் நடையிலும் அமைந்திருக்கின்றன. இன்றைய வரலாற்றுலகம் அவற்றைப் போற்றிப் புகழ்கின்றது. இன்று மட்டுமல்ல, என்றுமே அவை போற்றப் பெறும். அதில் ஐயமில்லை.



# கல்வெட்டுச் செய்திகள்

**மெய்க்கீர்த்தி!**

இராஜராஜன் கட்டிய இக்கோயிலில் நாம் காணும் மற்றுமோர் அதிசயம், இங்குள்ள கல்வெட்டுகள் ஆகும்.

வேறு எங்குமே காணமுடியாத அளவுக்குச் செய்திகளைத் தாங்கி நிற்கிற இக்கல்வெட்டுகள், படிக்கப்படிக்கப் பரவசம் ஊட்டுபவையாகும். அரசனின்வெற்றி பற்றியும், கோயிலுக்கு அரசனும் மற்றவர்களும் வழங்கியுள்ள நிவந்தங்கள் பற்றியும், கோயிலில் கடைப்பிடிக்க வேண்டிய பூசனை வழிபாடு முறைகள் பற்றியும், அவற்றிற்கான பொருள்கள் கிடைக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் இங்குள்ள கல்வெட்டுகள் நமக்குக் கூறுகின்றன.

சோழர்காலத்து சுந்தரத் தமிழ் எழுத்துக்களால், அகவற்பாவால் ஆன இக் கல்வெட்டுகள், கோயிலைச் சுற்றியும், ஆங்காங்கே தூண்களின் மீதும், மற்றும் சண்டிகேஸ்வரர் ஆலயத்திலும் காணப்படுகின்றன.

இவற்றில், இராஜராஜ சோழனுடையது மட்டும் தனித் தனி விவரங்கள் அடங்கிய 64 கல்வெட்டுகள் உள்ளன.

**மற்றவர் கல்வெட்டுகள்**

அதபோல் இராஜேந்திரனின் கல்வெட்டுகள் 29 உள்ளன.

முதலாம் குலோத்துங்கனும், விக்கிரமசோழனும் ஒரு கல்வெட்டு வீதம் பதித்துள்ளனர்.

பாண்டிய அரசனான கோனேரின்மை கொண்டான் என்பவனது கல்வெட்டுகள் மூன்று, இக்கோயிலில் காணப்படுகின்றன.

நாயக்கர்காலத்துக் கல்வெட்டுகள் இரண்டும், முதலாம் திருமலை தேவராஜா, அச்சுதப்ப நாயக்கர், மல்லப்ப நாயக்கர் ஆகியோரின் கல்வெட்டுகள் தலா ஒவ்வொன்றுமாக, இக்கோயிலில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் 'தென் இந்தியக் கல்வெட்டுகள்' என்ற புத்தகத்தில் இரண்டாவது தொகுப்பில் முதல் பாகத்தில் விவரமாக வெளியிடப்பட்டுள்ளன.

இக்கோயில் திருச்சுற்று மாளிகையின் தெற்குப்புறத்தில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் உருவாக்கி வைக்கப்பட்டுள்ள கலைக்கூடத்தில் காணப்படும் தனித்தனி கல்வெட்டுகள் சில, நம் கவனத்தை ஈர்க்கத் தக்கவை. அவற்றில் ஒன்று முதலாம் ஆதித்தனின் பதினோராம் ஆட்சி ஆண்டுக் காலத்தியதாகும்.

இக்கல்வெட்டும் *'தளிக்குளத்தேவர்'* என்ற பெயரைக் குறிப்பிடுகிறது. அப்பர் பாடிய பாடலில் குறிப்பிடப்படும் *'தஞ்சை தளிக்குளத்தார்'* என்ற கோயிலையே இக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றது.

ஆதித்த கரிகால சோழனால் மீண்டும் பதிவு செய்யப்பட்டுள்ள இக்கல்வெட்டு, *'பொன்னமரையர் அங்காடி'* என்ற கடைத் தெருவையும் குறிப்பிடுகிறது.

மற்றொரு தனிக் கல்வெட்டு, பராந்தக சோழன் காலத்தியதாகும்.

இவ்வாறு இராஜராஜ சோழனுக்கும் முந்தைய காலத்தியகல்வெட்டுகள் பல, இக் கோயில் வளாகத்திலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தன் ஆட்சியில் நிகழ்ந்த போர் முதலிய வரலாற்றுச் செய்திகளை முறையாக விளக்கும் மெய்க்கீர்த்தியை முதன்முதலில் கல்வெட்டில் புகுத்தியவன் இராஜ ராஜனே! மெய்க்கீர்த்திகள் முக்கியமாக, இராஜராஜன் பெற்ற வெற்றிகளைத் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன. இவனுக்குப் பின்பு வந்த அரசர்கள் பலரும் இப் பழக்கத்தைப் பின்பற்றியுள்ளனர்.

## ஒரு நிகழ்ச்சி

தனது 26 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் 20ஆம் நாள் அன்று, கோட்டைக்கு வெளியே அமைந்த தனது அரண்மனைச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தவாறு இராஜராஜன் பிறப்பித்த உத்திரவு ஒன்றினை இங்கே கண்டு மகிழ்வோம்.

*'நாம் சொல்ல நம் ஓலை எழுதும் அமுதன் தீர்த்தங்கரன்'* என்று தொடங்கும் சொல் ஆகும்! அரசனது இந்த உத்திரவு அமுதன் தீர்த்தங்கரன் என்பவனால், ஓலைச் சுவடியில் எழுதிக் கொள்ளப்படுன்றது.

பின்பு, கோயிலில் கல்வெட்டு எழுத வேண்டிய இடத்தில் காவி வண்ணத்தினால் எழுத்துக்கள் வரையப்பட்டு, கைதேர்ந்த கல்தச்சர்களால் உளிகொண்டு ஆழமாகப் பொறிக்கப்படுகின்றன.

> 'பாண்டிய குலாசனி வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி இராஜராஜேஸ்வரம் உடையார்க்கு நாம் கொடுத்தனவும், மற்றும் நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் நாம் எடுப்பித்த கற்றளியான ஸ்ரீராஜ ராஜேஸ்வரத்தின் 'ஸ்ரீவிமானத்தின்' கல்லிலேயே வெட்டுக'

என்ற மாமன்னனின் ஆணை, அவ்வாறே சிரமேற்கொண்டு நிறைவேற்றப்பட்டது என்பதை இன்றும் இக்கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி வருமாறு:

ஸ்வஸ்திஸ்ரீ

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
[1] தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
[2] வேங்கை நாடும் கங்கபாடியும்
தடிகைபாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
[3] முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்திறல் வென்றித் தண்டாற் கொண்ட [4] தன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக [5] விளங்கும் [6] யாண்டே
செழியரைத் தேசுகொள் [7] ஸ்ரீ கோ இராசகேசரி
வன்மரான ஸ்ரீ இராசராச [8] தேவர்க்கு யாண்டு 29 ஆவது...

**மெய்க்கீர்த்தியிலுள்ள செய்திகள்**

'திருமகளும் நிலமகளும் இவனுக்கு உரிமையுடையோர் ஆயினர். காந்தளூர்ச் சாலை எனும் கடற்போரில் மரக்கலங்களை அழித்து மக்களுக்கு அருள் செய்தான். வேங்கைநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைப்பாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், இரட்டப்பாடி, பழந்தீவு ஆகிய நாடுகளை வென்று, தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டான். பாண்டியரை வென்று அவரது நாட்டையும் இணைத்து ஆண்டான். இராசகேசரி என்னும் பட்டம் பெற்றவன்' என்பன செய்திகளாகும்.

அரசனது வெற்றிகளை மட்டுமல்லாது அவனாலும் பிறராலும் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதையும் நிர்வாகம் பற்றிய செய்திகளையும் இக் கல்வெட்டு நமக்குக் கூறுகிறது என முன்பே குறிப்பிட்டோம். உதாரணத்திற்குச் சில.

1. திருப்பதியம் ஓதுவதற்கென்று 'பிடாரர்' எனப்படும் ஐம்பது நபர்களை இராஜராஜ சோழன் நியமித்திருந்தான். இவர்கள் பெயர்கள் உள்பட இவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நிவந்தம் (ஒவ்வொருவருக்கும் தலா மூன்று குறுணி நெல்) முதலியனவும் விரிவாக இதில் விளக்கப்பட்டுள்ளன.

---

1. தநக்கே, 2. வெங்கை, 3. முரட்டெழிற்சிங்களர் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் 5. தன்தொழில்வளர் 5. தொழுதக 6. யாண்டே 7. ஸ்ரீகோவி ராஜராஜ கேசரி 8 தேவற்க்கு.



அழகிய யாளி வரிமானத்தின் மேல் உள்ள
தேவகோட்டத்தில் விநாயகர்



இராஜராஜனும் இராஜேந்திரனும்
கோயில் காவலராக நிற்கும் காட்சி



தேவ கோட்டத்தில் பிட்சாடனர்



எழிலோடு காட்சி தரும் திருமால்



கால (யமன்) சம்ஹார மூர்த்தி



வீரபத்திரர் (சிவன்)

மயிலும் முருகனும்
வள்ளித் திருமணக் கதைக்காட்சி



தேவகோட்ட அமைப்பின் அரிய காட்சி
ஆடவல்லான் [நடராஜர்]





நாடு காக்கும் பேரரசன் தான் எழுப்பிய
கோயிலையும் காத்து நிற்கும் காட்சி



கோஷ்ட பஞ்சரம் எனும் சிற்பமும்
அதையொட்டியுள்ள பல எழிற்சிற்பங்களும்



சிவன் பார்வதி திருமணக் காட்சி
புடைப்புச் சிற்பப் பகுதி



மும்மூர்த்திகளான
பிரம்மா, சிவன், விஷ்ணு



சிவன்- பார்வதி திருமணத்தைக் காணும்
நந்தி தேவர் முதலியோர்

தேவ கோட்டங்களை அடுத்துள்ள புடைப்புச் சிற்பங்கள்





## பணியாளர்

இவர்களில் 48பேர் திருப்பதியம் பாடுவதற்கும், ஒருவன் தொடர்ந்து மத்தளம் வாசிப்பதற்கும், மற்றொருவர் 'கொட்டுமேளம்' கொட்டுவதற்கும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் யாரேனும் இறந்துவிட்டாலோ அல்லது வேறு இடத்திற்குச் சென்றுவிட்டாலோ அவர்களின் உறவினர் (தகுதி இருப்பின்) அப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றும் இக்கல்வெட்டு கூறுகிறது.

கோயிலில் மொத்தம் தொள்ளாயிரத்து எண்பத்தைந்து ஊழியர்கள் இருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இதில் கருவூலகர், கணக்கர், திருப்பதியம் ஓதுபவர்கள், மேளம் கொட்டுபவர், பூசனை புரிவோர், பூக்கள் சேகரிப்போர், மாலைகள் கட்டுபவர், தோட்டக்காரர், சமையற்காரர், துணிதைப்பவர், காவல்காரர்கள், ஜோதிடர்கள், 'தளிப்பெண்டுகள்' எனப்படும் நானூறு தேவரடியார் முதலியோர் அடங்குவர் என்பது தெரிகின்றது.

இத் தேவரடியார்கள் இறைவன் பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இவர்களுக்காக இரண்டு பெரிய வீதிகள் அமைத்து, அவர்களின் தேவைக்கு வேண்டிய அளவு நிவந்தங்களையும் இராஜராஜன் அளித்திருந்ததாகக் கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம்.

## அறக்கொடையின் மதிப்பு

அரசனும் மற்றவர்களும் கோயிலுக்குக் கொடுத்துள்ள நிவந்தங்கள் சில வருமாறு :

1. தங்கப்பாத்திரங்கள் 41,551 கழஞ்சு அல்லது 182/80 கிலோ எடை.
2. தங்க நகைகள் வைரம், பிற விலையுயர்ந்த கற்கள் 10,200 காசு அல்லது 22 கிலோ எடை.
3. வெள்ளிப் பாத்திரங்கள் 50,650 கழஞ்சு அல்லது 222 கிலோ எடை.
4. செப்புத் திருமேனிகள் மொத்தம் 65.

இவை தவிர, சுமார் 40 கிராமங்கள் பெரிய கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டு அக் கிராமங்களில் இருந்து வருடத்திற்கு 1, 16, 000 கலம் நெல்லும், கோயில் வழிபாடு மற்றும் பூசனைக்குத் தேவையான மற்ற பொருள்களும் கோயிலுக்கு வந்து சேர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் இருந்துகூட, வருடத்திற்கு ஒருமுறை நெல்லும், கோயிலில் விளக்கு எரிக்க வேப்பெண்ணையும் வந்துகொண்டு இருந்தன.

## விளக்கு வைத்து ஒளியேற்றுதல்

மற்றுமொரு கல்வெட்டின்படி இராஜராஜன், கோயில் விளக்குகள் எரிவதற்கு நாள் ஒன்றுக்குத் தேவையான நூற்று ஐம்பத்துஎட்டு உழக்கு நெய் அளிப்பதற்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட பசு, எருமை முதலியவற்றைப் பராமரிக்கவும் நிவந்தங்கள் கொடுத்திருந்தான்

அதன் மூலம் வரும் வருமானத்தை அக் கால்நடைகளைப் பராமரிப்பவர்கள் அனுபவித்து, ஒரு விளக்கிற்கு ஓர் உழக்கு நெய்வீதம் கோயிலுக்குக் கொடுத்து விடவும் மாமன்னன் ஏற்பாடு செய்திருந்தான்.

இவ்வாறு சுமார் 158 விளக்குகள் தினந்தோறும் இரவிலும் திருவிழாக் காலங் களிலும் கோயிலில் ஏற்றப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது.

முக்கிய கோயில்கள் அல்லாது பரிவாராலயத்துப் பிள்ளையார் முதலிய பரிவார தேவதைகளின் கோயில்களுக்கும்கூட வேண்டிய அளவு நிவந்தங்கள் கொடுக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

'தஞ்சை தளிக் குளத்தான்' மற்றும், 'தஞ்சை மாமணிக் கோயில்' என்று, ஏற்கனவே இங்கிருந்த கோயில்களைப் பற்றியும் இக்கல்வெட்டுகளில் இருந்து நாம் அறிகிறோம்.

## பிற்காலத் திருப்பணிகள்

'உலகம் முழுதும் உடையாள்' என்ற பெரிய நாயகியின் கோயில், கோனேரின்மைகொண்டான் என்ற பாண்டியன் காலத்தில் (13ஆம் நூற்றாண்டில்) கட்டப்பட்டது என்பதும், இங்குள்ள கல்வெட்டில் இருந்துதான் நமக்குத் தெரிகின்றது.

விமானத்தின் மீதுள்ள கலசத்தில் மராட்டியர் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் மூலம் இக்கோயிலில் அவர்கள் காலத்தில் இருமுறை, அதாவது கி. பி. 1729 ஆம் ஆண்டும், கி. பி. 1843 ஆம் ஆண்டும், குடமுழுக்கு விழா கொண்டாடப்பட்டது என்று நமக்குத் தெரிகிறது.

வாகன மண்டபத்தின் படிகளில் காணப்படும் மராட்டியர்காலக் கல்வெட்டில் (கி. பி. 1801) [1] இக் கோயிலில் அவர்கள் காலத்தில் நடந்த சில திருப்பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுப்பிரமணியர் கோயிலுக்குப் புதிதாகப் படிகள் அமைக்கப்பட்டதாகவும், அம்மன் கோயில், நடராஜர் மண்டபம், சந்திரசேகரர் மற்றும் தட்சிணாமூர்த்தி

---

*1. எ. ஆர் ஈ. 1927—28*

முதலிய சன்னிதிகளுக்குத் திருப்பணிகள் செய்யப்பட்டதாகவும், இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

பிராகாரத்துத் தளவரிசை அமைக்கப்பட்டதாகவும் மடப்பள்ளி மற்றும் திரு மதிற் பகுதிகளும் திருத்தியமைக்கப்பட்டதாகவும் இதன்மூலம் அறிகிறோம்.

## வாழ்வியல் கலைகள்

இவ்வாறு இந்த நேர்த்தியான தமிழ்க் கல்வெட்டுகள் நமக்குச் சோழர் காலத்தின் ஆட்சிமுறை பற்றியும் அப்போதிருந்த மக்களின் பொருளாதார நிலை, மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றியும் புலப்படுத்துகின்றன.

தவிரவும், சங்கீதம் நாட்டியம் முதலிய கலைகளைப் பற்றியும், அவைகள் கோயில் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முறைகள் பற்றியும் நாம் அறியும்படி மிகவும் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன.

கலைகள், கோயிற் பணியில் பக்தியுடன் சேர்த்து ஈடுபடுத்தப்பட்டால்தான் அவை நன்றாக வளரவும் மக்களின் மனதில் ஆழமாக வேரூன்றவும் முடியும் என்று இராஜராஜ சோழன் மிக நன்றாகவே அறிந்து வைத்திருந்தான் என்பது தெளிவு.

அவனது அந்த எண்ணமும் செயலும் வெற்றி பெற்றதை அக் கலைகளின் வளர்ச்சியிலிருந்து நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இதிலிருந்து இராஜராஜன் சிறந்த வீரன் மட்டுமல்ல, சிறந்த அரசியல் மேதை என்பதும், சிவபக்தன் மட்டுமல்ல, சிறந்த அறிவாளியும் ஆவான் என்பது தெளிவாகிறது.

இவனால் கட்டப்பட்ட இப் பெரிய கோயில் ஒரு கலைக்களஞ்சியம்; அனைத்துக் கலைகளும் ஒருங்கிணைந்த பொக்கிஷம்! இது வெறும் பொழுது போக்கிற்காக வளர்க்கப்பட்ட கலையல்ல; அக்கால மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைக்கப்பட்டு வளர்ந்த தமிழர் வாழ்வியல் கலை. ஆகவேதான் இது எக்காலமும் போற்றும் கலையாக அமைந்துள்ளது; எந்நாட்டாரும் போற்றும் உயர்கலையாக மலர்ந்து விளங்குகின்றது.



# செப்புத் திருமேனிகள்

*[படிமக் கலை]*

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியின் மற்றுமொரு அதிசயிக்கத் தக்க கலை வளர்ச்சி செப்புத் திருமேனி செய்யும் படிமக் கலையாகும்.

சைவ சமயம் தழைத்தோங்கி இருந்த காலம் ஆதலால், சிவபெருமானது பல உருவங்களை, முக்கியமாக நடராஜர் உருவத்தை, செப்புத் திருமேனி வடிவமாக்கி அவற்றை உற்சவ மூர்த்தியாக அலங்கரித்ததுடன் வீதிதோறும் உலா வரச் செய்து மக்கள் வழிபடத் தொடங்கினர்.

கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள் இந்த உத்சவ மூர்த்திகள் வருகையை தெய்வமே தங்களை நோக்கி வருவதாக எண்ணி வணங்கி மகிழ்ந்தனர்.

## கலை வளர்த்தோர்

எனவே, படிமக்கலை மிகவும் வேகமாக வளரத் தொடங்கியது. அதனால் இக் கலையில் ஈடுபட்ட கலைஞர்கள் முதலானோரும் வளரத் தொடங்கினர். இது ஒரு பரம்பரைத் தொழிலாக மாறியது.

இந்தியாவில், முக்கியமாகத் தென்னகத்தில் இச் செப்புத் திருமேனிகள் செய்யும் சிற்பிகள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய உன்னதமான கலையாகிய செப்புத் திருமேனி செய்யும் முறையை நாம் சற்றே அறிதல் அவசியமாகும்.

## செய்முறை!

செப்புத்திருமேனியில் எந்த உருவம் செய்ய வேண்டுமோ அதைப்போல முதலில் மெழுகினால் வடிவ அமைப்பு செய்துகொண்டு, இதன்மீது களிமண் கொண்டு பூசி நன்றாக மூடிவிட வேண்டும். பின்பு உள்ளே இருக்கும் மெழுகு உருவத்தைச் சூடுபடுத்தி உருக்கி எடுத்துவிட வேண்டும். அதன்பின் பஞ்சலோகங் களை முறைப்படி அளவோடு சேர்த்து உருக்கிக் களிமண்ணுக்குள்ளே இருக்கும் உருவ அமைப்பின் வெற்றிடத்தை நிரப்புமாறு ஊற்ற வேண்டும். பின்பு நன்றாக சூடு ஆறியபிறகு மேலே உள்ள களிமண்ணை நீக்கி வெளியில் எடுப்பார்கள். பின்பு அச் செப்புத் திருமேனியை நன்றாகச் சுத்தம் செய்து செப்பம் செய்தால், சிலை தயாராகிவிடும்.



ஆடவல்லான் என்னும் நடராஜர்



ஆடையுடன் காட்சி தரும் பிட்சாடனர்

சண்டிகேஸ்வரர்



சுந்தரரும் பரவை நாச்சியாரும்



மாமன்னன் இராஜராஜ சோழன்
இராஜேந்திர சோழன்
செய்து வைத்த செப்புத்திருமேனி

தஞ்சைப்பெரிய கோயிலில் இவ்வாறான அழகும் கலை நுணுக்கமும் கொண்ட செப்புத்திருமேனிகள் சுமார் அறுபத்தைந்து இருந்ததையும் யாரால் அவை நிவந்தமாகக் கொடுக்கப்பட்டன என்பது போன்ற விவரங்களையும் கல்வெட்டு நமக்குக் கூறுகிறது.

இத்தகைய முழுமையான விவரங்கள் அடங்கிய கல்வெட்டுகள் இக்கோயிலில் தான் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

இராஜராஜன் திருவாயிலின் (கோபுரத்தின்) வடக்கே திருச்சுற்று மாளிகையில் உள்ள ஒரு தூண் மீது பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இராஜராஜ சோழனால் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட இருபத்து மூன்று ஐம்பொன் சிலைகளைப் பற்றிய விவரங்களை நமக்குத் தருகிறது,

இவைதவிர, மற்றவர்கள் கோயிலுக்கு அளித்துள்ள 32 செப்புத் திருமேனிகளின் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. குந்தவைப் பிராட்டியார் | — | 4 | செப்புத்திருமேனிகள் |
| 2. அரசி போக மகா தேவியார் | — | 1 | ,, |
| 3. அரசி சோழமகாதேவியார் | — | 5 | ,, |
| 4. அரசி அபிமான வல்லியார் | — | 1 | ,, |
| 5. அரசி திரைலோக்கிய மகாதேவியார் | — | 1 | ,, |
| 6. அரசி பஞ்சவன் மகாதேவியார் | | 4 | ,, |
| 7. அரசி பிரிதிவி மகாதேவியார் | — | 2 | ,, |
| 8. அரசி சிலத மகாதேவியார் | — | 1 | ,, |
| 9. அதிகாரி ஆதித்த சூர்ய தென்னவன் மூவேந்த வேளான் | — | 13 | ,, |
| 10. ராஜராஜ மூவேந்த வேளான் | — | 1 | ,, |
| 11. பஞ்சவன் மகாதேவி சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த வடுகன் | — | 1 | ,, |
| 12. அதிகாரி ராஜராஜகட்டி சூரியன் | — | 1 | ,, |
| 13. அதிகாரி கிருஷ்ணன் ராமன் | — | 1 | ,, |
| 14. அதிகாரி வேலன் ஆதித்தன் | — | 3 | ,, |
| 15. அதிகாரி கோலன் அண்ணாமலை | — | 2 | ,, |
| 16. மும்முடிச் சோழ கோசன் | — | 1 | , |
| 17. இராசராசன் | — | 23 | ,, |
| | | 65 | |

சுந்தரசோழன், இராஜராஜன், குந்தவை முதலானவர்களின் செப்புத் திரு மேனிகளுங்கூடக் கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்து அரசர்களையும் கடவுளுக்கு ஈடாக வணங்கும் பழக்கம் மக்க ளிடையே ஏற்பட்ட விவரத்தையும் நாம் அறிகின்றோம்.

பிற்காலத்தில் செய்துள்ள இராஜராஜ சோழனின் செப்புத் திருமேனியை இக்காலத்திலும், திருவிழாவின் போது உற்சவமூர்த்திக்கு முன்பாக எடுத்துச் செல் வதைக் காணமுடியும்.

## இராஜராஜன் சிலை எங்கே?

இராஜேந்திர சோழனின் உத்தரவின்படி இவ்வாறு அவனது தந்தை இராஜராஜ சோழனின் உருவம், சுந்தரமூர்த்தி நாயனாரின் உருவத்திற்குப் பதிலாக ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டதாக 'பிரஹதீஸ்வரர் மஹாத்மியம்' கூறுகிறது.

ஆயினும், தற்சமயம் உள்ள இச்சிலை, பிற்காலத்தைச் சேர்ந்தது. ராஜேந்திர சோழனால் செய்யப்பட்ட இராஜராஜனின் சிலை தற்போது வடநாட்டில் உள்ள தாகக் கூறுவர்.

தவிரவும் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் 65 செப்புத்திரு மேனிகளில் ஒரு சிலவே தற்சமயம் உள்ளன. அவற்றைக் காணும்போது மற்ற சிலைகளும் இக்கோயிலை விட்டு அகலாமல் (அகற்றப்படாமல்) இருந்திருந்தால் கோயிலின் படிமக் கலையின் புகழ் இன்னமும் மேலே உயர்ந்து நிற்கும் அல்லவா என்று எண்ணத் தோன்றுகிறது!

கலைக்கோயிலைக் கண்டு களித்து வெளியே வரும்போது, கோட்டைக்கு வெளியே வடகிழக்கு மூலையில் சாலையோரமாக, சமீபத்தில் அமைக்கப்பட்ட இராஜராஜ சோழனின் புதிய உருவச்சிலையை நாம் காண்கிறோம்.

இச் சிலையை இங்கு நிறுவக் காரணமாய் இருந்தவர்கள், இராஜேந்திர சோழனால் இக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட, தற்சமயம் வடநாட்டில் தனிநபர் ஒருவரிடம் இருக்கும் இராஜராஜனின் பழைய சிலையையே இக் கோயிலுக்குத் திரும்பவும் கொண்டுவந்து சேர்த்திருந்தால், இராஜேந்திர சோழனின் ஆத்மாவும் சாந்தி அடைந்திருக்கும்; தரணி புகழ் தஞ்சையில் தமிழனின் பெருமையும் உயர்ந் திருக்கும். இனியாவது அந்தப் பழைமையான சிலை வந்து சேருமா?

*முடிவுரை*

வரலாற்றறிஞர் பத்மபூஷண் திரு. கே. ஆர். சீனிவாசன் அவர்கள் பெரிய கோயிலைப் பற்றிச் செய்துள்ள மதிப்பீடு நமது முடிவுரைக்கு ஏற்றதாக இருக்கும் என நினைக்கிறேன். அவ் வரலாற்றறிஞர் கூறியுள்ளது:

'உலகில் உள்ள இத்தகைய முதல்தரச் சிற்பக்கூடங்களில் இக் கோயில் தலைசிறந்து விளங்குகின்றது. தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இக் கோயில், எந்த விதத்தில் பார்த்தாலும் தனித்தன்மை வாய்ந்ததாகும். உதாரணத்திற்குச் சில.

★ *கட்டடக் கலை* என்று எடுத்துக்கொண்டால், முக்கியமாக இதன் அமைப்பு மற்றும் கலையம்சம் பொருந்திய நெடிய உருவம், தேவையான அளவுடன் கட்டப்பட்டுள்ளது.

★ *படிமக் கலை* என்னும்போது சோழர்காலத்தியப் படிமங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. தெய்வாம்சம் மிகுந்தவை; பஞ்ச உலோகங்களால் செய்யப் பட்ட இப் படிமங்கள் உயிர்கொணடு பேசுவது போன்று அமைக்கப்பட்டவை யாகும்.

★ *சிற்பக் கலையை* எடுத்துக்கொண்டால், மிகவும் பெரிய, ஆனால் அதேசமயம் அழகும் நளினமும் கொண்ட சோழர்களின் கலைப்பாணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

★ *ஓவியக் கலையை* எடுத்துக்கொண்டால் தென்னிந்திய ஓவியக் கலையிலேயே இது முதன்மை பெற்று விளங்குகிறது. அஜந்தா ஓவியங்களுக்கு ஈடாக அமைந்துள்ள இவ் ஓவியங்கள் அழியாமல் உள்ளன.

★ சிலைகளை(Iconogrophy) எடுத்துக்கொள்வோமானால் இங்குள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்களில் அமைந்து உள்ள கடவுளர்களின் உருவ அமைப்புகள் மிகச் சிறந்த முறையில் உள்ளன.

★ *மற்றக் கலைகள்* எதை எடுத்துக்கொண்டாலும் முக்கியமாக, பரதக்கலை மற்றும் சங்கீதக் கலை-இவற்றில் பரதக்கலைக்கு எடுத்துக்காட்டாக அமைந் துள்ள நாட்டிய முத்திரைச் சிற்பங்கள், பரதமுனிவரின் நாட்டிய சாஸ்தி ரத்தை அப்படியே சித்திரிக்கின்றன.

ஓவியங்களில் காணும் தாள வாத்தியக் கருவிகள், நடன முத்திரைகள் இவை யாவும் இசையும் நாட்டியமும் அக்காலத்தில் கோயில் பணிக்கு அர்ப் பணிக்கப்பட்டிருந்தன.

★ இவை யாவற்றிற்கும் மேலாக, கல்வெட்டுகளை நோக்கினால், அவை இங்கு அதிக அளவில் இருப்பது மட்டுமன்றி, நமக்குப் பல்வேறு செய்திகளையும் தருபவையாகும்.

அரசனும் மற்றவர்களும் கோயிலுக்காகச் செய்த திருப்பணிகள் மட்டு மன்றி மானியங்கள், கோயில் நிர்வாகம், கோயிலுக்குக் கொடுத்துள்ள செப்புத் திருமேனிகள் முதலிய அனைத்தையும்பற்றி அறிய ஏதுவாக உள்ளது.

மன்னனின் வெற்றிகளைக் குறிக்கும் 'மெய்க்கீர்த்தி' யைக் கல்வெட்டில் முதன்முறையாக இங்குக் காண்கிறோம். இவை நமக்கு அக்கால மன்னர் களது வரலாற்றை விளக்குகின்றன. தவிர, அக்கால மக்களின் சமயம் மற்றும் பொருளாதார வாழ்க்கை முறை பற்றியும்இக்கல்வெட்டுகள் நமக்குக் கூறுகின்றன.

ஆகவே, இக்கோயில் எல்லாவிதமான கலைகளையும் தன்னகத்தே கொண்டு, ஒரு 'தனித்தன்மை' வாய்ந்த கலைக் கோயிலாக விளங்குகிறது. என்றால் அது மிகையாகாது. இத்தகைய எல்லாக் கலைகளும் ஒருங்கே அமைந்த கோயில் இது ஒன்றாகத்தான் இருக்க முடியம்.

இத்தகைய சிறந்த ஒரு கோயிலானது, சண்டையிலும் சரி, சமாதானத் திலும் சரி, அதற்கும் மேலாக பக்தியிலும் சரி, சிறந்து விளங்கிய ஒரு மா மன்னனால் கட்டப்பட்டது.

வீரமன்னர் பலரை நாம் சரித்திரத்தில்தான் காண்கிறோம். ஆயினும் இக் கோயிலைக் காணும் போதெல்லாம் நாம் இராஜராஜ சோழனையும் நேரில் காண்கிறோம்.

இதுவே அவன் அடைந்த அழியாத வெற்றியாகும்.

வாழ்க இம் மாமன்னன் புகழ்! வாழ்க இவன் சமைத்த பெரிய கோயில்!





விமானத்தின் மேற்குப் புற வனப்பு - வடக்கு, தெற்கு



நூறு அடி நீளமுள்ள விமானத்தின் அடிப்பாகம்
மேற்குத் தோற்றம்



கருவறையடுத்துள்ள உள் சுற்றான
ஓவியக் கூடத்தின் தென்புறம். எடுப்பாகக் காட்சி தரும்
அகோர மூர்த்தி (சிவன்)



வாமதேவம். ஓவிய அறை - வடக்கு



விமானத்தின் மூன்றாம் தளத்தில் கிழக்கிலுள்ள கயிலைக் காட்சி
தெற்கு ↓ ↑ வடக்கு





விமானத்தின் கிழக்குப் பகுதி

தெற்கு ↓

வடக்கு ↑





கயிலையில் சிவனும் உமாதேவியும் காட்சி தரல்.
அர்ச்சுனன் பாசுபதம் எனும் ஆயுதம் பெற தவம் புரிதல்.



மன்மத தகனம், இராஜராஜன் திருவாயில்



பூவேலைப்பாடு மிக்க கல் சாளரம்
பெரிய கோயில் அருங்காட்சியகம்



# வரலாற்றுப் பட்டியல்

## 1. இராஜராஜ சோழனின் குடும்பம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெற்றோர் | : | சுந்தர சோழன் - வானவன் மாதேவி |
| 2 | குரு | : | கருவூர்த்தேவர் |
| 3 | உடன் பிறந்த அண்ணன் | : | ஆதித்த கரிகாலன் |
| 4 | உடன் பிறந்த அக்காள் | : | குந்தவைப்பிராட்டியார் |
| 5 | மனைவியர் | : | பட்டத்தரசி ஒலோகமாதேவி எனும் தந்திசக்தி விடங்கி,<br>இராஜேந்திரனைப் பெற்றெடுத்த வானவன்மாதேவி, பஞ்சவன்மாதேவி<br>திரைலோக்கிய மாதேவி, அபிமானவல்லி<br>இலாட மகாதேவி<br>இவர்கள் தவிர இவனுக்கு மேலும் 8 மனைவியர் இருந்தனராம். |
| 6 | ஆண்மக்கள் | : | முதலாம் இராஜேந்திரன், ஆளவந்தான். |
| 7 | பெண் மக்கள் | : | கங்கமாதேவி, மாதேவடிகள், குந்தவை |



## 2. கல்வெட்டுகளில் காணப்படும் இராஜராஜனின் சிறப்புப் பெயர்கள்

1. அபயகுலசேகரன்
2. அரிதுர்க்கலங்கன்
3. அருள்மொழி
4. அழகிய சோழன்
5. இரணமுக பீமன்
6. இரவிகுல மாணிக்கன்
7. இரவிவம்ச சிகாமணி
8. இராஜ கண்டியன்
9. இராஜசர்வக்ஞன்
10. இராஜராஜன்
11. இராஜாச்ரையன்
12. இராஜகேசரிவர்மன்
13. இராஜ மார்த்தாண்டன்
14. இராஜ விநோதன்
15. இராஜேந்திர சிம்மன்
16. உத்தம சோழன்.
17. உத்துங்க துங்கன்
18. உய்யக் கொண்டான்
19. உலகளந்தான்
20. கீர்த்தி பராக்கிரமன்
21. கேரளாந்தகன்
22. சண்டபராக்ரமன்
23. சத்ரு புஜங்கன்
24. சிங்களாந்தகன்
25. சிவபாத சேகரன்
26. சோழ குல சுந்தரன்
27. சோழ மார்த்தாண்டன்
28. சோழநாராயணன்
29. சோழேந்திரசிம்மன்
30. திருமுறை கண்ட சோழன்
31. தெலிங்ககுல காலன்
32. தைலகுலகாலன்
33. நிகரிலிச் சோழன்
34. நித்ய விநோதன்
35. பண்டித சோழன்
36. பாண்டிய குலாசனி
37. பெரிய பெருமாள்
38. மும்முடிச் சோழன்
39. மூர்த்தவிக்ரமாபரணன்
40. ஜனநாதன்
41. ஜெயங்கொண்ட சோழன்
42. க்ஷத்திரிய சிகாமணி

## 3. கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளவை
## தஞ்சாவூரிலிருந்த தெருவுகள்

**தெருக்கள்**

கந்தர்வத் தெரு

மடைப்பள்ளித் தெரு

வில்லிகள் தெரு

ஆணை கடுவார் தெரு

ஆணை ஆட்கள் தெரு

பண்மையார் தெரு

சாலியத் தெரு

**பெருந்தெருக்கள்**

மும்முடிச் சோழப் பெருந்தெரு

நித்தவினோதப் பெருந்தெரு

வீரசிகாமணிப் பெருந்தெரு

வீரசோழப் பெருந்தெரு

ஜெயங்கொண்ட சோழப் பெருந்தெரு

இராஜ வித்யாதரப் பெருந்தெரு

சூரசிகாமணிப் பெருந்தெரு

தளிச்சேரி

**கடைத்தெருக்கள் [அங்காடி]**

கொங்கவேளார் அங்காடி
திருபுவன மகாதேவிப் பேரங்காடி

**மருத்துவமனை :**
'சுந்தர சோழ விண்ணகர் அதுல — சாலா'
(ஆதுலர் சாலை)



## 4. *இராஜராஜன் காலத்திய கோயில்கள்*

புதிதாகக் கட்டப்பட்டவையும் புதுப்பித்தவையும்.

| | | |
|---|---|---|
| 1. | பெரிய கொயில் (இராஜராஜேஸ்வரம்) | தஞ்சாவூர் |
| 2. | லோகமகா தேவீஸ்வரம் | திருவையாறு |
| 3. | க்ஷேத்திரபாலர் கோயில் | திவலஞ்சுழி |
| 4. | சொர்ணபுரீஸ்வரர் கோயில் | அழாத்திரி புத்தூர் |
| 5. | உத்திரபட்டீஸ்வரர் கோயில் | திருச்செங்காட்டங்குடி |
| 6. | திருஇராமநாதீஸ்வரம் கோயில் | திருவீரனேஸ்வரம் |
| 7. | அமிர்தகடேஸ்வரர் கோயில் | திருக்கடையூர் |
| 8. | காரோணஸ்வாமி கோயில் | நாகப்பட்டினம் |
| 9. | சூளாமணிவர்ம விகாரம் | நாகப்பட்டினம் |
| 10. | கண்ணாயிரநாதேஸ்வரன் கோயில் | திருக்காரவாசல் |
| 11. | பாரிஜாதவனேஸ்வரர் கோயில் | திருக்கலூர் |
| 12. | திருமலைக்கடம்பூர் கோயில் | நார்த்தாமலை |
| 13. | திருநெடுங்கலநாத ஸ்வாமிகோயில் | திருநெடுங்கலம் |
| 14. | சாமவேதீஸ்வரர் கோயில் | திருமங்கலம் |
| 15. | குந்தன்குழி மகாதேவர் கோயில் | மதகடிப்பட்டு |
| 16. | பூமீஸ்வரர் கோயில் | மரக்காணம் |
| 17. | கயிலாயத்துப் பரமேஸ்வரன் கோயில் | உலகாபுரம் |
| 18. | அரிஞ்சகை விண்ணகர் | உலகாபுரம் |
| 19. | சுந்தரசோழப் பெரும்பள்ளி | உலகாபுரம் |
| 20. | மகாசாஸ்தா கோயில் | அகரம் |
| 21. | திருஆலந்துறை உடைய பரமசிவன் கோயில் | ஏமப்பேரூர் |
| 22. | பிரம்மபுரீஸ்வரர் கோயில் | பிரம்மதேசம் |
| 23. | ராஜராஜ விண்ணகரம் | எண்ணாயிரம் |
| 24. | திரு இராமேஸ்வரம் கோயில் | ஈசாலம் |
| 25. | ரவிகுல மாணிக்கேஸ்வரர் கோயில் | தாதாபுரம் |
| 26. | குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயில் | தாதாபுரம் |

| | | |
|---|---|---|
| 27. | குந்தவை ஜீனாலயம் | தாதாபுரம் |
| 28. | சிவலோகமுடைய பரமேஸ்வரன் கோயில் | திருவக்கரை |
| 29. | வெங்கடேச பெருமாள் கோயில் | திருமுக்கூடல் |
| 30. | ராஜேஸ்வரம் உடைய மகாதேவர் கோயில் | சிவபுரம் |
| 31. | திருவீர விண்ணகர் ஆழ்வார் கோயில் | ஆர்ப்பாக்கம் |
| 32. | முருகேஸ்வர ஸ்வாமி கோயில் | மாம்பாக்கம் |
| 33. | ராஜராஜேஸ்வரம் | சோழபுரம் |
| 34. | ஜெயங்கொண்ட சோழீஸ்வரம் | செங்குன்றம் |
| 35. | குந்தவை ஜீனாலயம் | திருமலை |
| 36. | ராஜேந்திர சிம்மேஸ்வரம் | மேல்பாடி |
| 37. | சோழீஸ்வரம் | மேல்பாடி |
| 38. | பள்ளிகொண்டார் கோயில்<br>சோமேஸ்வரர் கோயில் | ஆற்றூர் |
| 39. | பள்ளிகொண்டார் கோயில்<br>நெல்லையப்பர் கோயில் | திருநெல்வேலி |
| 40. | கைலர்சபதி கோயில் | கங்கைகொண்டான் |
| 41. | நிகரிலிச் சோழ விண்ணகரம் | சேரமாதேவி |
| 42. | கைலாசமுடையார் கோயில் | சேரமாதேவி |
| 43. | திரு இராமேஸ்வரம் கோயில் | திருவாலீஸ்வரம் |
| 44. | சோழீஸ்வரர் கோயில் | நாகர் கோயில் |
| 45. | இராஜராஜேஸ்வரம் | மாந்தோட்டம் |
| 46. | வானவன் மாதேவீஸ்வரம்,<br>பள்ளிகொண்டா கோயில் | பொலனருவா (இலங்கை) |
| 47. | உத்தமசோழீஸ்வரம் | பொலனருவா |
| 48. | அருள்மொழிதேவீஸ்வரம் | மலூர்பட்னா |
| 49. | ஜெயங்கொண்ட சோழ விண்ணகர் | மலூர்பட்னா |
| 50. | ராஜேந்திர சிம்மேஸ்வரம் | மாலூர் |
| 51. | அப்பரமேய ஸ்வாமி கோயில் | மாலூர் |
| 52. | ரவிகுலமாணிக்க விண்ணகர் | தாடிமாலிங்கி |



## 5. இராஜராஜன் செய்தளித்த செப்புத் திருமேனிகள்

1. கொள்கைத் தேவர்
2. க்ஷேத்திரபால தேவர்
3. ஆடவல்லார்
4. உமா பரமேஸ்வரி
5. ஆடவல்லார் தஷிணமேரு விடங்கர்
6. தஞ்சை விடங்கர்
7. மகாமேரு விடங்கர்

8—11. வாசுதேவர் (நான்கு திருமேனிகள்)

12. சண்டேஸ்வர பிரசாத தேவர்
13. பஞ்சதேக மூர்த்தி
14. சுப்பிரமணியர்
15. தக்ஷிணா மூர்த்தி
16. மகாவிஷ்ணு
17. பிள்ளையார் கணபதியார் (நடன கோலம்)
18.
19. பிள்ளையார் கணபதியார் (நின்றகோலம்)
20. பிள்ளையார் (அமர்ந்தகோலம்)
21. பிள்ளையார் கணபதியார் (நடன கோலம்)

22, 23 பிள்ளையார் கணபதியார் (அமர்ந்த கோலம்)

## 6. குந்தவைப் பிராட்டியார் அளித்த செப்புத் திருமேனிகள்

1. உமா மகேஸ்வரி
2. உமா பரமேஸ்வரி
3. சுந்தர சோழர் (பொன் மாளிகைத்துஞ்சின தேவர்)
4. தம்ஐ (வானவன் மகாதேவியான குந்தவையின் தாயார்)

○

## 7. சோழர்காலச் செப்பேடுகள்

| | | |
|---|---|---|
| 1. | உதயேந்திரம் செப்பேடு | : பராந்தக சோழன் காலத்தில் கங்க மன்னன் பிருதிவிபதி வெளியிட்டது. |
| 2. | வேளஞ்சேரி செப்பேடு | : பராந்தக சோழன் வெளியிட்டது. |
| 3. | அன்பில் செப்பேடு | : சுந்தரசோழன் வெளியிட்டது. |
| 4. | சென்னை அருங்காட்சியகச் செப்பேடு | : உத்தம சோழன் வெளியிட்டது. |
| 5. | லெய்டன் பெரிய செப்பேடு | : முதலாம் இராசராசன் வெளியிட்டது. |
| 6. | கரந்தைச் செப்பேடு | : முதலாம் இராசேந்திரன் வெளியிட்டது. |
| 7. | திருவாலங்காட்டுச் செப்பேடு | : ,, ,, |
| 8. | திருக்களர் செப்பேடு | : ,, ,, |
| 9. | லெய்டன் சிறிய செப்பேடு | : முதற்குலோத்துங்கன் வெளியிட்டது. |

## 8. சோழர் காலத்திய வெளிநாட்டினர் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆல்பரூணி | (கி. பி. 1030) - | அரேபியர் |
| சௌஜ-ஃகுவா, சுபான்சி என்றநூல் | (கி. பி. 1125) - | சீனர் |
| சீன் சூ - கூ - பி | (கி. பி. 1178) | சீனர் |
| தூதுக்குழுக்கள் | (கி. பி. 1279 - 92) - | சீனர் |
| மான் ஆவனம் | (கி. பி. 1084 - 1112) | |
| மார்க்கோபோலோ | (கி. பி. 1293) - ஐரோப்பியர், வெனிஸ். | |
| மாண்டிகார் வினோஹான் | (கி. பி. 1292 - 93) | |
| அபுல்பேடா | (கி. பி. 1273 - 1331) | |

## 9. சோழர்காலக் கல்வெட்டுகளில் மாதம் குறிப்பிடும் முறை

| | |
|---|---|
| சித்திரை | மேஷ ஞாயிறு |
| வைகாசி | ரிஷப ஞாயிறு |
| ஆனி | மிதுன ஞாயிறு |
| ஆடி | கடக ஞாயிறு |
| ஆவணி | சிம்ம ஞாயிறு |
| புரட்டாசி | கன்னி ஞாயிறு |
| ஐப்பசி | துலா ஞாயிறு |
| கார்த்திகை | விருச்சிக ஞாயிறு |
| மார்கழி | தனு ஞாயிறு |
| தை | மகர ஞாயிறு |
| மாசி | கும்ப ஞாயிறு |
| பங்குனி | மீன ஞாயிறு |

○

### *10. சோழர்கால முகத்தல் வாய்பாடு*

| | | |
|---|---|---|
| 360 நெல் | - | 1 செவிடு |
| 5 செவிடு | - | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | - | 1 உழக்கு |
| 2 உழக்கு | - | 1 உரி (½ நாழி) |
| 16 உரி | - | 1 மரக்கால் (குறுணி) |
| 2 மரக்கால் | - | 1 பதக்கு |
| 2 பதக்கு | - | 1 தூணி |
| 3 தூணி | - | 1 கலம் |

O

### *11. சோழர்கால நிறுத்தல் வாய்பாடு*

| | | |
|---|---|---|
| 2 குன்றிமணி | - | 1 மஞ்சாடி |
| 10 மஞ்சாடி | - | 1 கழஞ்சு |
| (1 கழஞ்சு | - | 4. 4 கிராம்) |
| 16 கழஞ்சு | - | 1 பலம் |

O

### *12. நீட்டல் அளவை*

| | | |
|---|---|---|
| 8 தோரை | - 1 | விரல் |
| 24 விரல் | - 1 | முழம் |

இது தவிர சாண், அடி (காலடி) ஆகியவற்றாலான 16 சாண் கோல், 12 அடிக்கோல், 16 அடிக்கோல் போன்றவையும் இருந்தன.

இராசராசன் காலக் கோலுக்கு 'உலகளந்த கோல்'என்ற பெயரும் இருந்தது.

ஒரு கோலால் ஏற்படும் சதுரம், ஒரு குழி எனப்பட்டது.

நூறுகுழி ஒருமா.

இரண்டாயிரம் குழி ஒரு நிலம்.

என்று நிலங்கள் அளக்கப்பட்டன,

## 13. நில அளவு வாய்பாடு

| | | |
|---|---|---|
| | முந்திரி | — 1/320 |
| 2 | முந்திரி | — அரைக்காணி (1/160) |
| 2 | அரைக்காணி | — 1 காணி (1/80) |
| 4 | காணி | — 1 மா (1/20) |
| 20 | மா | — 1 நிலம் |
| 4 | முந்திரி | — 1 காணி (1/80) |
| 5 | காணி | — 1 மாகாணி (வீசம் 1/16) |
| 2 | வீசம் | — கால் (1/4) |
| 16 | வீசம் | — ஒன்று |

## 14. வரி வகைகளில் சில

| | |
|---|---|
| பிதாநாழி | பழைய வரிவகை |
| கண்ணாலக் காணம் | திருமணவரி |
| இடைப்பாட்டம் | இடையரிடம் பெறும் வரி |
| குசக்காணம் | குயவரது தொழில்வரி |
| வண்ணாரப்பறை | துணிவெளுப்போர் தரும் வரி |
| தறிப்புடவை | நெசவாளர் வரி |
| தட்டார் பாட்டம் | தட்டார் செலுத்தும் வரி |
| தரகு வரி | தரகு செய்வோரிடம் பெறுவது |
| வட்டி நாழி | வட்டி வாங்குவோர் தரும் வரி |
| மாட்டு இறை | மாடுகளுக்கு விதிக்கப்படுவது |
| நாடு காவல் | நாட்டுக் காவலுக்குரிய வரி |
| உல்கு | சுங்க வரி |
| விற்பிடி | வில்வித்தைப் பயில்வோர் கட்டுவது |
| ஊடு போக்கு | பயிர்களுக்கு ஊடே செய்யும் பயிர்கட்கு விதிப்பது |
| ஓடக் கூலி | ஓடக்காரர் செலுத்த வேண்டியது |
| மாவிறை | அரசனுக்குச் செலுத்துவது |
| மன்றுபாடு | ஊர் விசாரணைப் பொதுமன்றத்திற்குத் தரப்படும் அபராதத் தொகை |
| தீ யெறி | கோயிலில் ஓமம் வளர்த்து தரும் பலிப் பொருளுக்குரிய கட்டணம் |
| கூத்திக்கால் | நாட்டிய மகளிர்க்குரிய திறை. |



○

குறிப்பு :



# தஞ்சையில் காணத்தக்கவை

## *1. அரண்மனை*

தஞ்சை நகரின் மையத்தில், சுற்றிலும் உயர்ந்த மதிற்சுவர்கள் கொண்டு இவ்வரண்மனைக் கட்டடம் அமைந்துள்ளது. இக் கட்டடங்களில் பல, கி. பி. 1550 இல் நாயக்கர் காலத்திலும், மற்றவை பின்பு மராட்டியர் காலத்திலும் கட்டப்பட்டவை ஆகும்.

மாட மாளிகை, கூடகோபுரம் என்னும் உயர்ந்த கட்டடங்கள், பெரிய பெரிய தூண்களைக் கொண்ட அரண்மனை, தர்பார் மண்டபம் முதலான அமைப்புகள், யாவும் இக் கட்டடத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் வழி வந்தவர்களின் குடும்பத்தார். இன்றைக்கும் இவ்வரண்மனையின் ஒரு பகுதியில் வசிக்கின்றனர். மற்ற பாகங்களில் அரசாங்க அலுவலகங்கள் பல இயங்கி வருகின்றன.

## *2. சரபோஜி மன்னர் சரஸ்வதி மஹால் நூலகம்*

சுமார் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட ஓலைப் பிரதிகள், மற்றும் கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய இந்நூலகம் இவ்வரண்மனைக் கட்டடங்களில் ஒன்றில் இயங்கி வருகிறது.

இவ் வோலைப் பிரதிகள் யாவும் இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் எழுதப்பட்டவை.

இந் நூலகத்தினை மத்திய அரசாங்கம் நிர்வகித்து வருகிறது.

ஓலைச் சுவடிகளையும், மற்ற பிரதிகளையும் இரசாயன முறையில் அழியாமல் பாதுகாத்து வருவதுடன் அவற்றைப் பல பிற மொழிகளில் மொழி பெயர்த்து, புத்தகங்களாகவும் வெளியிடப்படுகிறது

உள்நாட்டையும் வெளிநாட்டையும் சேர்ந்த அறிஞர் பலர் இங்குள்ள ஓலைச் சுவடிகளை ஆராய்ச்சி செய்ய அடிக்கடி இங்கு வருகிறார்கள்.

### 3. சிற்பக்கலைக்கூடம்

சரஸ்வதி நூலகத்தின் அருகிலேயே உள்ள மிகப்பெரிய கட்டடத்தில் சிற்பக் கூடம் ஒன்று அமைந்துள்ளது.

தஞ்சையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் சிதறிக்கிடந்த சிற்பங்கள் பல வற்றைத் திரட்டி இக்கலைக் கூடத்தில் கொண்டுவந்து பலரும் பார்த்துப் புகழும் படி, காட்சியாக வைத்திருக்கின்றார்கள்.

இவற்றுடன் அழகிய கலை அம்சம் பொருந்திய செப்புத் திருமேனி பலவும் இக்கலைக் கூடத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

அநேகமாக இங்குள்ள சிற்பங்கள் மற்றும் செப்புத்திருமேனிகள் யாவும் சோழர் காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலைச் சேர்ந்த சிற்பங்களான தாருகா வனத்து முனிபத்தினிகள், பூதகணங்கள் இவற்றுடன் சிவபெருமான் பிக்ஷாடன உருவத்தில் இருக்கும் சிற்பங்கள் இக் கலைக்கூடத்தில் அமைந்த சிறந்த சிற்பக் காட்சிகளில் அடங்கும்.

### 4. சங்கீத மஹால்

கலைக்கூடத்தின் எதிராக அமைந்துள்ள இப் பெரிய கட்டடம் சங்கீத மஹால் என்று அழைக்கப்படுகிறது. நாயக்கர்காலப் பொறியியல் கலை நுணுக்கத் திற்கு இக் கட்டடம் ஒரு சான்றாக விளங்குகிறது. மேடையின் மீது 'செய்யப்படும் கச்சேரியை, ஒலிபெருக்கி இன்றி எல்லோரும் கேட்கும்படியாக இக் கட்டடக்கலை அமைந்துள்ளது.

### 5. ஸ்குவாட்ஸ் சர்ச், சிவகங்கைக்குளம், பூங்கா

சிவகங்கைக் கோட்டைக்குள் அமைந்துள்ள இக் கிறிஸ்துவக் கோயில், இரண்டாம் சரபோஜி மன்னனால் கி. பி. 1779இல் கட்டப்பட்டது.

இதனருகே உள்ள குளம் செவப்ப நாயக்கன் என்ற தஞ்சை நாயக்க மன்னரால் புதுப்பிக்கப்பட்டது.

இதையொட்டி அமைந்துள்ள பூங்கா, இவ்வூர் மக்களுக்குப் பொழுது போக்குக்குச் சிறந்த இடம்.

### 6. தமிழ்ப் பல்கலைக் கழகம்

திருச்சி செல்லும் சாலையில் மருத்துவக் கல்லூரி அருகே இப்புதிய கட்டடம் அமைந்துள்ளது. 1981 ஆம் ஆணடு தொடங்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்து வருகிறது.

# தஞ்சையைச் சுற்றிலும்

***திருக்கண்டியூர்***

இவ்வூரில் பிரம்மசீல கங்கேஸ்வரர் என்ற சிவாலயமும், ஹர்ஷ விமோசனப் பெருமாள் என்ற விஷ்ணு ஆலயமும் அமைந்துள்ளன. அவ்விரண்டு கோயில் களிலும் சோழர்களின் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படுகின்றன.

***கும்பகோணம்***

தஞ்சையிலிருந்து சுமார் 32 கிலோ மீட்டரில் உள்ள இவ்வூர் கோயில்கள் பல நிறைந்த ஊராகும்.

அவற்றில் முக்கியமானவை, சாரங்கபாணி, சக்ரமாணி மற்றும் ராமசாமி முதலான விஷ்ணு கோயில்கள்; நாகேஸ்வரர், கும்பேஸ்வரர் முதலிய சிவ பெருமானின் கோயில்கள் ஆகும்.

இங்குள்ள கோயில்கள் யாவும் சிற்பக் கலைக்கும், கட்டடக்கலைக்கும் சிறந்து விளங்குவதோடல்லாமல், இவ்வூரைப் புண்ணிய பூமியாகவும் ஆக்கியுள்ளன.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை புனித நீராடி மகிழும் மகாமகக் குளம் இவ்வூரின் முக்கிய குளங்களில் ஒன்றாகும்.

திருநாகேஸ்வரம் அல்லது உப்பிலியப்பன் கோயில் போன்ற வைஷ்ணவ ஸ்தலமும், அறுபடை வீடுகளில் ஒன்றான முருகனின் திருக்கோயில் அமைந்த சுவாமிமலை, நாச்சியார் கோயில் முதலிய ஊர்கள் கும்பகோணத்திற்கு அருகி லேயே அமைந்திருக்கின்றன. கும்பகோணத்திலிருந்து இவ்வூர்களுக்குச் சென்று வர நகரப் பேருந்துகள் வசதியாக உள்ளன.

***கல்லணை***

திருவையாற்றிலிருந்து திருச்சி செல்லும் பாதையில் தஞ்சையிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இக் கல்லணை, சங்க காலச் சோழனான கரிகாலன் என்பவனால் கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் காவேரி ஆற்றின் குறுக்கே நீர்ப்பாசன வசதிக்காகக் கட்டப்பட்டது.

இம் மன்னருக்குப் பிறகு, இராஜராஜ சோழன், வீரசோழன் முதலானவரும், ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் இக்கல்லணை உறுதியாகக் கட்டப்பட்டு, தற் போது உள்ள நிலையை அடைந்துள்ளது.

முழுதும் கருங்கற்களாலேயே களிமண்ணைச் சேர்த்துக் கட்டப்பட்ட இக் கல்லணை நேராக அமையாமல் பாம்பு போன்று சற்று வளைவாகக் காட்சி அளிக்கிறது. இது ஒரு சிறந்த சுற்றுலாப் பயண இடமாகும்.

*கங்கைகொண்ட சோழபுரம்*

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் கோயில் இங்குள்ளது. தஞ்சையிலிருந்து 71 கிலோ மீட்டர் தொலைவில் ஜெயங் கொண்டம் அருகே அமைந்துள்ள இவ்வூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தது.

முதலாம் இராஜேந்திரன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான். தன் தந்தையைப் போலவே இவ்வூரில் இவனும் சிவபெருமானுக்கு ஆலயம் ஒன்றை அமைத்தான். இக்கோயிலில் சிற்பம் மற்றும் கட்டட வேலைப்பாடுகள் சிறந்து காணப்படுகின்றன.

*பூம்புகார்*

தஞ்சையிலிருந்து 75 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இக் கடற் கரைப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்படுகிறது.

சங்க காலத்தில் புகழ்வாய்ந்திருந்த இப்பட்டினம் கடல் வாணிபத்திற்கும் பெயர் பெற்றிருந்ததாகச் சிலப்பதிகாரம் என்ற நூலிலிருந்து தெரிகிறது.

இப் பட்டினத்தின் முக்கியப் பகுதியைக் கடல்கொண்டுவிட்டதாகக் கூறப் படுகிறது.

தமிழக அரசு இப்பொழுது, சிலப்பதிகார நிகழ்ச்சிகள் சிலவற்றைப் புடைப்புச் சிற்பங்களாக அமைத்து உருவாக்கியுள்ள எழுநிலைமாடமான பூம்புகார்க் கலைக் கூடம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம், இலஞ்சி மன்றம் முதலான புதிய கட்டடங்களை அமைத்துள்ளது.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை செய்த அகழ்வு ஆராய்ச்சியின் பொழுது இங்குச் சங்க காலத்தைச் சேர்ந்த புத்தவிகாரம் மற்றும் படகுத்துறை முதலியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

*தாராசுரம்*

இது தஞ்சையிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் கும்பகோணத்தின் அருகே உள்ளது.

இங்கு இரண்டாம் இராஜராஜன் (கி. பி. 1146 — 1163) என்பவனால் ஐராவதீஸ்வரர் ஆலயம் என்ற கோயில் கட்டப்பட்டது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இக்கோயில் விமானத்தைச் சுற்றிலும் 63 நாயன்மார்களின் வரலாற்றுப் பகுதிகள் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினால் பராமரிக்கப் படுகிறது.

### திருபுவனை

தஞ்சையிலிருந்து 43 கிலோ மீட்டர் தூரத்தில் கும்பகோணத்தின் அருகே அமைந்துள்ள இவ்வூரில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலக் கதைக் கோயில் ஒன்று உண்டு. இங்குக்கோயில் கொண்ட ஸ்வாமியின் திருநாமம் கம்பக ரேஸ்வரர் என்பதாகும்.

இவ்வூர், பட்டு நெசவுக்குப் பெயர் பெற்ற இடமாகும்.

### திருவையாறு

காவிரி நதிக்கரையில் தஞ்சையிலிருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இவ்வூரில், பஞ்சநதீஸ்வரர் அல்லது ஐயாறப்பன் என்று பெயர் கொண்ட சிவபிரான் கோயில் உள்ளது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜரின் சமாதியும் இந்த ஆற்றங் கரையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்களில் வரும் பகுள பஞ்சமி தினத்தன்று இந்த மகானுக்கு ஆராதனை விழா நடைபெறும். நாடெங்கும் உள்ள சங்கீத மேதைகளும் ரசிகர்களும் அவ்வமயம் இங்கு கூடிச் சங்கீத மழை பொழிந்து இம் மகானை வழிபடுவர்

### தரங்கம்பாடி

இவ்வூர் மயிலாடுதுறையில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் கடற் கரை ஓரமாக அமைந்துள்ளது.

ஊரைச்சுற்றி, பாழடைந்த செங்கல் கோட்டையை இப்பொழுதும் காணலாம். டச்சுக்காரர்களால் கி. பி. 1620 இல் கடற்கரையை ஒட்டிக் கட்டப்பட்டது இக் கோட்டை.

ஆங்கிலேயர்கள் கி. பி. 1825 இல் இதைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டனர். இது ஒரு பழைய துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது.

இங்குச் சிவபெருமான் கோயில் ஒன்றுள்ளது. கடற்கரையை ஒட்டி அமைந் துள்ள இச்சிவன் கோயில் தற்சமயம் கடலால் மிகவும் சேதம் அடைந்துள்ளது.

இரண்டு முக்கிய கிறித்துவக் கோயில்களும் உள்ளன.

### நாகூர்

தஞ்சையிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இவ்வூர் முகம்மதியர் களின் திருத்தலமாகும். இங்குள்ள தர்காவுக்கு இந்துக்களும் தொழுகைக்கு

வருகின்றனர். இங்கு ஆண்டுதோறும் நடக்கும் கந்தூரி என்ற திருவிழா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

### வேளாங்கண்ணி

தஞ்சையிலிருந்து 90 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இவ்வூரில் கிறித்தவர்களின் புகழ்பெற்ற மாதா கோயில் ஒன்று உள்ளது. கடற்கரை ஓரமாக அமைந்துள்ள இக்கோயில் ரோமாபுரி கத்தோலிக்க வகுப்பினர்களின் புனித யாத்திரைத் தலம். கிறித்தவர்கள் அல்லாது பிற மதத்தினரும்கூட இங்கு வழிபாட்டுக்கு வருவர்.

### கோடிக்கரை

இது, திருத்துறைப்பூண்டி வட்டத்தில் அமைந்துள்ள கடற்கரை ஊர், பௌர்ணமி தினத்தன்று இங்குக் கடலில் நீராடுவது சிறப்பாகவும் புனிதமாகவும் கருதப்படுகிறது.

இவ்விடத்தில் வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் ஒன்றும் அமைந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பும் இங்குப் பறவைகள் வந்து கூட்டமாகத் தங்கிச் சென்றிருப்பதை சங்கநூல்கள் தெரிவிக்கின்றமையும் நினைவு கொள்ளத்தக்கதாகும்.

### வேதாரண்யம்

வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, கோடிக்கரைப் பகுதியில் உள்ள ஊர், இவ்வூரின் சிறப்பு என்னவென்றால், இங்கு அகத்திய முனிவர்க்குச் சிவபெருமான் பார்வதியுடன் மணக்கோலத்துடன் காட்சி அளித்தார் என்பதாகும்.

ஆடி மாதமும், தை மாதமும் பௌர்ணமியன்று இங்கு விழா நடத்தப்படும். அப்போது சுற்றுலாப் பயணிகள் பலர் அங்குக் கூடி மகிழ்வர்.

இவ்வூர் இந்திய சுதந்திரப் போராட்ட முக்கியத்துவமும் வாய்ந்தது.

### மனோரா

தஞ்சையிலிருந்து 65கிலோ மீட்டர் தொலைவில் சரபேரந்திரராஜன் பட்டினத்தில் அமைந்துள்ள இவ்வூரில், 30 மீட்டர் உயரமும் 8 நிலைகளும் கொண்ட வெற்றி மாளிகை ஒன்று, சரபோஜி காலத்தில் (1814 ஆம் ஆண்டு) கட்டப்பட்டது. இக் கட்டடத்தின் மேலே இருந்து வங்காள விரிகுடாக் கடலின் இயற்கை அழகைக் கண்டு களிக்கலாம்.

**திருவாரூர்**

இங்கு முக்கிய கல்வெட்டுகள் உடைய தியாகராஜ சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் பசுங்கன்றின் மீது தேர் ஏற்றிய தன் மகனுக்குத் தண்டனையாக அதே தேரை அவன்மீது ஏற்றும்படி உத்தரவிட்ட மனுநீதிச்சோழன் வரலாறு பற்றிய சிற்பங்கள் உள்ளன.

திருவாரூர்த் தேர்த்திருவிழா மிகவும் புகழ்பெற்றது. சங்கீத மும்மூர்த்திகள் முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி, தியாகராஜர் பிறந்த இடம் இதுவே.

பக்தி வளர்க்கும் கோயில்களும் கலைகளும் நிறைந்த தஞ்சையைச் சூழ்ந்த பகுதிகளைக் கண்டு மனம் நிறைவடையலாம்.



## □ துணை நூல்கள் □


1. திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் The colas
2. திரு. சி. சிவராமமூர்த்தி அவர்களின் 'Chola temples'
3. திரு. ஜே. என். சோமசுந்தரம் அவர்களின் 'தஞ்சைப் பெரிய கோயில்' (The great temple of Thanjavur)
4. திரு. கே. வி. சௌந்தரராஜன் அவர்களின் 'சரித்திரக் குறிப்புகள்', அட்டவணை முதலியன. (தஞ்சைப் பெரிய கோயிலில் அமைந்துள்ள கலைக் கூடத்தில் உள்ளபடி)
5. திரு. எல். கே. சீனிவாசன் அவர்களின் 'தஞ்சைப் பெரிய கோயில் பராமரிப்பு.'
6. பி. எஸ். பாலிகா அவ்ர்களின் 'தஞ்சாவூர் ஜில்லா' பற்றிய குறிப்புப் புத்தகம்.
7. திரு. பா. வெங்கட்ராமன் அவர்களின் 'ராஜராஜேஸ்வரம்'
8. பத்மபூஷன் கே. ஆர். சீனிவாசன் அவர்களின் 'தென்னிந்தியக் கோவில்' என்ற புத்தகம் மற்றும் இக்கோயில் பற்றிய அவர்தம் குறிப்புகள்.
9. இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினால் வெளியிடப்பட்டுள்ள 'தென்னிந்தியக் கல்வெட்டுகள்' முதலியன.
10. வரலாற்றில் தஞ்சை — கு. தாமோதரன்.
11. History of Thanjavur — S. Rajavelu
12. மாமன்னன் முதலாம் இராசராசன் — ஒரு பார்வை. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை.
13. இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் — இரா. நாகசாமி
14. பிற்காலச்சோழர் வரலாறு —தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்.




# எமது வெளியீடுகள்

## தொல்பொருள், கல்வெட்டுத்துறை நூல்கள்

| | |
|---|---|
| டாக்டர் மா. இராசமாணிக்கனார் | கல்வெட்டுக்களில் அரசியல் சமயம் சமுதாயம் |
| இராமமூர்த்தி | மாசிமகமும் நீர்வழிபாடும் |
| டாக்டர் கே. வி. இராமன் | தொல்லியல் ஆய்வுகள் |
| முத்து. எத்திராசன் எம். ஏ., | குந்தவையின் கலைச் செல்வங்கள் |
| சி. எம். கணபதி, எம். ஏ., | தமிழக வரலாறும் பண்பாடும் |
| நடன. காசிநாதன் எம். ஏ., | காலச் சுவடுகள்<br>தொல்லியல் கட்டுரைகள்<br>முத்தரையர் |
| அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி | கல்வராயன் மலைமக்கள் |
| ச. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., | திருவோத்தூர் வரலாறு |
| பாகூர் புலவர் சு. குப்புசாமி | பல்லவனும் பராந்தகனும்<br>மலையமான்கள் |
| கொடுமுடி சண்முகப் பிரகதம் | ஏரிப்பாசன வரலாறு |
| பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ். | தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம் |
| வெள்ளையாம்பட்டு சுந்தரம் | கல் சொல்லும் கதைகள் |
| தஞ்சைப் பெரிய கோயில் | ஏ. கே. சேஷாத்திரி எம்.ஏ., |
| புலவர் தாமரைக்கண்ணன் எம். ஏ., | வரலாற்றுக் கருவூலம் |
| டாக்டர் க. த. திருநாவுக்கரசு | இலங்கையில் தமிழ்ப்பண்பாடு |
| டாக்டர் இரா. நாகசாமி | கல்லும் சொல்லும் |
| பேராசிரியர் மா. பசுவலிங்கம் | சங்க கால வஞ்சி |
| இரா. பவுன்துரை, எம். ஏ., | தமிழகப் பாறை ஓவியங்கள் |
| இரா. மதிவாணன், எம். ஏ., | இலெமூரியா முதல் அரப்பா வரை |
| லட்சுமி மூர்த்தி, பி. ஏ., | வரலாற்றில் வளவனூர் |
| பேராசிரியர் கா. ம. வேங்கடராமய்யா | கல்வெட்டுக்களில் தேவார மூவர் |
| புலவர் ந. வேங்கடேசன் | வரலாற்றில் வில்லியனூர்<br>வரலாற்றுச் சின்னங்கள்<br>பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்<br>வரலாற்றில் அரிக்கமேடு<br>கல்வெட்டுகளில் புதுவைமாநில ஊர்ப்பெயர்கள்<br>வரலாற்றில் அரிய செய்திகள்<br>வரலாற்றில் ஆரிய வைசியர் |

## இலக்கியம், வரலாறு சார்ந்த நூல்கள்

| | |
|---|---|
| அறிவுலகின் குருதேவர் [தெ. பொ. மீ.] | பேராசிரியர் மா. ரா. இளங்கோவன் [தொகுப்பு] |
| இத்தாலியில் | தூக்கோவளன் எம். ஏ., பி. எச்டி., |
| ஈயல் - அறிவியல் விளக்கம் | அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி |
| உரைவேந்தர் ஔவை — | தி. நா அறிவுஒளி எம். ஏ., |
| | வித்துவான் ம. வி. இராகவன் |
| எழுத்துலக நாயகி | அரங்க. சீனிவாசனார் |
| கடல் வாணிகமும் தரை வாணிகமும் | புலவர் மு. த. வேலாயுதனார் |
| சாவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும் | அருட்கவி அரங்க. சீனிவாசன் |
| சாதனைப் பூவின் சரித்திர வசந்தம் | டாக்டர் சா. சகத்ரட்சகன் |
| சிந்தனையாளர் இங்கர்சால் பாகம் 1 | ப. செங்குட்டுவன் பி. எஸ்ஸி., பி.டி., |
| ,, ,, பாகம் 2 | |
| ஞானியார் அடிகள் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| தாயகம் தந்த நாயகம் [நீதிபதி வேதநாயகம்] | பேராசிரியர் மது. ச. விமலானந்தம் |
| தாயுமானார் கதை | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| நகைச்சுவை நாவலன் | புலவர் க. அரசுமணி |
| நல்லாசிரியரும் நன்மாணாக்கரும் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| நெஞ்சில் நிறைந்தவர் [கடலூர் கதர் குப்புசாமி] | பேராசிரியர் த. பழமலய் |
| பாரதத்திலகம் மோதிலால் நேரு | புனிதவதி இளங்கோவன் எம். ஏ., பி. டி., |
| பாரதியும் பாரதிதாசனும் | டாக்டர் சா. சகத்ரட்சகன் |
| புத்துலக வழி காட்டிகள் | புலவர் க. அரசுமணி |
| புனித தோமையர் | தூக்கோவளன் எம் ஏ., பி. எச்டி., |
| பெரியார் ஒரு பொருள் முதல்வாதி | ப. செங்குட்டுவன் பி. எஸ்சி., பி. டி., |
| மக்கள் திலகம் (எம். ஜி. ஆர்.) | வித்வான் வே. லட்சுமணன் |
| ராஜநந்திவர்மன் | ,, |
| ம. பொ. சி. படைத்த புதிய தமிழகம் | வெள்ளையாபட்டு சுந்தரம்(தொகுப்பு) |
| வ. உ. சி. கடிதங்கள் | ஆ. ரா. வெங்கடாசலபதி |
| வரலாற்றுக் களஞ்சியம் [புதுவை திருமுடி ந. சேதுராமன் செட்டியார்] | பாகூர் புலவர் சு. குப்புசாமி |
| வாழ்விக்க வந்த வள்ளலார் | டாக்டர் ஔவை. நடராசன் |
| விந்தனும் விமர்சனமும் | மு. பரமசிவம் |
| வேதநாயகர் வாழ்வும் வளமும் | புலவர் க. அரசுமணி |

★

| | |
|---|---|
| இரவீந்திரநாத தாகூரின் | தஞ்சை |
| கீதாஞ்சலி (கவிதை) | கோ. நடராஜபிள்ளை |
| இங்கர்சாலின் உண்மை | நலங்கிள்ளி |
| ,, எவ்வழி நல்வழி | ,, |
| மானுட விடுதலை[இங்கர்சால்] | மு. வளர்மதி |
| மங்கையர் சாதனைகள் | கோகிலா சுந்தரம் |
| சங்க நூல்களின்மீன்கள் | அறிஞர் |
| சங்க நூல்களின் விந்தைப்பூச்சி | பி. எல் சாமி, ஐ.ஏ.எஸ். |
| இலக்கியத்தில் அறிவியல் | |
| இலக்கிய ஆய்வு | |
| சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை | பி. எல். சாமி |
| சங்க நூல்களில் செடி கொடிகள் | ,, |
| ,, மரங்கள் | ,, |
| ,, முருகன் | ,, |
| சங்கப் பாட்டில்பொங்கும் உணர்ச்சி | அறிஞர் அ. வெ. சுப்பிரமணியன் |
| சங்கப் பாட்டில் புதிய பார்வை | ,, |
| அளபெடையும் ஆழ்பொருளும் திருக்குறள் நுண்ணாய்வு | ,, |
| The Bangle and The Javelin | ,, |
| The Maind and Thought of Thiruvalluvar | பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் |
| The Pagent of Tamil Literature | பன்மொழிப்புலவர்தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் |
| கல்விச் சிந்தனைகள் | ,, |
| நாடகக் காப்பியங்கள் | ,, |
| சொல்லாய்வுக் கட்டுரைகள் | பன்மொழிப் புலவர் இரா. மதிவாணன் |
| கல்விக் கட்டுரைகள் | அருள் தந்தை இ. யோ. குழந்தையரசு எம். ஏ., பி. எல்., எம். எட்., |
| | ,, |
| உளவியலும் கல்வியும் | ம. அய்யாசாமி எம். ஏ., பி. எட்., |
| முற்காலத் தமிழ் இதழ்கள் | பேராசிரியர் 'இதழியல்' |
| சிலம்புச்செல்வரின் தலையங்கஇலக்கியம் | மா. ரா. இளங்கோவன் |
| இந்திய இதழ்கள் | ,, |
| இதழியல் நோக்கு | ,, |
| முதல் நாளிதழ்கள் மூன்று | ,, |
| நினைவுப் பயணம் | அரங்க. சீனிவாசன் |
| மனம் ஓர் ஆய்வு | கு. வை. இளங்கோ எம். ஏ., எம். எட்., |
| கம்பனில் சில முத்துக்கள் | முத்து. எத்திராசன் எம்.ஏ., பி.எட்., |
| சிந்தனைக் கதைகள் | புலவர் க. முனிசாமி எம்.ஏ., |
| இங்கர்சால் பேசுகிறார் | ப. செங்குட்டுவன், பி. எஸ்சி., பி.டி., |

★





